பழமையில் வேரூன்றி, புதுமையை வரவேற்கும் பாரதப் பண்பாடு

"சிறந்த அறிஞரும் வாழ்க்கையையே மக்களின் சேவைக்கு அர்ப்பணித்தவரும், மக்களின் அன்புக்குப் பாத்திரமானவரும், சேவையினால் மட்டுமன்றி, தமது தியாகத்தினாலும் இப்பதவிக்கு உயர்ந்தவருமான ஒரு மகா புருஷர் ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார். எவ்வித சலசலப்புமின்றி அவர் தமது பதவியை மக்களின் விருப்பப்படி புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரிடம் ஒப்படைத்தார். அவரும், அடுத்த படியாக உபராஷ்டிரபதி பதவி வகித்தவரே. அவருக்கு இந்த ஆசனம் அளிக்கப்பட்டது.

இவ்விரண்டு தலைவர்களையும் கவனித்தால் இருவரும் சிறந்த அறிஞர்கள். ஒருவரினின்றும் மற்றொருவர் சிறிது வேறுபட்டாலும், இருவரும் மற்ற எல்லோரையும் விட உன்னதப் புகழ் பெற்றவர்கள்.

இந்த நிகழ்ச்சி எனது சிந்தையைத் தூண்டியது. மற்றவர்களும் இவ்வாறு சிந்தித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். கடந்தகாலப் பண்பாட்டுச் சிறப்பையும் வருங்காலச் சிந்தனைத்தெளிவையும் அழகுற இணைப்ப தாகவும் இந்நிகழ்ச்சி அமைகிறது"

பிரதமர் நேரு.

அட்டைப்படம் :

பாரதப் பண்பின் நிலைக்களன்

பாரதத்தின் சீரிய பண்பாட்டிற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் நம் நாட்டின், புதிய ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்.

திரு. ராதாகிருஷ்ணன் சிறந்த அறிஞர்; பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர்; சிறந்த தத்துவ ஞானி; பேராசிரியராகப் பாரெல்லாம் புகழ் பரப்பியவர்; நல்ல எழுத்தாளர்; பிரசித்திபெற்ற பேச்சாளர்.

நல்ல உயரம்; கம்பீரத்தோற்றம்; முதிர்ந்த அறிவும், நிரம்பிய பக்தியும் ஒருங்கே வாய்ந்தவர். அமைதி, அடக்கம், வாய்மை, தூய்மை, இரக்கம் அனைத்தும் ஒருங்கே குடிகொண்டிருக்கும் சீரிய பண்பாளர். இணையிலாத 'தத்துவ மேதை'க்கு ஜனாதிபதி பதவி கிடைத்திருப்பது மெய்ஞ்ஞான மரபு வழி வந்த பாரதப் பண்பாட்டுக்கு மெத்தப் பொருத்தமானதே.

டாக்டர் ராதாகிருஷ்ணன் இப்பொழுது தமிழகத்துடன் இணைந்துள்ள திருத்தணிகையில் பிறந்தவர். டாக்டர் அவர்கள் நம் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பதில் தமிழ் மக்கள் தனி மகிழ்ச்சி கொள்ளலாம். இந்திய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுணர்வுக்கும் இலக்கணமாகத் திகழும் டாக்டர் ராதாகிருஷ்ணன் இந்த நாட்டின் தலையாய தவப் புதல்வர்களில் ஒருவராவார்.

கிராம நலம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும—இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?"

—பாரதியார்

மாடி 7 | ஜூன், 1962 | படி 9

சத்துள்ள உணவுத் திட்டமும் பஞ்சாயத்து ஸ்தாபனங்களும்

விரிவுபடுத்தப்பட்ட சத்துள்ள உணவுத் திட்டம் (Expanded Nutrition Programme) ஒன்றினை தமிழ்நாடு அரசாங்கம் சமீபத்தில் வகுத்து, அத்திட்டம் பற்றிய உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. (இவ்வுத்தரவின் தமிழாக்கச் சுருக்கம் 1962-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கிராம நல இதழ் பகுதி-II-ல் (i)-ம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.)

கிராம மக்கள் சத்துள்ள உணவைத் தயாரித்துப் பயன்படுத்தும் வகையில், அவர்களை ஊக்குவிக்கவும், இந்தத் துறையில் பிறர் கையை எதிர்பாராமல், தன் கையே தனக்குதவி என்ற முறையில் அவர்கள் விளங்கவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களில் உள்ள குழந்தைகளுக்கு சத்துள்ள உணவு அளிக்கப்பட வேண்டும் என்பதே இத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். தேக ஆரோக்கியத்துடன் விளங்கும் குழந்தைகள் நாட்டின் எதிர்கால வளத்திற்கு மிகவும் அவசியம். குழந்தைகள் தேக ஆரோக்கியத்துடன் விளங்க வேண்டுமென்றால், ஊட்டமுள்ள உணவு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். ஊட்டம் தரும் உணவு கிராமப் புறங்களில் உள்ள குழந்தைகளுக்கு அளிக்கப்படும் வகையில் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் பணியாற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும். பழவகைகள், காய் கறிகள், பருப்பு வகைகள் முதலான புரதச் சத்துக்கள் அடங்கிய உணவு வகைகளை கிராம மக்கள் மேலும் அதிகமாக உபயோகித்துப் பயனடையும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களை, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் சம்பந்தப்பட்டவர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு, பயன் தரத் தக்க முறையில் அதைச் செயல் முறையில் நடத்தி வைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். சமுதாய நல்வாழ்வினைத் தங்களுடைய லட்சியமாகக் கொண்டு, பஞ்சாயத்துத் தலைவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுடைய கடமை உணர்ச்சி பெரிதும் பாராட்டற்பாலது.

நல்ல திடத்துடனும், தேக ஆரோக்கியத்துடனும் குழந்தைகள் விளங்கினால் நாட்டின் எதிர்காலம் நல்ல சுபிட்சம் பெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை. அதற்கான வழிவகைகளைக் கண்டு வெற்றியுடன் பணியாற்ற வேண்டியது, மக்களாட்சியின் சின்னங்களாகத் திகழும் பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் மிக முக்கியமான கடமைகளில் ஒன்று என்பதை வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறோம்.

—ஆசிரியர்.

தொடர் கட்டுரை—

வளம் கொழிக்கும் கோவை மாவட்டத்தில் ஆக்கப் பணிகள்

வளரும் சமுதாயம்

பஞ்சாயத்துக்களின் புதுமலர்ச்சி

கண்டதும் கேட்டதும்

'பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஒருவர் காட்டிய உற்சாகத்தின் விளைவாக, பள்ளிக்கூடக் கட்டட அமைப்பின் மாறுதலில் வியக்கத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டது. இதன் விளைவாக, பள்ளிக் கட்டடத்தின் செலவிலும் சிக்கனம் ஏற்பட்டது" என்ற செய்தியை "டைம்ஸ் ஆப் இந்தியா" (Times of India) என்ற பிரபல பத்திரிகை (பம்பாயிலிருந்து வெளி வரும் ஆங்கில தினசரி) சில மாதங்களுக்குமுன் வெளியிட்டது. மைசூர், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் புதிய பஞ்சாயத்து ஆட்சி எவ்வாறு நடைபெறுகிறது என்பதை நேரில் கண்டறியச் சென்ற ஒரு விசேஷ நிருபர் மூன்று தொடர் கட்டுரைகளை அப் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். அவற்றில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த **பெரிய நாயக்கன் பாளையம் பஞ்சாயத்து யூனியனில்** இத்தகைய சிறந்த சாதனை ஏற்பட்டதை விசேஷமாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதைக்கண்ணுற்ற எனக்கு கோவை மாவட்டம் செல்லும் போது, பெரிப நாயக்கன் பாளயம் பஞ்சாயத்து யூனியனின் இந்த சாதனைகளை நேரில் கண்டறிய வேண்டும் என்று அவா எழுந்ததில் வியப்பில்லை அல்லவா!

பெரிய நாயக்கன் பாளையம் :—கல்வித் துறையில் ஒரு கலங்கரை விளக்கம்

"பெரிய நாயக்கன்பாளையம் என்ற பெயர் ஏற்கனவே பல விதங்களிலும் புகழடைந்துள்ளது. கல்வித்துறையில் நம் நாட்டின் பண்புகேற்ற முறையில் மகத்தான காரியங்கள் பல அங்கே நடைப்பெற்று வருவதை வாசகர்கள் அறிவார்கள். பெரிய நாயகசன் பாளையத்தில் இயங்கி வருகிற இராம கிருஷ்ண வித்தியாலயம், ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, சமூகக் கல்வி அமைப்பாளர் பயிற்சி நிலையம், கிராமிய உயர்தரக் கல்லூரி முதலிய பல்வேறு ஸ்தாபனங்கள் கல்வித் துறையில் பல்லாண்டுகளாகச் சிறந்த சேவை செய்து வருகின்றன. தேசிய உணர்ச்சியும், சமயப்பண்பாடும் இணைந்துள்ள அற்புத சூழ்நிலையில் அங்கே கல்வி பயின்ற அனேக மாணவர்கள் பெரிய நாயக்கன் பாளையத்தின் பெருமையை பாரத நாட்டின் பல்வேறுஇடங்களிலும் ஒளிபெறச் செய்து வருகின்றனர்

பஞ்சாயத்து யூனியன் ஏற்பட்டது முதல், இங்கே கல்வியோடு மற்ற துறைகளிலும் புகழ் பெறத்தக்க சாதனைகள் உருவாகி வருகின்றன. புதிய பள்ளிக்கூட கட்டடங்களை அமைப்பதில் **பஞ்சாயத்து யூனியன்** தலைவர் திரு. கே **துரைசாமி** அவர்கள் காட்டியுள்ள உற்சாகம் சிறந்த பலன் அளித்துள்ளது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு தேவையான கட்டடங்களை அமைப்பதில் புதுமுறையைக் கையாண்டு ஒவ்வொரு பள்ளிக்கும் ஆகும் செலவில் பெரும் பகுதியை (9000 ரூபாய் செலவிலிருந்து 4500 ரூபாயாக] இவர் குறைத்துள்ளார். இதில் அவர் புகுத்தியுள்ள புதிய அம்சங்களை எஞ்சினியர்களெல்லாம் ஆராய்ந்து பார்த்து அங்கீகாரம் அளித்திருப்பதோடு, மற்றவர்களும் இந்த முறையினைப் பின்பற்றலாம் என்று சிபாரிசு செய்துள்ளதாக அறிந்தேன். புதிய பஞ்சாயத்து ஆட்சியில் அனுபவ பரிமாற்றத்துக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். (இதைப்பற்றிய படங்களை 24-ம் பக்கம் பார்க்கவும்).

பள்ளிக்கூட கட்டிடம் அமைப்பதோடு இவர் ஆர்வம் நின்று விடவில்லை. பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டத்தை ஒழுங்காக நடைபெறுவதற்கான நிரந்தர ஏற்பாடு செய்யும் துறையில் தக்க வழி காட்டியுள்ளார். பள்ளிக்கூடம் ஒவ்வொன்றுக்கும் சில ஏக்கர் நிலத்தை நன்கொடையாகப் பெற்று, அதில் விளையும் தானியங்களை மதிய உணவுக்குப் பயன் படுத்த அவர் சில இடங்களில் ஏற்பாடுகளைச் செய்து. கண்ணும் கருத்துமாய் கவனித்து வருகிறார். பள்ளிக் குழந்தைகளும், ஆசிரியர்களும் தங்கள் பள்ளியைச் சார்ந்த நிலங்களின் விவசாய வேலைகளில் அதிகப் பொறுப்போடு அக்கரைக் காட்டி வருவதைக் காண முடிந்தது. "ஆத்திச் சூடி இளம் பிறை அணிந்து" என்றுதொடங்கும் பாரதியார் பாடல், இந்த யூனியன் பள்ளிக்கூடங்களிலெல்லாம் பொதுவான கடவுள் வணக்கமாகப் பாடப்படுகிறது.

மாதர்நல வேலைகள்—பொதுநலப் பணிகள்

ஹரிஜனங்களுக்கான வீடுகள் கட்டித் தருதல், குடிநீர் வசதி ஏற்படுத்தல், நூல் நிலையம், ரேடியோ முதலியவைகளைப் பயன் பெற நடத்துதல், பழச் செடிகளை வைத்து வளர்த்தல், மாதர் நல வேலைகளை ஊக்குவித்தல் முதலிய பொது நலப் பணிகள் இங்கே செம்மையான முறையில் நடைபெறுகின்றன. கூட்டுறவு விவசாயப் பண்ணை ஒன்று இந்த யூனியனில் வெற்றிகரமாக நடந்தேறிவருகிறது. மாதர்நலத் துறையில் சிறப்பான

பஞ்சாயத்து திட்டம் ஒன்று இங்கே உருவாகியிருப்பதைப் பற்றி யூனியன் கமிஷனர், திரு. ரிச்சர்ட்ஸ் அவர்கள் விளக்கினார். அதாவது, கைக்குழந்தைகளை வைத்துக்கொண்டுள்ள தா மாரகள் வெளியில் வேலைக்குச் செல்லும் போது, குழந்தைகளை கவனித்துக்கொள்வதற்காக, ஒரு திட்டத்தை இங்கே உருவாக்கி நடத்த முயல்வதாகத் தெரிவித்தார். இங்கே உள்ள கிராமங்கள் பெரும்பாலும், கோவை மாநகருக்கு அருகில் இருப்பதாலும், அங்குள்ள பஞ்சாலைகளிலும், மற்ற தொழிற்சாலைகளிலும் பலருக்கு வேலை வசதி ஏற்பட்டிருப்பதால் வெளியில் சென்று உழைக்கும் தாய்மார்களுக்கு இந்த வசதி மிகவும் பயன்படத் தக்கதாகும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பஞ்சாயத்து யூனியனின் பெண் அங்கத்தினர் விசேஷ அக்கரை செலுத்துவர் என்று எதிர்பார்க்கலாம்.

கடமை யுணர்ச்சியுடன் பணியாற்றுகின்ற பண்பு

பஞ்சாயத்து யூனியன் செய்யவேண்டிய வேலைகள்பற்றிய பட்டியலில் இல்லாத சில காரியங்களையும், இந்த பஞ்சாயத்து யூனியன பொறுப்பாளாகள கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு, நிறைவேற்றியுள்ளனர். வெள்ளப் பெருக்கு வரும்பொழுது அவஸ்தைக்குள்ளாகும் ஒரு கிராமத்தருகில் வெள்ளத் தடுப்புக்கான கரையை எழுப்பி கிராம மக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளனர். ஆனால் இந்த வகையில் உடனடியான நடவடிக்கைமேற்கொண்டு தக்க உதவி புரிந்த பெருமை மாவட்டக் கலெக்டர் திரு. ஜி. இராமச்சந்திரன் I.A.S., அவர்களையே சாரும் என எல்லோரும் தெரிவித்தார்கள். இத்திட்டத்தின் அவசியத்தை எடுத்துக்காட்டி வேண்டுகோள் விடுத்ததைத் தவிர, பஞ்சாயத்து யூனியன் வேறொன்றும் செய்யவில்லை என்று பஞ்சாயத்து யூனியன் தலைவரும் கமிஷனரும் குறிப்பிட்டனர். ஆனால் அந்தக் கிராம மக்களைப் பொறுத்த வரையில் பெருமை யாரைச் சார்ந்தது என்பதை மறந்து இதெல்லாம் புதிய பஞ்சாயத்து ஆட்சியில் விளைந்த நற்பலன் என்று நன்றியுணர்ச்சியுடன் பெருமிதத்தோடு கூறுகின்றனர். அதிகாரிகளும், பொதுஜனத் தலைவர்களும பொறுப்புணர்ச்சியோடு, காலதாமதமில்லாமல் கடமை செய்தால், மக்களின் பாராட்டு கிடைப்பது நிச்சயம் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

கோவை மாவட்டத்தில் உள்ள பவானிசாகர், சத்தியமங்கலம், ஈரோடு ஆகிய பஞ்சாயத்து யூனியன்களை விரிவாகச் சுற்றிப் பார்க்க எனக்கு நேரம் கிடைக்கவில்லை. கிடைத்த ஒரு சில மணி நேரத்தில் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள், கமிஷனர்கள் ஆகியோருடன் நடைமுறைப் பிரச்சினைகளைக் குறித்து அறிந்து கொள்ள முயன்றேன். குறிப்பாக, பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்களும், துணைத் தலைவர்களும் புதிய பஞ்சாயத்து ஆட்சியின் பொறுப்புகளை உணர்ந்திருப்பதோடு, பொது நலத் தொண்டாற்றுவதில் அதிக உற்சாகம் காட்டி வருவதை உணர முடிந்தது. சமீபத்தில் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து யூனியன் தலைவர், பஞ்சாயத்து யூனியன் வேலைகளே தம் மனதிற்கு மிகவும் பிடித்தமானவை என்பதாக, உள்ளன்புடன் குறிப்பிட்டார். ஏனெனில், கிராம வாசிகளுக்கு உடனடியாக சேவை புரிவதில் பஞ்சாயத்து யூனியன் ஆட்சி உடனடியான பயனைக் காணமுடியும் என்பது அவர் திடமான நம்பிக்கை.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கும், தலைவர்களுக்கும் பரஸ்பர ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் இருந்து வருவதால் இந்த பிரதேசங்களில் சிறந்த சாதனைகள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு கிராமங்களுக்கும் என் சுற்றுப் பயணமதின்போது செல்ல இயலாத காரணத்தால் இந்த பஞ்சாயத்து யூனியனின் சாதனைகள் பற்றிய படங்களை விரிவாக எடுக்க ஏற்பாடு செய்ய இயலவில்லை.

பவானிசாகர் பஞ்சாயத்து யூனியனில் பல்வேறு பயிற்சி நிலையங்கள் இருப்பதால், அவற்றுடன் இணைந்த முறையில் திட்டங்கள் நடைபெறச் சிறந்த வாய்ப்பு உள்ளது. திருச்சிராப்பள்ளி ரேடியோ நிலையத்தார் நிகழ்த்திவரும் இராம நிகழ்ச்சிகளைக் கேட்டு அவற்றைப்பற்றிய விமரிசனங்களைத் தொகுக்கும் ஆராய்ச்சி வேலை இங்குள்ள பயிற்சி நிலையங்கள் மேற்கொள்ளலாம் என்ற ஆலோசனை கூறப்பட்டது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களுள் ரசாயன உர வினியோக வேலை பஞ்சாயத்துக்கள் மூலம் வெற்றிகரமாக நடைபெறுவதை பவானிசாகர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. என். ராமசாமி கவுண்டர் விளக்கிக் கூறினார்.

குறைகளையும் உணர்தல் அவசியம்

சத்தியமங்கலத்தில் திரு. முத்துவேலப்ப கவுண்டர் எம்.எல்.ஏ.. ஒரு முக்கியவிஷயத்தைபபற்றி உணர்ச்சிததும்ப விளக்கினார். பஞ்சாயத்து யூனியன் ஆட்சிக்கு அந்த விஷயம் நேரடியாக சம்பந்தப்பட்டதல்ல என்பதை நான் எடுத்துக் காட்டினேன். ஆயினும் எதிர்கால இளைஞர்களின் நல்வாழ்வைப் பொறுத்தமட்டில் அது முக்கியமான பிரச்சினையேயாகும். அதாவது, பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்துள்ள சிறிய நகரங்களில் 'இளைஞர் கிளப்புகள், என்ற பெயரால், சூதாட்ட ஸ்தாபனங்கள் பல நடைபெற்று வருவதாக அவர் கூறினார். அநேக இளைஞர்களின் நேரமும், பணமும் இத்தகைய சூதாட்டங்களினால் இங்கே விணுவதை விரிவாக விளக்கினார். மத்திய தரக் குடும்பங்கள் பல இவற்றால் சீரழியும் நிலை எதிர்காலத்தில் ஏற்படும் என்று வருத்தத்தோடு குறிப்பிட்டார். இளைஞர்களிடையே உள்ள அதிகப்படியான உற்சாகத்தைத் தவறான துறைகளில் துஷ்பிரயோகப்படுத்தும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை அவர் வன்மையாகக் கண்டித்தார். தமிழ் நாட்டின் பல்வேறிடங்களில், இளைஞர்கள் பஞ்சாயத்து ஆட்சியின்வளர்ச்சிக்கான "சமுதாயக் கல்வி" இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு, சிறந்த பணியாற்றி வருவதை நான் எடுத்துக் கூறினேன். நாடகம், விளையாட்டுப் போட்டிகள் கருத்தரங்குகள், சாரணர் இயக்கம், உல்லாசப் பயணங்கள் இளைஞர் விவசாய சங்கங்கள் முதலியவற்றை ஏற்பாடு செய்ய சமுதாய நலத் திட்டத்தின்கீழ் வசதிகள் செய்யப்பட்டிருப்பதை நினைவூட்டி, அவற்றை மேலும் தீவிரமான முறையில் திட்டமிட்டுச் செயலாற்றலாம் என்றும், புதிய பஞ்சாயத்து ஆட்சியில் இதற்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன என்பதையும் குறிப்பிட்டேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

கவின் மிகு கபிலர்மலை

(திரு. மி. செல்வராஜ், கிராமசேவக், கெலமங்கலம்)

[ஆக்கப்பணி பல புரிந்து வரும் பஞ்சாயத்துக்களைப் பற்றி "கிராமநல"த்தில் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டு வருவதை வாசகர்கள் கவனித்திருக்கலாம். தமிழகத்திலே ஏற்பட்டுள்ள கிராமிய மறுமலர்ச்சியின் எடுத்துக்காட்டுகளாக பல பஞ்சாயத்துக்கள் திகழ்கின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள 'கபிலர்மலை பஞ்சாயத்து ஆற்றியுள்ள பணிகளைப் பற்றிய விவரங்களை இக்கட்டுரையில் காணலாம். —ஆசிரியர்.]

வரலாற்றுச் சிறப்பு

தமிழகத்துத் தனிப்பெரும் குறுநில மன்னனும், பறம்பு மலைநாட்டு ஆண்ட அரிய கொடை வள்ளலும், முல்லைக்குத் தேர்ந்த உபகாரியுமான வேழ்பாரியின் அவைப்புலவரும், ஆத்மீக அருமை அன்பரும், "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்" என்ற அருமையானப் பாடலின் மூலம் பாரிமகளிர்க்கும், பாரிலுள்ளவர்க்கும் பாரி மன்னனின் கொடைச் சிறப்பினையும் வரையாது வழங்கிய அவனது வள்ளல் தன்மையினையும், பறம்பு மலையின் பெரும் புகழினையும் பாருக்குப் பறை சாற்றிப் பாடிய பாவலர் கபிலர், தனது வாழ்க்கையின் இறுதி அத்தியாயத்தை இங்கேயே-இந்த மலையிலேயே- கழித்தார் என்பதற்காக இம்மலை கபிலர் மலை என்ற சிறப்புப் பெயரைப் பெற்றதாக வரலாறு கூறுகின்றது. இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க கவின்மிகு கபிலர்மலை, கொங்கு நாட்டின் புனித நதியாகிய திலக நதியாம் காவிரி நதிக்குக் கிழக்கேயுள்ள கோலமிகு சேலம் மாவட்டத்தைச சேர்ந்த, நாமக்கல் தாலுகாவில் தனிச் சிறப்புடையதோர் பெரும் பகுதியாகவேத் திகழ்ந்து வருகிறது. இவ்வூர், நாமக்கல் என்ற, அழகிய மலைக்கோட்டையைச் சுற்றி அமைந்துள்ள ஊரிலிருந்து தெற்கே 18 கல் தொலைவில் அமைந்துள்ளது.

கபிலர்மலை என்ற இவ்வூர், கபிலர்மலைப் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 22 பஞ்சாயத்துக்களில் ஒன்றான "கபிலக் குறிச்சி" என்ற பஞ்சாயத்தைச் சார்ந்த ஒரு சிறிய ஊராகும் இவ்வூர். ஏறத்தாழ 350 அடி உயரத்தில் மலைக்கோட்டை போல் அமைந்திருக்கும் அழகிய மலையைச் சுற்றி சுமார் 2,644 ஏக்கர் சுற்றளவில் பாவியிருக்கிறது பெரிய கற்களை ஒன்றன்மீது ஒன்றாக, ஒப்புடனே அடுக்கி வைத்தாற் போன்று இயற்கையிலே அமைந்து காட்சியளிக்கின்ற இக் கற்கோட்டையாம் கபிலர் மலையின் மேலே. குறிஞ்சி நிலக்கடவுள்—தமிழகத்துத் தனிப்பெரும் இறைவன் முருகனுக்குக் கோயில் எழுப்பி இருக்கின்றனர், இவ்வூர் பழங்குடி மக்கள் !

ஊரமைப்பும் உயரிய பணியும்

அனேக ஆண்டுகளாகப் பஞ்சாயத்துக் கிராமமாக மாற்றி அமைக்கப்படாமல் இருந்த இவ்வூர், 1957-ம் ஆண்டு அக்டோபர் மாதம், கபிலர் மலை, கபிலக்குறிச்சி, வேட்டுவம்பாளையம், கறுக்கம் பாளையம், இாங்கம் பாளையம் ஆகியக் குக்கிராமங்களைச் சேர்த்து கபிலக் குறிசசிப் பஞ்சாயத்தாக மாற்றி அமைக்கப்பட ஊராண்மைக் கழகத்திற்குட்பட்டக் கிராமமாக மாறிற்று. அதன்படி, இவ்வூர் மக்களால் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. கே. இரத்தினவேல் என்பவர் பஞ்சாயததுத் தலைவராகப் பணியேற்றார். இவருடன் 14 பஞ்சாயத்து உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கபிலர்மலை என்ற இவ்வூர் ஊரமைப்பில் 2,644.74 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. இங்கே 2 700 மக்கள் வாழ்கின்றனர். இங்கே 1 100 குடும்பங்கள் இருக்கின்றன. இதில் 250 குடும்பங்கள் அரிசனக் குடும்பங்களாகும்.

கபிலக் குறிச்சி ரெவன்யூ கிராமத்தைச் சேர்ந்த, கபிலர் மலை எனும் இவ்வூர், வட்டாரத்தின் தலைமையிடமாகத் திகழ்ந்து வருகின்றது இது ஒரு சிறிய பஞ்சாயத்து எனினும், இதரப் பஞ்சாயத்துக்களைப் போல் அல்லாமல், தனக்கெனத் தனி வழி வகுத்து, வளமற்றப் பகுதியை வளமாக்கும் வான் புகழ் பெற்றப பெருமைககுரிய பெரும் பதியாகத் திகழ்கிறது ! இவ்வூரை கவின் மிகு மாதிரி கிராமமாக் உருவாக்க வேண்டும் என்றும், மற்றவர் வியக்க இவ்வூரை மாறறியமைக்க வேண்டும் எனறும் மக்கள் எடுத்துக்கொண்ட மகத்தான முயற்சிகளும். சீரிய சாதனைகளும் பலனற்றுப் போய்விடவில்லை என்று திட்டமாகக் கூற முடியும். உழைக்கும் ஊக்கமும், செயலாற்றும் செம்மை உள்ளமும் கொண்ட இவ்வூர் மக்கள், தங்கள் ஊரை உன்னதமான நிலையில் உருவாக்க வேண்டுமென்று உள்ள உறுதியோடு எடுத்துக் கொண்ட ஒவ்வொரு முயற்சியும் வீண் போகவில்லை !

வட்டார அபிவிருத்தித் திட்டம்

நாமக்கல் தாலுகாவிலேயே மிக்வும் பிற்போக்கான இந்தக் கபிலர் மலை வட்டாரத்தில், வறட்சி நீக்கி மறுமலர்ச்சிதனைச் தோற்றுவிக்க வேண்டும் என்றும், வளமற்றப் பகுதியை வளம் கொழிக்கும் பகுதியாக மாற்றி அமைக்க வேண்டும் என்றும் எண்ணிய நமது அரசாங்கம், இங்கே வட்டார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், வட்டார வளர்ச்சி பனிமனை ஒன்றையும் ஆரம்பித்து வைத்துள்ளது. அதன்படி 1960–ம் ஆண்டு டிசம்பர் 3-ம் நாள் தமிழ் நாடு மின்துறை அமைச்சர் உயர் திரு. வி. இராமையா அவர்களால் பூர்வாங்க விஸ்தரிப்பு வட்டாரமாக (Pre-Extension Block, ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த அபிவிருத்தித் திட்டம், அண்ணல் காந்திஜி அவர்களின் கூற்றுப்படி,, 'கிராம சுயராஜ்ய' அடிப்படையில்

1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் நாள் "பஞ்சாயத்து யூனியன் மன்றம்" என்று மாற்றி அமைக்கப் பட்டுள்ளது.

கனவு நனவாகிறது

"வட்டார வளர்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப் பட்டால் நமது வாட்டம் தீரும் கட்டத்தை நாம் அடைந்து விடலாம்" என்று மக்கள் நீண்ட நாட்களாகக் கண்டு வந்த கனவு நனவாக, கொண்டிருந்த எண்ணம் வெற்றி பெற கபிலர் மலைப் பஞ்சாயத்து, மக்களின் துயர் துடைக்கும் பணியிலே ஈடுபட்டுப் பல நன்மைகளைச் செய்து வருகின்றது.

அரிசன முன்னேற்றம்

அரிசன மக்களின் முன்றேத்திற்காகக் கபிலர்மலைப் பஞ்சாயத்து எடுத்துக் கொள்ளும் அரிய முயற்சிகள் அனைத்தும் வரவேற்கத் தக்கது! அரிசன மக்களுக்கு அனேக நன்மைகளைச் செய்து தரவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு, அவர்களுக்கு சகல வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற இலட்சியம் ஒன்றையே உயர்வாகக் கொண்டு, பலன் தரும் பல சீர்திருத்த வேலைகளையும்; அரிய பல பணிகளையும் சிறந்த முறையில் செய்து கொடுத்திருக்கின்றது: இன்னும் செய்யக் காத்திருக்கின்றது.

அரிசனமக்களுக்குக் குடிதண்ணீர் வசதிகள் செய்து தரும் எண்ணத்தோடு இப்பஞ்சாயத்து பல முயற்சிகள் எடுத்து, கபிலக்குறிச்சியில் இரண்டு புதிய குடிதண்ணீர் கிணறுகளையும், கபிலக்குறிச்சியை அடுத்துள்ள கறுக்கம்பாளையத்தில் ஒரு குடிதண்ணீர் கிணறும், அதை அடுத்து இரங்கம்பாளையத்தில் ஒரு குடி தண்ணீர் கிணறுமாக நான்கு குடிதண்ணீர் கிணறுகளை அரசாங்க உதவி பெற்று அரிசன மக்களுக்கு வெட்டிக் கொடுத்திருக்கிறது.

அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும், அவர்களுக்கு இதுவன்ன பல முன்னேற்றங்களைச் செய்து தரவும் காத்துக் கொண்டிருக்கும் கபிலர்மலைப் பஞ்சாயத்தை உண்மையிலேயே 'சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்து' என்று நெஞ்சாரக் கூறலாம்!

அறியாமை இருள் அகல....

கபிலர் மலையில் பஞ்சாயத்து யூனியன் உயர்தர ஆரம்பப் பாடசாலை ஒன்றுள்ளது. இதைத் தவிர கபிலர்மலையின் அருகே இருக்கும் வேட்டுவப் பாளையத்திலும் ஒரு ஆரம்பப் பள்ளி இருக்கின்றது. இங்குள்ள மக்கள் தங்கள் செல்வங்களை இப்பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். இவ்விரு பள்ளிகளிலும் சாதிமத பேதமற்ற சமத்துவ முறையில் ஆண்களும் பெண்களும், அரிசன மாணவர்களும் சரிநிகர் சமமாக இருந்து எழுத்தறிவு பெறுகின்றனர். பள்ளி மாணவர்களுக்கு இலவச மதிய உணவும் வழங்கப் படுகிறது.

ஆரம்பக் கல்வியை முடித்துவிட்டு, உயர்நிலைக் கல்வி பயிலும் நிலையில் இருக்கின்ற இங்குள்ள மாணவர்கள், உள்ளூரில் உயர்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தால் பலமைல்கள் நடந்து—பாண்டமங்கலம், பொத்தனூர் வேலூர் போன்ற ஊர்களுக்குச் சென்று—கல்வி வசதி பெற வேண்டியிருக்கின்றது. இக்குறையினைப் போக்க விரைவில் உயர்நிலைப் பள்ளி ஒன்றைக் கபிலர்மலையில் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு வேண்டிய ஏற்பாடுகளை இப்போதிருந்தே இப்பஞ்சாயத்து கவனித்து வருகிறது.

திட்டத்தின் உதவியோடு....

அரசாங்க உதவிபெற்று இவ்வூரில் இன்னும் பல சீர்திருத்த வேலைகளைச் செய்யும் நிலையில் இப்பஞ்சாயத்து இருக்கிறது. அதன்படி இங்கே மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி, மின்சார வசதி ஆகியவைகளை உடனே கவனிக்கும் பொறுப்புகளை பொறுப்புணர்ச்சியுடன் இப்பஞ்சாயத்து ஏற்றிருக்கிறது.

நல்ல காரியத்திற்குப் பயன்படும் செல்வம்

பேரறிவாளர்களுடைய செல்வம், நடுவூரில் உள்ள நீர்க்கேணிப் போல பயன் அளிக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறியதுபோல, இங்குள்ள மக்கள் பொதுப்பணிக்கெனப் பொருளுதவி செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கபிலர்மலையில், தெருவெங்கும் குழாய்கள் அமைத்து, பெரிய நீர்த்தேக்கக் கட்டிடம் (over head tank) ஒன்றை ஊர் நடுவே அமைத்து, இதிலிருந்து தண்ணீரை குழாய்கள் மூலம் கொண்டு வந்து தண்ணீர் வசதி செய்து கொடுக்க ரூ. 13,800–செலவில் இப்பஞ்சாயத்து நிறைவேற்ற இருக்கும் இந்த நல்ல திட்டத்திற்கு, நல்லாதரவு தருகின்ற வகையில் கபிலர்மலை கன்னிகாபரமேஸ்வரி மடத்தின் நிர்வாகஸ்தர்கள், மடத்திற்கு சொந்தமான ரூ. 2,000 மதிப்புள்ள குடிதண்ணீர் கிணறு ஒன்றைத் தானமாகத் தந்துள்ளனர். இந்தக் கிணற்றின் அருகே தான் மேல்மட்ட நீர்நிலைத் தொட்டி (over head tank) கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

"செய்யும் தொழில் அனைத்தும்...."

"செய்யுந் தொழில் அனைத்தும் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை; என்ற பைந்தமிழ்ப் புலவரின் கூற்றுக்கு இலக்கணம் வகுத்தாற்போல், இங்குள்ள மக்கள் முக்கியமாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள், அதிகாலையில் வானில் ஆதவன் எழும்புவதற்கு முன்னெழும்பி, "பாவடி; (பாவு தோய்க்கும் தனி இடமான அங்கவடி) யில், பாவையர்களுடன் பாடி மகிழ்ந்து பாவாற்றி, பின்பு கைத்தறிகள் மூலம் நெசவு செய்து அழகிய ஆடைகளை உற்பத்தி செய்து ஊதியம் அடைகிறார்கள். தவிர இந்த நெசவாளர்கள் கபிலர்மலையில் உள்ள இரண்டு கைத்தறி நெசவாளர்கள் சங்கத்தோடும் தொடர்பு வைத்துக்கொண்டு, தங்கள் தொழிலுக்கு வேண்டிய நூல்களைக் கொள்ளவும், கொண்ட நூலை ஆடையாக மாற்றி கொடுக்கவுமாகத் தங்கள் தொழில் வளத்தைப் பெருக்கி வருகின்றனர்.

(13-ம் பக்கம் பார்க்க)

மெட்ரிக் எடைகளும் அளவுகளும்

[நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, புதிய புதிய சீர்திருத்தங்கள் பல செய்யப்பட்டுள்ளன. நாட்டின் தேவையையும், மக்களின் மனநிலையையும் கருத்தில் கொண்டு, திட்டவட்டமான முறையில், மிகவும் பொறுமையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் புதிய சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டுள்ளன. அவைகளில் மிகவும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது—எடைமுறைகளில் புகுத்தப்பட்டுள்ள புதிய சீர்திருத்தம். மெட்ரிக்முறை எளியது ; ஒரே சீரானது ; சுலபமாகப் புரியக்கூடியது—இக்கட்டுரை மெட்ரிக்முறை பற்றித் தெளிவாக விளக்குகிறது—ஆசிரியர்.]

நம் நாட்டில் இன்று பல வகையான எடைகளும், அளவுகளும் புழக்கத்திலிருக்கின்றன. நாட்டில் உள்ள அளவை முறைகளைக் கண்டறிவதற்காக மாதிரி சர்வேயின் பயனாக பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 1,100 கிராமங்களில் நிறுவை முறைகள் மாத்திரம் 143 இருப்பதாகத் தெரிய வந்தது. மணங்கில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட ரகங்கள். இந்த மணங்குகளின் அளவு 280 தோலாவிலிருந்து 8,300 தோலா வரை, பலவிதமாக இருந்தன. அதேபோல் சேரின் ஸ்டான்டர்டு அளவு 80 தோலாவாக இருக்கும்போது, 8 தோலா முதல் 100 தோலா வரை உள்ள பலவேறு சேர்கள் உள்ளன. இதனால் நாட்டில் வாணிபத்தில் மிகுந்த குழப்பங்கள் இருந்து வருகின்றன என்று சொன்னால் மிகையாகாது. பழக்க வழக்கத்தில் பொது ஜனங்கள் இதைத் தெரிந்து கொள்ள வில்லையென்றால் அவர்கள் குறிப்பாக கிராமவாசிகள். தாங்கள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை. தங்களுடைய விளைபொருள்கள் எந்த எடை அளவில் வாங்கப்படுகின்றன, வியாபாரிகளால் அவை எந்த எடை அளவு முறையில் விற்கப்படுகின்றன என்ற விவரம் எழுத்தறிவு குறைந்த கிராமவாசிகளுக்கு இன்னும் சரிவரத் தெரியாது. பல்வேறு எடை, அளவுகள் நாட்டில் இருப்பதல்லா, வியாபாரத்தில் தாறுமாறான நிலையும் முரண்பாடுகளும், தவறான பழக்கங்களும் அதிகரிக்க எதுவாகின்றது. இதனால் உற்பத்தியாளர்கள் நேர்மையற்ற தரகர்களால் ஏமாற்றப்படலாம். சுதந்திரம் கிடைத்தபின் நமது அரசாங்கத்தார் தீர ஆலோசித்து மெட்ரிக் முறையைக் கையாளத்தீர்மானித்துள்ளனர். இதன் அடிப்படை அம்சம் கவனிக்கத் தக்கது. இந்த முறையில் நீட்டல் அளவையின் அலகுக்கு மீட்டர் என்று பெயர். ஆகையால்தான் இந்த முறை மெட்ரிக் முறை எனப் பெயர் பெற்றது. பிரெஞ்சு நாட்டில் சேவர் என்ற இடத்தில் அகில உலக அளவுகள் எடை பீராவில் இந்த எற்பாடு பாதுகாத்து வைக்கப்பட்டு வருகிறது. மெட்ரிக் முறையில் தசாம்ச முறை சுலபமாகக் கையாளப்படுகிறது. பத்துப் பத்தாக அமைவது இந்தக் கணக்கீட்டின் முக்கிய அம்சமாகும். பத்துக்களின் பெருக்கலாகவே அளவுகள் உள்ளன. எனவே இன்னும் கொஞ்ச காலத்தில் பெருக்கல், வகுத்தல், கூட்டல், கழித்தல் ஆகிய கணக்குகள் ஒரு பெரிய பிரச்னையாக இல்லாமல் மிகச் சுலபமாக ஆகிவிடும். கணக்கைக் கண்டு நமது குழந்தைகள் கதிகலங்க வேண்டியதில்லை.

புதிய முறையல்ல

நம் நாட்டு முறையைக் கையாளாது ஏன் இந்தப் புதிய முறை என்று சிலருக்கு சந்தேகம் ஏற்படலாம். ஆனால் நம் நாட்டிற்கு இது புதிய முறையல்ல. நம் நாட்டில் பண்டைய நாளில் கையாளப்பட்ட முறைதான். சுன்னம், சுழி என்றழைக்கப்படும் பூஜ்ஜியம் நம் மூதாதையர்கள் சிறந்த கண்டு பிடிப்பாகும். இந்த அமைப்பின் சாயலை உடையதுதான் பூஜ்ஜிய முறை. நம் முன்னோர்களால் கண்டுபிடிக்கப்பட்டு உலகுக்கு அளிக்கப்பட்டது. ஆனால் யார் கண்டு பிடித்தார்கள் என்று நம் சரித்திரம் கூறவில்லை. ஆனால் இப்பொழுது உலகில் ஏற்கனவே 85 சதவீதம் பகுதிகளில் மெட்ரிக் முறை பரவியுள்ளது. ஆங்கிலம் பேசும் நாடுகளும், ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் உள்ளநாடுகளும்தான் இம்முறையைக் கையாளவில்லை. இம்முறை முன்பு கையாளாமல் போனதற்குக் காரணம் இந்தியாவிலுள்ள நமது முன்னோர்கள் ஆங்கிலம் முறையினைக் கையாளக் கட்டாயப் படுத்தப்பட்டதுயாகும். நாடு விடுதலையடைந்த பின்புதான் இம்முறையைக் கையாள நமக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாளடைவில் புதியமுறை புகுத்தப்படல்

இந்திய அரசாங்கம் 1956-ம் ஆண்டு எடை அளவு அமுல் சட்டம் என்ற ஒரு சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. ஆனால் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவது மாநிலங்களின் பொறுப்பு. எனவே தமிழ் நாடு அரசினர் தனிச் சட்டம் ஒன்றை 1958-ம் ஆண்டில் நிறைவேற்றியுள்ளார்கள். நம் மாநிலத்தில் சென்னை வடஆர்க்காடு தென்ஆர்க்காடு செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் 1-10-58 முதல் இவ்வளவுகளில் எடை முறை மட்டும் கொண்டு வரப்பட்டது. பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு இது 1-10-60-ல் அமுலாக்கப்பட்டது. நம் மாநிலத்தில் மற்ற மாவட்டங்களில் மெட்ரிக் எடை

அளவுகள் 1-4-60 முதல் பழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பின் 1962-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் கட்டாயமாக அமுலாக்கப்படவிருக்கிறது இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, பாரதம் முழுவதிலும் 1-4-62-ந் தேதி முதல் மெட்ரிக் எடை முறைகள் கட்டாய அமுலுக்குக் கொண்டு வரப்படும். அதாவது இரண்டு வருஷங்களாக பழைய எடைகள்—குறிப்பாக சேர், வீசை, தோலா, ராத்தல், குண்டு என்ற எடைகள்—மெட்ரிக் எடைகளாகிய கிராம், கிலோகிராம், க்விண்டல் ஆகிய இரண்டு முறைகளும் 1-4-60 முதல் வியாபார ஸ்தலங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த இடைக்காலத்தில், வியாபாரிகளும் மக்களும் இந்த எடைகளின் மாற்று விவரங்களை பழக்கத்தில் தெரிந்து கொள்ள வேண்டுமென்று தான் இது அனுமதிக்கப்பட்டுள்ளது. முன்னால் உபயோகித்த வந்த வீசை, பலம், ராத்தல், முதலிய எடைகளை மனதிலிருந்து அகற்றவேண்டுமென்றால் சிறிது காலத்திற்காவது இவைகளுக்கும் புதிய மெட்ரிக் எடைகளுக்கும் உள்ள தொடர்பை தெரிந்து கொள்வதற்குத்தான் மாற்று பட்டியல்கள் கொடுக்கப்படுகின்றன. அவை நிரந்தரமான உபயோகத்திற்கல்ல. மக்கள் மெட்ரிக் எடைகளையும் அளவைகளையும் புரிந்துகொண்ட பிறகு அவை தேவையில்லை. 1-4-62-க்கு பிறகு மெட்ரிக் முறையில் அல்லாத படிக்கற்களையோ, திராசுகளையோகொண்டு வியாபாரம் செய்வது சட்ட விரோதமாகும். சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் 1-4-62 முதல் முகத்தளவு முறை கட்டாய அமுலாக்கப்படும். முகத்தலளவு முறைகள் 1-10-61-ல் சேலம், தஞ்சாவூர், இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி முதலிய மாவட்டங்களில் பழக்கத்திற்குக்கொண்டு வரப்பட்டு, ஒரு வருட இடைக் காலத்திற்குப் பிறகு 1-10-62 முதல் கட்டாயமாக அமுலாக்கப்படவிருக்கிறது. இதர மாவட்டங்களில் 1-4-63 முதல் முகத்தலளவு முறை கட்டாயமாக அமுலுக்கு வருகிறது. இதேபோல் நீட்டலளவையும் 1-10-62 முதல் தமிழ்நாடு முழுதிலும் அமுலாக்கப்படவிருக்கிறது. ஆதலால் பழைய எடைகளையும், அளவைகளையும், புதிய எடைகளையும் சேர்த்துப் பழக அரசாங்கம் போதிய அவகாசம் கொடுத்திருக்கிறது என்று புலனாகும்.

மாற்றுப் பட்டியல்கள்

மெட்ரிக் முறை அட்டவணைகளும், மாற்றுப் பட்டியல்களும் இலாகாவிலிருந்து வியாபாரிகளுக்கு வழங்கப்படுகின்றன. மாற்றுப் பட்டியல்கள் முதலில் சற்று கஷ்டமானதாகயிருந்த போதிலும், முற்றிலும் மெட்ரிக் முறையைக் கையாள ஆரம்பித்த பிறகு மெட்ரிக் முறை மிக எளிதாகி விடும். நம் நாணய முறையே இதற்குச் சான்றாகும். இது சுலபமாக புரிந்து கொள்ளக் கூடியது. நம் பொறுமையைச் சோதிக்கக் கூடியதாக முதலில் தோன்றலாம். நீண்ட காலமாக ஊறிப்போன வழக்கங்களை மாற்றும்பொழுது கஷ்டம் தோன்றுவது இயல்புதான். இதில் தான் மக்கள் ஒத்துழைப்பை அரசாங்கம் நாடுகிறது.

ஆனால் அன்றாட புழக்கத்தில் இருக்கும் அளவுக்கு மெட்ரிக் முறையில் எடைக்குக் கிலோகிராமும், முகத்தலளவுக்கு லிட்டரும், நீட்டலளவைக்கு மீட்டரும் அலகுகளாக விளங்குகின்றன. இவைகளை ஞாபக மூட்டிக் கொள்வது முதல் படியாகும். அதன் பிறகு கடைகளில் உள்ள மாற்றுப் பட்டியல்களை பார்த்தால் எளிதாக விளங்கிவிடும். இலாகாவைப் பொருத்த வரை இரண்டு முக்கியமான கடமைகள் இருக்கின்றன. (1) மக்களிடையே புழக்கத்திலிருக்கும் எடை எதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதோ அந்த மாதிரி அளவு துல்லியமானதாக வைத்தல் வேண்டும். (2) வியாபாரத் துறையில் உள்ள எடை அளவுகள் மீண்டும் சோதித்தரியப்படல் வேண்டும். இவை இரண்டையும் சரிவரக் கவனிக்க அரசினர் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மாதிரி அளவையும், பாதுகாத்து வைக்க அலுவலகத்தையும் ஏற்படுத்தியுள்ளனர்.

ஏப்ரல் முதல் மெட்ரிக் எடைகள்

கட்டாய அமுலுக்கு வருவதால் அவைகளைப்பற்றி மேற்கொண்டு சில விளக்கங்கள் தருவது அவசியமாகும். மெட்ரிக் எடைகளில் அனேக விதங்கள் இருக்கின்றன.

(1) வார்ப்பட இரும்பு எடைகள்

மளிகைச் சாமான், தின்பண்டங்கள், காய்கறிகள் பழங்கள், வாசனைப் பொருள்கள், பருத்தி, தேயிலை, காபி, எண்ணெய் முதலியவைகளுக்குப் பயன்படக்கூடிய அளவுகள் வார்ப்பிரும்பினால் செய்யப்பட்டுள்ளன. இவை 50 கிலோ கிராமிலிருந்து 100 கிராம் வரையிலுள்ளன. இதற்குக் குறைவான அளவுக்குப் பித்தளை எடைகள் உபயோகமாகும். இரும்பு எடைகள் அறுபட்டை வடிவமாகவும் அடிப்பாகத்தில் சிறு ஈய துளை உள்ளதாகவும் இருக்கும். இந்த இடத்தில் தான் கண்காணிப்பாளர் தம் முத்திரையைப் பொறிப்பார்.

பித்தளை எடைகள்

1 கிராமிலிருந்து 1 கிலோ கிராம் வரை உள்ளன. இவை வட்டவடிவமானவை. இவற்றின் அடிப்பாகத்தில் கண்காணிப்பாளர், வருடமும், இலக்கமும் பொறிப்பார்.

வேறுவகை எடைகள்

நகையை நிறுப்பதற்குத் துல்லியமான தனி எடைகள் உள்ளன. இவைகள் விலை உயர்ந்த லோகங்கள், வைரங்கள், நகைகள் முதலியவைகளை நிறுத்த உபயோகப்படுத்தப்படும். நகைக் கடைகளில் உபயோகிக்கும் எடைகற்களை மாத்திரம் கண்காணிப்பாளர் வருஷத்திற்கு ஒரு முறை முத்திரையிடவேண்டும். மேற்கூறிய மற்ற எடைகளை இரண்டாண்டிற்கு ஒரு தடவை முத்திரையிட வேண்டும்.

இந்த முறையைத் திறம்பட அனுசரிக்கச் செய்ய அரசினர் எடை அளவு கண்காணிப்பு சமீபத்தில் இலாகாவை விரிவாக்கி அமைத்துள்ளனர். சுமார் 3,000 வியாபார

ஸ்தலங்களுக்கு ஒரு கண்காணிப்பாளரும், ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஒரு உதவி கட்டுப்பாடு அதிகாரியும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இம்மாநிலத்தில் தற்சமயம் சுமார் 163,400 வியாபார நிலையங்கள் உள்ளன என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அவைகளுக்குத் தேவையான எடைக் கற்களை கொடுத்துதவ 159 உற்பத்தியாளர்களும், 73 வியாபாரிகளும் எடைகளைப் புதுப்பிப்பவர்கள் 144 பேர்களும் உள்ளனர்.

பொதுமக்களுக்கு வேண்டுகோள்

1-4-62 முதல் பழைய எடைகள் சட்டத்திற்குப் புறம்பானவைகளாகக் கருதப்படும். எனவே புதிய முறைகளைப் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உங்களுக்குத் தேவைப்படும் பொருள்களை கடைகளில் வாங்கும்போது எடை, அளவுகள், அதிகாரியினால் பரிசீலிக்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டிருக்கிறதா என்று தயவு செய்து கவனியுங்கள்.

தராசுகளைப் பொறுத்தவரை அவை சரிவர இயங்குகின்றனவா, வித்தியாசமின்றி ஒரே சீராக இயங்குகின்றனவா, குறிமுள் நடுவில் காணப்படுகிறதா, தட்டுகளின் அடியில் ஏதேனும் பொருள்கள் ஒட்ட வைக்கப்பட்டிருக்கின்றதா, அந்தத் தராசுகள் எடையளவு கண்காணிப்பாளரால் முத்திரை இடப்பட்டிருக்கிறதா என்று கவனித்தால் நன்று.

பரிசீலனை அதிகாரியின் முத்திரை பொறிக்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் வியாபாரிகளால் கடையில் வைக்கப்பட்டிருக்கிறதா, எடை மாற்றுப் பட்டியல் விலை, மாற்றுப் பட்டியல் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று பொது மக்கள் வியாபாரிகளிடம் கேட்கலாம்.

எடைகளை அவ்வப்பொழுது பரிசீலனை செய்து அத்தாட்சி வழங்க அதிகாரிகளும் கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆதலினால் பொதுமக்கள் அவ்வதிகாரிகளோடு ஒத்துழைத்து இம்முறை வெற்றி பெற உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய எடைகளை நினைவிலிருந்து நீக்க பொதுமக்களுடைய ஒத்துழைப்பு மிகவும் வேவை. உதாரணமாக ஒரு வீசை 1,400 கிராமின் விலை கேட்கக் கூடாது. அப்படி கேட்போமேயானால் புதிய எடையை அமுலுக்குக் கொண்டு வந்த பயன் ஏற்படாது. கிலோகிராம் அளவில்தான் கேட்கப் பழகிக் கொள்ள வேண்டும். உதாரணமாக வீசை ½ வீசை, ¼ வீசை இவைகளுக்கு பதிலாக ஒரு கிலோகிராம் 500 கிராம், 200 கிராம் என்று கேட்டு வாங்க கோரப்படுகிறது. இது புழக்கத்தில் வரவேண்டும்.

முடிவுரை

மெட்ரிக் முறை ஒரு எளிய முறை; இயற்கை முறை; சுலபமாகப் புரியக்கூடிய முறை. வாணிபத்தில் நேர்மை கையாளப்பட வேண்டும். விற்பவரும் வாங்குபவரும் தகராறு இன்றி சுமூகமான முறையில் வாணிபம் நடத்த உதவும்முறை இது. வியாபாரம் தழைத்து நாடு முன்னேற வழி கோலுவது இம்முறை. இம்முறையை பின்பற்றினால் நம் நாட்டில் மட்டுமின்றி உலக ரீதியிலேயே எல்லா வியாபாரங்களும் சுலபமாக நடைபெற வழி ஏற்படும். இந்த மெட்ரிக் முறை பண்டைய முறை. இதை உலகுக்கு அளித்தவர்கள் நாம். இதைத் துரிதமாக பின்பற்ற வேண்டியது அவசியம். பொது மக்கள் நல்ல முறையில் ஒத்துழைத்து மெட்ரிக் முறையிலேயே எல்லா அலுவல்களும் நடத்தி இதை வெற்றிகரமாக்க ஆவன செய்ய வேண்டும். மெட்ரிக் முறை அமுலுக்கு வந்த பிறகு இந்தியாவில் எங்கு சென்றாலும் மக்கள் எவ்விதக் கஷ்டமுமின்றி வியாபாரம் செய்ய வாய்ப்புண்டாகிறது. இப்பொழுதைப் போல குழப்பம் ஏற்படாது. இதன் வெற்றி உங்கள் ஒத்துழைப்பில் அடங்கியுள்ளது. எனவே பொது மக்களாகிய நீங்கள் ஒத்துழைப்பைத் தாருங்கள். நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவுங்கள் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈரோடு பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பல்வேறு கிராமங்கள் கிராம நலத் திட்டங்களின் பலன்களை அநுபவித்து வருகின்றன. சிறப்பாக, கிராமக் கைத்தொழில்கள் வளர்ச்சிக்கான விசேஷத் திட்டம் இங்கே நிறைவேற்றப்பட்டதின் விளைவாக பல தொழில்களுக்குப் புத்துயிரும் புது வாழ்வும் ஏற்பட்டுள்ளன. பல்வேறு தொழில் பயிற்சி நிலையங்களில்பயின்ற பலர் புதிய கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்திக் கொண்டு, திறம்பட முன்னேறி வருவதை அறிந்தேன். அத்துடன், கடன்களையெல்லாம் ஒருமுகப் படுத்தி வழங்கும் திட்டம் (Full Finance Scheme) இங்கே பரீட்சார்த்தமாக நடைபெறுவதால் கிராம வாசிகளுக்கு அனேக நன்மைகளை ஏற்பட்டுள்ளன. இந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர் **திரு. எஸ். கி. செங்குட்டு வேலப்ப கவுண்டர்** பஞ்சாயத்து ரேடியோ பராமரிப்பு விஷயமாக உள்ள சில நடைமுறை சிக்கல்களை விவரித்தார். ரசாயன உர வினியோகம், இங்கே பெரும்பாலும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடைபெறுகிறது. தவிர, "பாரத சேவக் சமாஜ்" ஓரளவு நல்ல வேலை செய்து வருவதை அறிந்து மகிழ்ந்தேன்.

பெரியநாய்க்கன்பாளையம், ஈரோடு ஆகிய இரண்டு பஞ்சாயத்து யூனியன்களும் கவர்ச்சிகரமான முறையில் அமைந்த ஆண்டு விழா மலர்களை வெளியிட்டுள்ளனர். பயனுள்ள செய்திகளும், குறிப்புகளும், அனுபவங்களும் இவற்றில் தொகுக்கப்பட்டுள்ளன. புதிய பஞ்சாயத்து ஆட்சி பற்றிய கருத்துக்களைப் பரப்ப இத்தகைய மலர்கள் பயன்படு மல்லவா ? இம்முயற்சி மிகவும் பாராட்டத் தக்கது. காலப் போக்கில், மற்ற பஞ்சாயத்து யூனியன்களும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவது நலம்.

எஸ். வேங்கடசாமி, பொதுஜனத் தொடர்பு அதிகாரி.

காஞ்சிரங்கால் குடியிருப்பு

நம் மக்கள் சமுதாயத்திற்கு இன்றியமையாத் தேவைகள் மூன்று, உணவு, உடை; இருப்பிடம். இம்மூன்றிலும் தன்னிறைவு அடைந்து விட்டால் அதுவே நாட்டின் முன்னேற்றத்திற்கு ஓர் சிறந்த எடுதுகாட்டாகும். ஆகவே எல்லா நாட்டினரும் இவைகளை எல்லா மக்களுக்ம் கிடைச்கச் செய்ய வேண்டுமென்பதை அடிப்படையாக வைத்தத் திட்டங்கள் நிறைவேற்றுகிறார்கள்.

இதில் ஒன்றான குடியிருப்புப் பிரச்னையைத் தீர்க்க நமது அரசினர் பல திட்டங்கள் வகுத்து நிறைவேற்றி வருகின்றனர். அதிலும் முக்கியமாகப் பிற்ப்பட்ட வகுப்பினர்களையும் ஹரிஜனங்களையும் கருத்தில் கொண்டு அவர்களின் நலனுக்காக நல்வாழ்விற்காக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. இவ்வகையில் ஹரிஜன் நலத் துறையினர் முக்கியமாகப் பெரும் பணியாற்றிவருகின்றனர்.

திட்டமிட்டு செலவு செய்தால் போதுமா ? உண்மையாக மக்களுக்குப் பயன்படவும் வேண்டுமல்லவா ? அதற்காக மக்களின் விருப்பப்படி மக்களும், அரசாங்கமும் ஒத்துழைத்தால் நிச்சயம் வெற்றிபெறலாம். இதில் எள்ளளவும் சந்தேகமில்லையென்பதை ஒன்று சேர்நத உழைப்பின் மூலம் எடுத்துக் காட்டுகிறார்கள் "காஞ்சிரங்கால் " ஹரிஜன மக்கள்.

ஆண்டுதோறும் எல்லா வட்டாரங்களிலும் ஹ்ரிஜனக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. கட்டப்படும் ஹரிஜனக் குடியிருப்புகளைப்பற்றி அன்றாடம் பல விதமாகப் பேசப்பட்டு வருவதுடன் சர்ச்சைக்கும் இடமளிக்கிறது. இதற்கெல்லாம் விதிவிலக்காக, எல்லோரும் பின்பற்றிச் செல்லும்படியான, எளிய முறையில் ஓர் திட்டம் உருவானது, " **காஞ்சிரங்கால்** " கிராமத்தில். இது இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கைப் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஒரு கிராமமாகும்.

இந்தக் குடியிருப்பில் கட்டப்பட்ட வீடுகள் மட்டும் பல அம்சங்களில் சிறப்புடையதாக விளங்குவதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்ப்போம்.

ஹரிஜன குடியிருப்புகள் இதுகாறும் வீடு ஒன்றுக்கு ரூ 750 என்ற வீதத்தில் திட்டமிட்டு குறிப்பிட்ட அளவில் யாரோ சம்பந்தமற்ற ஒருவரால் கட்டி முடிக்கப்பட்டது. பயனடைபவர் ஒருவரும், கட்டிப் முடிப்பவர் ஒருவருமாக இருந்தனர். அதிலும் அரசினர் மான்யம் ரூ. 550-ம் வீட்டின்மேல் ஈட்டுக் கடனுக ரூ. 200-ம் பெற்று கட்டப்பட்டது. உரியவர்களுக்கு அதிகப் பொறுப்பும், பங்கும் இடையாது. மேலும் அவர்கள் தங்களுக்காக வீடுகள் கட்டப்படுகிறது என்று சிறிதளவும் எண்ணிப் பார்ப்பதுமில்லை ; கட்டிட வேலையில் கலந்து கொள்வதுமில்லை.

ஆனல் காஞ்சிரங்கால் கிராமத்தில் கட்டப்பட்ட 45 வீடுகளும் நவீன முறையில் கட்டப்பட்டுள்ளன. ஏற்கனவே சொந்தமாக இட நெருக்கடியுடன் வாழ்ந்து வந்த இடத்திலே, விரிவாக, விசாலமாகத் திட்டமிட்டுக் கட்டப்பட்டு இருக்கிறது. அரசினர் மான்யமாக ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 300-ம், கடனுக ரூ. 200-ம் வழங்கியிருக்கிறார்கள். ஹரிஜனங்கள் தங்கள் வீடுகளைத் தங்கள் சொந்த உழைப்பின் மூலம் மண் சுவர் வைத்து மேல்மட்ட வரை எழுப்பி, கதவு, ஜன்னல்கள் வைத்து, ஓடு போட்டிருக்கிறார்கள். மேலே கூறிய ரூ. 500-க்குள் இந்த வீடு கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இவ்வமைப்பு அவர்கள் விரும்பியபடி உடல் உழைப்புச் செய்யவும், அரசினர் விரும்புகிறபடி காற்றோட்டமான ஓடு போட்ட வீடாகவும், குடியிருப்பிற்கு இரண்டு மடங்கு விசாலமாகவும் இருக்கிறது. மேலும் சிக்கனமாகவும் திருந்திய முறையிலும், அமைக்கப்படுகிறது. குறைகூற இடமில்லை. மண்சுவர் நம்மால் எழுப்பக் கூடியது. நீடித்து உழைக்க வல்லது. நம் உழைப்பால் உயர்ந்த நமது வீடுகள் என்ற நம்பிக்கையில் அகமகிழ்கின்றனர். அவைகளை நல்ல முறையில் பாதுகாத்துப் பராமரிக்க முடியும் என்று உணர்கின்றனர். உள்ளம் பூரிக்கின்றனர்.

இந்த முறையில் வீடுகளை உருவாக்கவும், போற்றிப் புகழவும் காரண கர்த்தாக்களாக இருந்த இருவர்களை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒருவர் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்., அவர்கள். மற்றொருவர் சிவகங்கை பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு எஸ். பி. கே. ஏ. எல் லெட்சுமணன் செட்டியார், எம்.எல்.சி. அவர்கள்.

இதுபோன்று இனிமேல் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு காஞ்சிரங்கால் குடியிருப்பு முன் மாதிரியான ஓர் எடுத்துக் காட்டாகும் என்பதில் சந்தேகமில்லை.

சுத்தமான குடியிருப்பிற்குப் பரிசு !

"சுத்தம் சுகம் தரும்—சுத்தம் சோறு போடும்" என்பது நம் நாட்டின் முதுமொழி. நமது வாழ்வில் எவ்வளவுதான் சீரும் சிறப்பும் செல்வப்பெருக்குடன் இருந்தாலும், சுத்தமாகவும், ஆரோக்கியமாகவும் இல்லாவிட்டால் ஒன்றும் பயனில்லை. "உலக சுகாதார தினம்" கொண்டாடுவதிலிருந்து இதன் இன்றியமையாத்தன்மையும், எந்நாட்டவரும் இதற்களிக்கும் முக்கியத்துவத்தையும் நோக்குமிடத்து இதன் சிறப்பு விளங்கும்.

காந்தி அடிகளும் தாம் விரும்பிய கிராம சுய ஆட்சியில் சுற்றுப் புறச் சுகாதாரத்திற்கு முதலிடம் கொடுத்திருக்கிறார். கக்கூஸ் இருக்குமிடத்திற்குச் சென்றால், சமையலறைக்குச் சென்ற எண்ணமும், தோற்றமும் உண்டாக வேண்டுமெனக் கருதியிருக்கிறார். நமது சமுதாய தோற்றமும் உண்டாக வேண்டுமெனக் கருதியிருக்கிறார். நமது சமுதாயப் பழக்க வழக்கத்திலும் பரம்பரையாக ஆரோக்கியமும், சுற்றுப் புறச் சுகாதாரமும் இயல்பாகக் காணப்படுகிறது.

ஆனால் இன்றைய நாகரீக சமுதாயத்தில் கோடிக் கணக்கான பணத்தைச் செலவிட்டும், ஆரோக்கியமும், சுற்றுப்புறச் சுகாதாரமும் எல்லோராலும் புறக்கணிக்கப்பட்டே வருகிறது. இதன் விளைவு நமக்கு இல்லையென்றாலும் எதிர்கால மக்கள் நிச்சயமாகப் பாதிக்கப்படத்தான் செய்வார்கள். இதில் சந்தேகமில்லை.

நாகரீகம் வளர வளர ஆரோக்கிய வாழ்விலும், சுற்றுப் புறச் சுகாதாரத்திலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதன் நலன் கருதி விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. பெரும் பாலான இடங்களில் விழாக்கள் கொண்டாடப்பட்டு பரிசுகள் வழங்கப்படுவதுடன் இதன் நோக்கம் முற்றுப் பெற்றுவிடுகிறது. சில இடங்களில் பரிசைக் கருதியோ, விழாவைக் கருதியோ அல்லாமல், நாம் சுத்தமாக இருக்க நினைப்பதுபோல நமது குடியிருப்பும், சுற்றுப் புறமும் சுத்தமாக இருக்க வேண்டுமென நினைத்துக் கடமை உணர்வோடு எப்பொழுதும் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட கிராமமும், கிராம மக்களும் வாழையடி வாழையாக இருந்துதான் வருகிறார்கள். அதற்கோர் எடுத்துக் காட்டாக "**சக்கந்தி**" கிராமம் விளங்குகிறது.

நகரத்திலும் சரி, கிராமத்திலும் சரி முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று வந்து விடலாம். வசதி உள்ள வீடுகளுக்கும் தாராளமாகச் சென்று வர மனம் இடம் கொடுக்கும். ஆனால் ஹரிசன் குடியிருப்பிற்குள், அல்லது தெருக்களுக்குள் சென்று வரவேண்டுமென்றால் மனக்கசப்பு ஏற்படும். இருந்த இடத்திலிருந்தே வந்த காரியத்தைக் கவனித்துக் கொண்டு திரும்பிவிடுவார்கள். ஆனால் இதற்கெல்லாம் விதிவிலக்காக ஓரிரு கிராமங்களும் குடியிருப்புகளும் ஆங்காங்கே காட்சி அளித்துக் கொண்டு இருக்கின்றன. வருவோரை வரவேற்கக் காத்துக் கொண்டும் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் மேலே குறிப்பிட்ட சக்கந்தி கிராமம். இது இராமனாதபுரம் மாவட்டம், சிவகங்கைப் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கிராமமாகும். இந்தக் கிராமத்தில் ஹரிசன நல இலாகா உதவியாக வீடு ஒன்றுக்கு ரூ. 550 வீதம் மானியம் பெற்றும், ரூ. 200 வீதம் கடன் பெற்றும் பத்து வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அங்கு வசிப்பவர்கள் சுற்றுப் புறச் சுகாதாரத்தைத் தங்கள் தலையான பணியாக மேற்கொண்டு எப்பொழுதும் குடியிருப்பைச் சுத்தமாகவே வைத்திருக்கிறார்கள். அவர்கள் கருதிப் பெருமலே அவர்களின் கடமை உணர்வு, சிவகங்கைத் தாலுகா அவர்களுக்குப் பரிசாக வாங்கிக் கொடுத்தது விட்டது. வானொலி செட் ஒன்று.

சிவகங்கைத் தாலுகாவில் உள்ள ஹரிசனக் குடியிருப்பில் சுத்தமானதும், சுகாதாரமாய் உள்ளதுமான சக்கந்திக் குடியிருப்பைத் தேர்தெடுத்து ஹரிசன நல இலாக்காவினர் வானொலி செட் ஒன்றைப் பரிசளித்திருக்கிறார்கள்.

சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வாழவேண்டும்—நமது நல் வாழ்விற்காக—நம் நாட்டின் நலனுக்காக.

—o—

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்'

[" கல்வி சிறந்த தமிழ்நாடு " என்று போற்றிப் புகழ்ந்தார் பாரதியார். எழிலானதோர் எதிர் காலத்தைச் சமைக்கின்ற சிற்பிகள் இன்றைய மாணவர்கள். அறியாமை இருளைப்போக்கி, அறிவுச்சுடர் எங்கணும் ஒளிவிட்டுப் பிரகாசிக்க அருமையான பணிகள் பலவற்றைத் தமிழ்நாடு அரசாங்கம் சமீப காலத்தில் செய்துள்ளது. கல்வித்துறையில் நம் மக்களாட்சி புரிந்துள்ள பணிகளைச் சுருக்கமாகக் கீழே காணலாம். தமிழ்நாடு அரசாங்கச் செய்தித்துறையினர் வெளியிட்டுள்ள " பத்தாண்டுகளில் " என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகளை அப்படியே எடுத்துக் கொடுத்துள்ளோம்.

—ஆசிரியர்]

குறையாத செல்வம்

அள்ள அள்ளக் குறையாத செல்வம் கல்வி. வீட்டில் ஒளியுண்டாக்குவது விளக்கு. மனதில் ஒளி உண்டாக்குவது கல்வி. அறிவால் உயர்ந்த சமுதாயம் நல்ல சமுதாயம். பெருமைப்படத்தக்க சமுதாயம். அந்தச் சமுதாயத்தை உருவாக்குவதே நமது அரசாங்கத்தின் லட்சியம். 1938-39ல் பிரிவினைக்கு முற்பட்ட சென்னை மாநிலம் முழுமைக்குமாக 262 லட்சம் ரூபாய் கல்விக்காகச் செலவிடப்பட்டது. முதல் திட்டத்தின் தொடக்க ஆண்டில் 1,057 லட்ச ரூபாய் செலவிடப்பட்டது. ஆனால் இன்று 1960-61ல் கல்விக்காக ஆன செலவு ரூ. 1,568 லட்சம் என்ற அளவிற்கு அதிகரித்து விட்டது.

சுதந்திரம் பெற்ற நிலையில் நம் மாநிலத்தில் இருந்தவை 15,303 ஆரம்பப் பள்ளிகளே. இன்று இவை 26,700 ஆகப் பெருகியுள்ளன. தமிழ்நாட்டில் 300 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள எல்லாக் கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு வருகின்றன. முன்பு 18.5 லட்சம் சிறுவர்களுக்கு மட்டுமே கல்வி வசதி கிடைத்தது. இன்று 34 லட்சம் சிறுவர் சிறுமியர் பள்ளி சென்று பயில்கிறார்கள். இன்று 6 வயது முதல் 11 வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு 77.3 சதவீதத்தினர் பள்ளி செல்கின்றனர். இந்த விஷயத்தில் தமிழ்நாடு இந்திய விகிதாசாரத்தையும் மிஞ்சி முன்னணியில் நிற்கிறது.

கட்டாய ஆரம்பக்கல்வி

இந்தியா முழுமைக்கும் எடுத்துக்கொண்டால் இந்த வயதுப் பிரிவில் உள்ள மொத்தச் சிறுவர் சிறுமியருள் 63.6 சதவீதத்தினரே பள்ளி செல்கின்றனர். நம் தமிழகத்தில் 13.7 சதவீதம் அதிகம். கேரளம், மேற்கு வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில்தான் பள்ளி செல்லும் மாணவர் தொகை அதிகமாக இருக்கிறது. மேலும் மூன்றாவது திட்டக் காலத்தில் 6 முதல் 11 வயதுக்குட்பட்ட எல்லாக் குழந்தைகளையும் பள்ளிகளில் சேர்க்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டப்படி முதல் 5 வகுப்புகளில் மேலும் 14 லட்சம் குழந்தைகளுக்குக் கல்வி வசதி கிடைக்கும். இதற்கு 11·38 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 6 முதல் 7 வயது வரையிலுள்ள சிறுவர்கள் அனைவரையும் பள்ளியில் சேர்க்கும் முயற்சியில் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் தமிழ் நாட்டில் ஏற்கனவே அமுலாகிவிட்டது. 1961–62–ம் ஆண்டில் மட்டிலும் கூடுதலாக இரண்டு லட்சம் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி வசதி செய்து தருவதற்காக ரூ. 70 லட்சம் செலவிடப்படும்.

பசி தீர்க்கப் பகல் உணவு

இங்ஙனம் படிப்பில் ஆர்வம் பெருகுவதற்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சில புதிய திட்டங்கள் காரணமாகும். பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்குப் பகல் உணவு அளிப்பதற்கும் ஆடைகள் வழங்குவதற்கும் புதுமைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அரசாங்கமும் பொதுமக்களும் மனமொத்து இணைந்து நடத்திவரும் மாபெரும் திட்டங்கள் இவை. 1956–ம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்த இலவச நண்பகல் உணவுத் திட்டத்தில் ஆண்டிற்கு இருநூறு நாட்களும் ஏழை மாணவர்களுக்கு நண்பகலில் இலவச உணவு வழங்கப்படுகிறது. ஒரு குழந்தைக்கு ஒரு வேளை உணவிற்கு ஆகும் மொத்தச் செலவான 10 காசுகளில் 6 காசுகளை அரசாங்கம் அளிக்கிறது. தொடக்கத்தில் 7,328 ஆரம்பப் பள்ளிகளில் பயிலும் 1,87,600 குழந்தைகட்கு இவ்வுதவி அளிக்கப்பட்டது. இன்று நமது மாநிலத்தில் 26,783 ஆரம்பப்பள்ளிகள் உள்ளன. இவைகளில் 26,314 பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்கள் இத்திட்டத்தால் பகல் உணவு பெறுகிறார்கள். இன்று 10 லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இந்த அநுகூலத்தை பெறுகின்றனர். இதனால் பள்ளி சென்று படிக்கவேண்டும் என்ற ஆர்வம் சிறுவர்களுக்கும், பள்ளிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

மக்கள் இயக்கம்

கல்வி முன்னேற்றத்திற்காக மற்றொரு புரட்சித் திட்டத்தை உருவாக்கிய பெருமையைத் தமிழகம் அடைந்துள்ளது. கல்வி முன்னேற்றப் பணியில் உள்ளூர்ப் பொதுமக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் பெற்றுச் செயலாற்றுவதற்கான திட்டம் இது. இதுவே பள்ளிச் சீரமைப்புத்திட்டம். அது நாளடைவில் மாபெரும் மக்கள்

இயக்கமாக மலர்ந்து தமிழகத்தில் பெரும் மாறுதலை உண்டாக்கியுள்ளது. இத்திட்டத்திற்குப் பொதுமக்கள் தாமாகவே முன்வந்து உதவிய பொருள்களின் மதிப்பு 6.47 கோடி ரூபாயாகும். நடைமுறையில் 1960–61 இறுதி வரையில் 1.06 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மக்களாட்சி நடைபெறும் இந்தக் காலத்தில் இந்த மனப்பான்மை போற்றி வரவேற்கத் தகுந்ததாகும். அதனால்தான் நம் பிரதமர் நேரு இத்திட்டத்தை "புரட்சிகரமான திட்டம்" என்று பாராட்டியிருக்கிறார்கள்.

எண்ணிக்கை மட்டும் 48,000 லிருந்து 2 லட்சமாகியிருக்கிறது. மூன்றாவது திட்டத்திலும் மேலும் 75,000 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்றுதிட்டமிடப்பட்டுள்ளது.

பதினோராவது வகுப்பு வரை எல்லா ஏழை மாணவர்களுக்கும் இலவசக்கல்வி அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதனால் ஏராளமான மாணவர்கள் மேலும் உயர்தரப்பள்ளிகளில் சேருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

உயர்நிலைப்பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு ஆக்க வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இரண்டாவது திட்டக் காலத்தில் 192 பள்ளிகள் பலநோக்கு பள்ளிகளாக மாற்றப்பட்டது. உயர்நிலை பள்ளிகளை மேல் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றும் திட்டப்படி நம் மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 200 உயர்நிலைப் பள்ளிகள் 3–ம் திட்டக் காலத்தில் புதிய பதினோரும் வகுப்பைத் தொடங்கும்.

ஆதாரக் கல்வி

கல்வி, வெறும் எட்டுச் சுரைக்காய்போல் பயனற்றுப் போகக்கூடாது. மாணவர்கள் உடல் உழைப்பை மதிக்கும் மனப்பான்மையைப் பெறவேண்டும். அதனால்தான் உழைப்பிற்கு உயர்வு தரும் ஆதாரக்கல்வியை அரசாங்கம் பரப்பி வருகிறது. ஆண்டுதோறும் ஆதாரப்பள்ளிகள் அதிகமாயின. சாதாரணப் பள்ளிகள் பல ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் 2,100 பள்ளிகள் அவ்வாறு மாற்றப்பட்டன. ஆதாரக்கல்விப் பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு அம்முறையில் மறு பயிற்சித் திட்டம் நடைபெற்று வருகிறது. 1960—61 வரையில் 27,000 ஆசிரியர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டது.

உயர்நிலைக் கல்வி

ஆரம்பக்கல்வியைப் போன்று உயர்நிலைக்கல்விவளர்ச்சியிலும் ஊக்கம் செலுத்தப்பட்டு வருகிறது. சுதந்திரமடைந்த காலத்தில் தமிழ் நாட்டில் 471 உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே இருந்தன. இன்று 1,361 பள்ளிகளைப் பெற்றிருக்கிறோம். மேலும் இரண்டாவது திட்டக் காலத்தில் 450 வகுப்புகளைக் கூடுதலாக ஏற்படுத்தி அவற்றில் 18,000 மாணவர்களை மேற்கொண்டு சேர்த்துக் கொள்ளுமாறு செய்யத் திட்டமிடப்பட்டது. ஆனால் திட்டம் செயல்படும் பொழுது 552 வகுப்புகள் திறக்கப்பட்டுவிட்டன. அவற்றில் 22,100 மாணவர்கள் மேற்கொண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவற்றையெல்லாம் சேர்த்து மொத்தமாக நோக்குகையில் இந்தப் பத்தாண்டுகளில் இப்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 3.34 லட்சத்திலிருந்து 7.38 லட்சமாக அதிகரித்துள்ளது.

கல்லூரிக் கல்வி

பெண்கள் இன்றைய பள்ளிப் படிப்புக்கேற்ப அதிகமான கல்லூரிகள் தேவைப்படுகின்றன. சுதந்திரம் பெற்ற காலத்தில் நமது மாநிலத்தில் 28 கலைக் கல்லூரிகள்தான் இருந்தன. இன்று 56 கலைக் கல்லூரிகள் இருக்கின்றன.

கல்லூரிகளில் தாய்மொழியில் பாடங்கள் போதிப்பதின் மூலம் உள்ள அனுகூலங்களில் மாணவர்களின் அறிவு வளம் சிக்கல் இல்லாத முறையில் வளர்ச்சி அடைவது ஒன்று. பல அரிய நூல்கள் அந்த மொழியில் எழுதப்படுவது இரண்டு. இந்த நோக்கத்துடன் கோவை அரசினர் கலைக் கல்லூரியில் 1960–61 லிருந்து அரசியல், வரலாறு, பொருளாதாரம், புவியியல், உளவியல் போன்ற பாடங்கள் தமிழ் மொழியின் வாயிலாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

தாய்மொழியில் பாடம் பயிலும் மாணவர்களுக்கென்று தனிச் சலுகைகள் பல தரப்பட்டுள்ளன. ஆண்டிற்கு 3,000 ரூபாய்க்குக் குறைந்த வருமான முடைய பெற்றோர்களது பிள்ளைகளுக்கு முழுச்சம்பளச் சலுகை தரப்பட்டுள்ளது. மேலும் அறிவு, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் 55 மாணவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 30 வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டுவருகிறது. கல்லூரிகளில் தமிழ் மூலம் போதிக்கப்படவிருக்கிற 14 பாடங்களில் உள்ள கலைச் சொற்களுக்குத் தமிழில் சொற்களைப் படைத்தளிக்க "கல்லூரித் தமிழ்க்குழு" என்ற ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக் குழு கல்லூரிப் பாடங்களுக்கு வேண்டிய 16 பாடப் புத்தகங்களை வெளியிட்டுள்ளது. 1961–62–ல் மேலும் 36 பாடப் புத்தகங்களை வெளியிட மும்முரமாக வேலை நடைபெற்று வருகிறது.

தொழில் நுட்பக் கல்விக்காக இரண்டாவது திட்டக் காலத்தில் மட்டும் ரூ. 231 லட்சம் செலவிடப்பட்டது. முதல் திட்டக் காலத்தில் தொடக்கத்தில் பொறியியல் கல்லூரிகளிலும், தொழில் நுட்பப் பள்ளிகளிலும் ஆண்டுதோறும் முறையே 437 மாணவர்களும், 622 மாணவகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். தற்பொழுது பொறியியல் கல்லூரிகளில் ஆண்டு ஒன்றுக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1,157 ஆகவும்; தொழில் நுட்பப்பள்ளிகளில் சேர்க்கப்படும் மாணவர் தொகை 2,910 ஆகவும் அதிகரித்துள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக 4 பொறியியல் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பப் பள்ளிகளில் 700 மாணவர்களும் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

நோயற்ற வாழ்வு

தொழில் நுட்பக் கல்வியைப் போலவே மருத்துவக் கல்வியிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சுதந்திரத்திற்கு முன்பு தமிழ்நாட்டில் நாட்டு மருத்தவக் கல்லூரி ஒன்றையும் சேர்த்து நான்கு கல்லூரிகள் இருந்தன. அவைகளில் ஆண்டுக்கு 225 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்தனர். இன்றோ மொத்தம் 6 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. 600 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆங்கிலக் கல்வி

ஆங்கிலம் ஓர் உலகப் பொதுமொழி. எனவே நம் மாணவர்கள் இம்மொழியில் நல்ல பாண்டித்யம் பெற்றுச் சிறப்படைய வேண்டும். அதற்கு மாணவர்களைத் தயார் செய்யத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழிப் பாடமுறைகளில் பயிற்சிதரும் திட்டம் ஒன்று 1959 ஜூலை முதல் பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1,304 ஆசிரியர்கள் முதல் முகப்பயிற்சி பெற்றனர். 2,420 ஆசிரியர்கள் மறுபயிற்சிப் பெற்றனர்.

ஆசிரியர் பயிற்சி

ஆரம்பக்கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றில் வளர்ச்சி ஏற்பட்டமையால் ஏராளமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் பணியாற்றத் தேவைப்படுகிறார்கள். கேரளமும், ஆந்திரமும் நம்மோடு இணைந்திருந்த காலத்தில் மொத்தமிருந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 156. ஆனால் அவை பிரிந்த பிறகு, பரப்பில் குறைந்த—இன்றுள்ள நம் மாநிலத்திற்கு மட்டுமே 146 பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. அதே போல் மூன்று ஆக இருந்த பயிற்சிக் கல்லூரிகளின் எண்ணிக்கை இன்று 17 ஆக உயர்ந்துள்ளது அத்துடன் மூன்று உடற்பயிற்சிக் கல்லூரிகளும் தற்பொழுதுள்ளன.

ஆசிரியர் நல்வாழ்வு

ஆசிரியர்களுக்கு சமுதாயத்தில் இன்று தனி மதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. அவர்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு 4 கோடி ரூபாய் அரசாங்கச் செலவு அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி போன்ற சலுகைகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஆசிரியிர்களுக்கு எதிர்கால்ச் சேமிப்பு நிதி, இன்ஷூரன்ஸ், ஓய்வுகாலச் சம்பள உதவி ஆகிய மூவகை நலன்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு உயர்நிலைக் கல்வி இறுதிவரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது, சிறந்த முறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 200 ரூபாய் பரிசும், நற்சான்றிதழும் வழங்கபபடுகின்றன.

இவ்வாறு கல்வியில் புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கி, அவைகளைச் செயல்படுத்துவதில் வெற்றி கண்டு வரும் தமிழ்நாடு பாரதத்திற்கே ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வானோக்கி வாழும் உழவர்

நெசவுத் தொழிலாளர்களுக்கு அடுத்தப் படியாகக் கபிலர் மலையில், "வானோக்கி வாழும் விவசாய இனம்; உலகிற்கு உணவளிக்கும் உழவரினம்" என்ற பெருமைக்குறிய விவசாயப் பெருங்குடி மக்கள் இங்கே–"சுழன்றும் ஏர் பின்னது உலகம் அதனால் உழன்றும் உழவே தலை" என்ற பொய்யிற் புலவன் வள்ளுவன் குறளுக்கு சான்று காட்டினர் போல வேளாண்மைத் துறையில், கபிலர் மலை வேளாண்மை விரிவுப்பணி அதிகாரி திரு. வேலாயுதசாமி அவர்களின் ஆலோசனைப் பெற்று நவீன முறைகளில் விவசாயம் செய்து பேராதாயம் முற்று வருகின்றனர்.

இங்கே, பல 'நோக்குக் கூட்டுறவுசங்கம் ஒன்றும், எண்ணை உற்பத்தியாளர் சங்கம் ' ஒன்றும் நல்ல முறையில் இயங்கி வருகின்றது.

திங்கட்கிழமை சந்தை

வாரந்தோறும் திங்கட்கிழமை இவ்வூரில் சந்தைக் கூடுகின்றது. அன்றையதினம் பக்கத்து ஊரிலிருந்தெல்லாம் மக்கள் திரண்டு வந்து தங்களுக்குத் தேவையானப் பண்டங்களைப் பெற்றுச் செல்வர். இச்சந்தையின் மூலம் இப்பஞ்சாயத்துக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

" உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் "

இத்தகைய சிறப்புமிக்கப் பஞ்சாயத்தை, இன்னும் சிறந்தப் பணியாற்றும் வகையில் எப்படியெல்லாம் இயக்க வேண்டும் என்றும், என்னென்ன பயனுள்ள பணிகளையெல்லாம் மக்களுக்குச் செய்து தரவேண்டும் என்றும் இங்குள்ள ஆன்றோர்கள் ஆக்க வேலைக்கானப் பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களிடம் விழிப்புணர்ச்சியை உண்டாக்க, பல்வேறு துறையிலும் ஆக்கப்பணிகள் பல மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிஅறன. மக்களின் மனமெனும் அகல் விளக்கிலே அன்பெனும் நெய் பெய்து;, ஆதரவெனும் திரியெட்டு; ஆக்கவேலையெனும் தீபமேற்றி, முயற்சி எனும் தூண்டுகோலால் தூண்டிவிட்டு; இருளகற்றி, இனிய ஒளியை ஏற்றிவைக்கும் திருப்பணியிலே உண்மைத் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். எனவே இப் பஞ்சாயத்து பார் போற்றும் உயர்நிலைக் காணும் கட்டத்திற்கு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று உறுதியாகச் சொல்லாம்.

காவல் துறையினர் ஆற்றியுள்ள சீரிய பணி

[அந்நியர் ஆட்சிக்காலத்தில் காவல் துறையினர் அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டுகின்ற பணியினை மட்டும் புரிந்து வந்தனர். சுதந்திரத்திற்குப் பிறகு, எல்லாத் துறைகளிலும், குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. காவல் துறையினரும் அபிவிருத்திப் பணிகளிலே மிக்க ஆர்வம் கொண்டு பணிபுரியத்தொடங்கி விட்டனர். நாட்டின் எதிர்காலம் நல்ல முறையில் ஏற்றம் பெற்றுத் திகழ எல்லோரும் பாடுபடவேண்டும். தமிழ்நாட்டில் காவல் துறையினர் ஆற்றியுள்ள அபிவிருத்தி வேலைகளைச் சுருக்கமாக இக்கட்டுரையில் காணலாம். 'பஞ்சாயத்து ராஜ்' (Panchayati Raj) ஏப்ரல் இதழில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கமே இது—ஆசிரியர்.]

ஒரு காலத்தில் போலீஸ்காரர்கள் என்றுலே மக்களுக்குப் பயம். அந்நியர் ஆட்சியில் மக்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் அந்நியோந்நிய மனப்பான்மை தோன்ருமலிருந்ததில் அதிசயம் ஒன்றுமில்லை. அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்ட மட்டும் தான் அவர்கள் அந்நியர் ஆட்சிக் காலத்தில் அழைக்கப்பட்டனர். மக்களிடையே அவர்கள் நெருங்கிப் பழக முடியவில்லை. மக்களுடைய பிரச்னையை அவர்களுடையத் தேவைகளைப் புரிந்துக் கொள்ளவும் அவர்களால் இயலாமல் போய் விட்டது. மக்களிடையே தொடர்பு இல்லாமல், பொதுவான ஒரு கெட்ட பெயர் காவல் துறையினருக்கு அந்தக் காலத்தில் இருந்து வந்தது.

ஆனுல், நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், நிலைமை மாறி விட்டது. மக்களுக்கும்—காவல் துறையினருக்குமிடையே சுமுகமான, நெருக்கமான நட்புறவு ஏற்பட வாய்ப்புக்கள் ஏற்பட்டன. எதிர்பார்க்கிற முழுமையான அளவுக்கு இந்தத் தொடர்பு இன்னும் ஏற்படவில்லை என்பது உண்மைதான். மக்கள்—காவல் துறையினர் ஆகிய இரு சாராருக்குமிடையே இன்னும் நெருக்கமான சுமுகமான நட்புறவு ஏற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

காவல் துறையினர் கட்டிய பள்ளிக்கூடம்.

அமைதியும் ஒழுங்கும் மட்டுமல்ல... ஆக்கப்பணியும்கூட

தமிழ்நாடு காவல்துறையினர் இப்படிப்பட்ட நல்லதொரு சுமுகமான உறவை ஏற்படுத்த அரும்பாடுபட்டனர். அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு தொண்டாற்றுவதின் மூலம் நல்லதொரு நட்புறவினை பெருக்கத் தொடங்கினர். அவர்களுடைய அன்றுட அலுவல்களான, அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுகின்ற வேலையுடன், அபிவிருத்தி வேலைகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். சில கிராமங்களில் இந்த அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட்டன. இந்தத் துறையில் பணி புரிதவன் மூலம், பழங்காலத்தில் இருந்த கசப்புணர்ச்சி மறைந்து, நல்லதொரு நட்புறவு தோன்றுவதற்கு அடிகோல அவர்கள் எண்ணி, இந்தப் பணியில் ஈடுபட்டார்கள்.

மக்கள் தொண்டனுக, கவல்துறையினர் மாறினர். கையில் துப்பாக்கியை ஏந்திக் கொண்டு கிராமப்புறங்களில் புகுந்து வந்த போலீஸ் சேவகர் இன்று அதே கிராமப்புறங்களில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரோடுகள் போட, கட்டிடங்கள் கட்ட, மக்களின் தொண்டனுக உலவி வருகிருர்.



போலீஸ் கிராமம் - கரிசல்பட்ட - தாயநேரி.

தன்னுடைய நெற்றி வியர்வையைச் சிந்தி பாடுபட்டு, கிராமப்புறங்களில் உருப்படியான முறையில் நல்ல நல்ல சாதனைகள் பலவற்றைப் புரிந்து வருகின்றனர் காவல் துறையினர். எத்தனையோ சாதனைகளையும் அபிவிருத்தி வேலைகளையும் தமிழ்நாடு காவல்துறையினர் செய்துள்ளனர் அவர்களுடைய அபிவிருத்தி வேலைகளை கீழே சுருக்கமாகத் தருகிறோம்.

இராமனாதபுரம் மாவட்டத்தில், பல கிராமங்களைச் சேர்க்கின்ற பாதைகளைப் போடுகின்ற வேலை மேற்கொள்ளப் பட்டது. இது மட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் பள்ளி மாணவர்களிடையே ஒழுங்கு முறையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. சமுதி–கந்தப்ப சாலை ரோட்டையும் சாவடிப்பட்டி என்ற ஊருடன் இணைக்கின்ற 5 பர்லாங் நீளமுள்ள ரோடு ஒன்று காவல்துறையினரால் இப்போது அமைக்கப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில், அபிவிருத்தி வேலைகளுக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கிராமம் திருமலைகிரி என்பது. இது சேலம் டவுனிலிருந்து 5 மைல் தொலைவில் உள்ளது. இந்தக் கிராமத்திற்குப் போகின்ற பாதையானது காவல் துறையினரால் செப்பனிடப்பட்டு, சமனப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஆரம்பப் பள்ளிக்கூட கட்டடம் ஒன்று கட்டி முடிக்கப் பட்டது. அது மட்டுமல்லாமல், கிராம மக்களுக்கு குடி தண்ணீர் கிணறு ஒன்றும் கட்டப்பட்டது. பொதுக் கக்கூஸ் கழிவிடங்களும் கட்டப்பட்டன. இந்த வேலைகளையெல்லாம் செய்து முடிக்க மூன்று மாதங்களாயின. மேச்சேரி ரோடுடன் அமிர்தனூர் என்ற ஊரை இணைக்கின்ற ஒரு கப்பிபோட்ட ரோடு அமைக்கப்பட்டது. வீரபாண்டி என்ற கிராமத்தில் 12 பர்லாங்கு நீளமுள்ள ரோடு ஒன்று போடப்பட்டு வருகிறது. சேலத்தின் ஆயுதப் படையினர் 20 பேர் நாள் ஒன்றுக்கு ஆறு மணிநேரம் உழைத்து இந்த ரோடைப் போட்டுக் கொண்டு வருகின்றனர்.

கோயமுத்தூர் மாவட்டத்தில், பள்ளிப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு பள்ளிக்கூட கட்டிடத்தை காவல் துறையினர் கட்டி முடித்துள்ளனர். பள்ளிப்பட்டியிலிருந்து மேட்டுப்பாளையம்வரை ஒரு ரோடினை 20 ஜவான்கள் போட்டு முடித்துள்ளனர். கோயம்முத்தூர் நகரத்தில் ஒரு குழந்தைகள் பூங்கா ஒன்றினையும் காவல் துறையினர் அமைத்துள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், புதுருதமானூர் என்ற கிராமத்திலிருந்து, ஆரம்ப சுகாதார நிலையத்தினை இணைக்கும் 2½ பர்லாங்க் நீளமுள்ள கிராபெல் போட்ட ரோடு ஒன்றினை, ரூ. 2,000 செலவில் காவல் துறையினர் அமைத்துள்ளனர். அதே ஊரில் மாவட்டக் கழக ஆரம்பப் பள்ளியில் குழந்தைகள் விளையாட்டு மைதானம் ஒன்று ரூ. 1,000 செலவில் அமைக்கப் பட்டு வருகிறது.

போலீஸ்காரர் கட்டிய வீடு

கன்யாகுமரி மாவட்டத்தில், நாகர் கோயிலிருந்து கொளச்சல் செல்லும் பிராதன ரோட்டின் கள்ளக் குறிச்சி என்ற கிராமத்தை இணைத்த 1¼ மைல் நீளமுள்ள ஒரு ரோட்டினை போடுகின்ற வேலையில் காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில், மேல்மாயில் என்ற ஊர் வரையில், 30 ஜவான்களுடைய உதவியுடன், இரண்டு மைல் நீளமுள்ள பாதை ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. கீழ் வைத்தினுங்குப்பம் கிராமத்தில் சில வடிகால்கள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன், இந்தக் கிராமத்தில் ரோடுகள் செப்பனிட்டு, சமநிலைப் படுத்தப்பட்டன. வேலூர் மகளிர் மன்ற கட்டிட காம்பவுண்டுக்குள் வராண்டாவுடன் கூடிய ஒரு நர்சரி பள்ளிக்கூடமும் கட்டப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பல ரோடுகள் காவல் துறையினரால் போடப்பட்டுள்ளன. திருநெல்வேலி, தென்காசி பாதையுடன் வெள்ளங்கோட்டையை இணைக்கும் ஒரு மைல் நீளமுள்ள ரோடு, தென்காசி–திருநெல்வேலி பாதையுடன் நல்லூர் கிராமத்தை இணைக்கும் 5 பர்லாங் நீளமுள்ள பாதை, திருச்செந்தூர்–திருநெல்வேலி பாதையுடன் கறையாடிப்பச்சேரியை இணைக்கும் 2 பர்லாங் நீளமுள்ள பாதை இவைகள் இதில் அடங்கும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில், ஒரு ஜமேதார், 10 ஹெட் கான்ஸ்டபிள்கள், 98 ஜவான்கள் சேர்ந்த ஒரு குழுவினர் ஒரு சார்ஜென்டின் தலைமையில் செம்பரம்பாக்கம் கிராமத்தில் 10 வீடுகள் கொண்ட ஒரு அரிஜனக் காலனியும், ஒரு ஆரம்பப்பள்ளிக்கூடத்தையும், ஒரு வாசகச் சாலை கட்டிடத்தையும் கட்டி முடித்துள்ளனர். பிராதான ரஸ்தாவுடன் இணைக்கின்ற ஒரு இணைப்பு ரஸ்தாவையும் போட்டனர். வேலைச்சேரி கிராமத்தில் காவல் துறையினர் ஒரு கிணற்றை தோண்டினர். இப்பொழுதுள்ள கிராம வைத்திய சாலைக் கட்டிடத்துக்கு மேற்கொண்டு ஒரு ஹாலையும் கட்டியுள்ளனர். கோடம்பாக்கத்தில், ஒரு பர்லாங் நீளமுள்ள ஒரு இணைப்புப் பாதையும் காவல் துறையினர் அமைத்துள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில் மெயின் ரோடுக்கும் கணபதி அக்ரஹாரம் ஹரிஜன் காலனிக்குமிடையே ரோடு போடப் பட்டது.

மதுரை மாவட்டதில், காவல் துறையினர் கரிசல்பட்டி, தாயனேரி கிராமத்தில் அபிவிருத்தி வேலைகளை ஏறுச் செய்துள்ளனர். ஒரு சிறுபாலம் ஒன்றையும்—கிராமத்தை மெயின் டிரங்க்ரோடுடன் இனைக்கும் இணைப்புப் பாதை

கிராம அபிவிருத்திக் கமிஷனரின் கடிதம் :

அடிப்படைப் புள்ளி விவரங்களைச் சேகரித்தல்

பஞ்சாயத்து ஆட்சியின் விசேஷப் பொறுப்பு

அன்புள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு,

கிராமங்களில் வாழும் ஜனங்களின் சரியான எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய, அரசாங்கம் ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்துள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் படி ஆறுமாதத்திற்கு ஒரு தடவை, மக்களின் ஜனன' மரணக் கணக்கை, ஒழுங்காக எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, முதல் முயற்சி, மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இவ்வாண்டு பொங்கல் விழா, அதாவது 14—1—1962 முதல் 30—6—1962 வரையில் உள்ள சுமார் அரை வருஷ காலத்தில், மக்கள் தொகையைக் கணக்கிடுவதற்கு, பஞ்சாயத்துக்களின் உதவியினாலும், வட்டார வளர்ச்சி அலுவலர்களின் மூலமாகவும், தக்க ஏற்பாடுகளைச் செய்ய, தமிழ்நாடு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதைப்பற்றிய அரசாங்க ஆணையின் விவரம், சென்ற மாத "கிராம நல" இதழில் (ஏப்ரல் இதழில்) வெளியாகியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இதைப்பற்றி, உங்கள் கமிஷனர் ஏற்கனவே உங்களைக் கலந்தாலோசித்திருப்பார் என்று நம்புகிறேன்.

கிராம மக்களின் நல் வாழ்வுக்கான திட்டங்களை உருவாக்கிச் செயல் படுத்துகின்ற கூட்டு முயற்சியில், நாம் அனைவரும் ஈடுபட்டுள்ளோம். கிராம அபிவிருத்தி வேலைகள் எல்லாவற்றிற்கும், அங்கே வாழும் மக்களின் சரியான எண்ணிக்கையை அறிய வேண்டியது, அடிப்படையான தேவையாகும். இந்த முக்கியமான புள்ளி விவரங்கள்தான் கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கெல்லாம், மூலாதார.ம். எனவே இந்தப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில், புதிய பஞ்சாய்த்து ஆட்சிக்கும், பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. பொது ஜனப் பிரதிநிதிகளுக்கு இதில் விசேஷப் பொறுப்பு உண்டு. எனவே, இத்துறையில் பல்வேறு அதிகாரிகள் மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களில், நீங்கள் ஒத்துழைத்து உதவி புரிவீர்கள் என்று நம்புகிறேன்.

வருடந்தோரும் வருகின்ற திருவிழாக்களை கிராம ஜனங்கள் சுலபமாக ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். எனவே இந்தப் புதிய கணக்கெடுப்பு, சென்ற பொங்கல் திருவிழாவிலிருந்து தொடங்குகிறது. இதற்கென ஒரு கால அட்டவணை குறிக்கப்பட்டு, விசேஷ ஏற்பாடுகளுடன் பல அதிகாரிகள் இவ்வேலையில் ஈடுபடுவார்கள். இதற்கான பயிற்சி முகாம்களும், கிராம பஞ்சாயத்துக்களின் விசேஷக்கூட்டங்களும் நடைபெற, உத்தரவாகி உள்ளது.

உங்கள் பஞ்சாயத்து யூனியனில் வாழும் பெரும்பாலான ஜனங்களை, நீங்கள் நன்கு அறிந்தவர்கள். பொது நல வேலைகளை முன்னிட்டு, கிராம ஜனங்கள் பலருடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பும், வசதியும் பெற்றிருக்கிறீர்கள். எனவே, கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள், அங்கத்தினர்கள், ஆகிய எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற்று இந்த முக்கிய திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோ. வேங்கடாசலபதி

ஒன்றையும் போட்டுள்ளனர். ஒரு சமுதாய மன்ற ஹாலும் (Community Hall) ஒரு ஹரிஜன் காலனியும் கட்டப்பட்டுள்ளன.

போலீஸ்காரர் காலனி - போலீஸ்காரர்களே கட்டியது.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம் தாலுகாவில் சாலிபகாரன் வரையில் ஆறு பர்லாங் நீளமுள்ள கச்சாரோடு ஒன்று போடப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி தாலூக்காவில் குதிரைச் சர்தல் என்ற கிராமத்தில் ஒரு கிணறு தோண்டப்பட்டுள்ளது. குழந்தைகள் பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மேல் பாதி, பள்ளி குப்பம் ஆகிய இரு கிராமங்களை இணைக்கும் ஒரு மைல் நீளமுள்ள கச்சாரோடு ஒன்றும் போடப்பட்டுள்ளது.

காவல் துறையினரால் செய்து முடிக்கப்பெற்றுள்ள ஏராளமான அபிவிருத்தி வேலைகளின் பயனாக, மக்களிடையே அவர்கள் நன்மதிப்பையும், பாராட்டுதலையும் பெற்றுள்ளனர். அபிவிருத்தி வேலைகள் காவல் துறையினருடன் தோளோடு தோல் சேர்ந்து ஒன்ருக கிராம மக்கள் பணிகள் புரிந்ததின் விளைவாக, காவல்துறையினரை தங்களுடைய சீரிய நண்பர்களாகவும், தங்களுடைய உதவியாளர்களாகவும் மக்கள்—கருதத் தொடங்கி விட்டனர். மக்கள் காவல் துறையினர் ஆகிய இருபாலாரிடையே நல்லதொரு அருமையான நட்புறவினை ஏற்படுத்தித் தருகின்ற ஒரு சூழ் நிலையை சமுதாய அபிவிருத்தி வேலைகள் உண்டாக்கித் தந்துள்ளன.

சிறந்த பணியாற்றும் பஞ்சாயத்துக்கள்

வளர்ந்துவரும் வாஞதிராசபுரம்

(திரு. தங்கமுத்து, வாஞதிராசபுரம், குத்தாலம் பஞ்சாயத்து யூனியன்)

தஞ்சை மாவட்டத்தின் தனிச் சிறப்பு பெற்றது குத்தாலம் வட்டாரம். ஐம்பத்திரண்டு பஞ்சாயத்துக்கள் அடங்கிய இவ்வட்டாரத்தின் வடகிழக்கே மூன்றுகல் தூரத்தில் அமைந்திருக்கிறது வாஞதிராசபுரம் என்ற இந்த கிராமம். சுமார் 1,700 மக்கள் தொகையும் 869 ஏக்கர் விஸ்தீரணமும் கொண்ட இந்த சிறிய கிராமம் தேசிய விஸ்தரிப்பு திட்ட அலுவலர்களை கவர்ந்ததில் வியப்பில்லை தான். ஓய்ந்து கிடந்த மக்களுக்கு உணர்வூட்டப்பட்டது. பஞ்சாயத்து பணியாற்ற துவங்கியது. ஒருசில மாதங்களில் இருண்டு கிடந்த இக்கிராமம் முழுவதும் மின் விளக்குகள் பிரகாசித்தன. ஆர்வம் மிக்க மக்களும் அரிய செயலாற்றும் தலைவர்களும் இருக்கும்போது எந்தக் காரியம்தான் எளிதாக முடியாது என்பதற்கு இது ஒரு எடுத்து காட்டாக அமைந்தது.

பஞ்சாயத்தும்—பணியாற்றும் உறுப்பினரும்

பல ஆண்டுகளுக்கு முன்பே பஞ்சாயத்தாக்கப்பட்ட இந்தக் கிராமம் 1959-ம் ஆண்டு முதல் ஆற்றல் மிக்க தலைவருடனும் பத்து உறுப்பினர்களுடனும் தன் சிறந்த பணியை சீரிய முறையில் செயலாற்றத் தொடங்கியது. இது ஒரு கிராம பஞ்சாயத்தானாலும், கடந்த மூன்றாண்டு காலத்தில் இப்பஞ்சாயத்து சாதித்தவை பல.

விவசாயமும்—பசியின்மையும்

"சுழன்றும் ஏர்பின்னது உலகு" என்ற பழமொழிக்கேற்ப விவசாயத்தையே பிரதானமாக கொண்டது இக்கிராமம். 180-க்கு மேற்பட்ட விவசாய குடும்பங்களின் வாழ்க்கை இன்று வளமாக்கப்பட்டு வருகிறது. இக்கிராம விவசாயிகளின் முன்னேற்றத்தை உயர்த்த இப்பஞ்சாயத்து தீவிரமுயற்சியை மேற்கொண்டுள்ளது. கடந்த ஆண்டில் இப் பஞ்சாயத்து கிராம விவசாய திட்டம் (Village agricultural Production Plan) ஒன்றை தயாரித்தது. இதன் மூலம் இக்கிராமத்தின் உற்பத்தியையும், செலவையும் கணக்கிடப்பட்டது. அதிகப்படியான உற்பத்திக்கு பல அரிய திட்டங்களைச் செயலாற்றி வருகிறது.

தஞ்சையில் 1960-ம் ஆண்டு துவக்கப்பட்ட தீவிர விவசாய சாகுபடித்திட்டம் (Package Plan) இக்கிராமத்தை இணைத்துக்கொண்டது. வறண்டு கிடந்த விவசாயிக்கு வளம் கொழிக்கும்வழியை காட்டியது. பொருக்கு விதைகளும், பூச்சி மருந்தும், ரசாயன எருக்களும், சிறந்த கருவிகளும் போதுமான அளவு விநியோகிக்கப்பட்டன. ஏக்கர் ஒன்றுக்கு நூற்று இருப்பத்தைந்து ரூபாய் வீதம் கடன் வழங்கப் பட்டது. தொழு உரமும், தழை உரமும் அபிவிருத்தி செய்யப்பட்டன. இத்தனை முன்னேற்றங்களுக்கும் இக் கிராம பஞ்சாயத்து தலைவர் திரு. வி. டி. முருகேசன் என்பவரே ஒரு முன்னோடி விவசாயியாக (Progressive Ryot) காட்சி அளிக்கிறார். தன் நிலங்களில் எல்லாவிதமான நவீன முறைகளையும் கையாண்டு இக்கிராம மக்களுக்கு விளக்கி காட்டுகிறார்.

மாற்றுமுறை சாகுபடியும்—மக்களுக்கு வருவாயும்

காவிரி அன்னையின் கரங்களால் கட்டி அணைக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் நெல் ஒருபிரதான சாகுபடியாக இருந்தாலும், கரும்பு சாகுபடியைப் பெரும்பாலோர் பின்பற்றி வருகின்றனர். இதனால் நிலமற்ற பல ஏழைகளின் குடும்பங்களுக்கு விளக்கேற்றி வைக்கப்பட்டது. ஆண்டு முழுதும் வேலை கிடைக்கும் அரிய வாய்ப்பிருக்கும் போது பட்டினி இக்கிராமத்தை விட்டு பறந்தோடியதில் வியப்பில்லைதான்.

குடிநீருக்கு குறையேதுமில்லை

ஒன்பது அழகிய தெருக்களைக்கொண்ட இந்தக் கிராமம் முழுவதும் ஆங்காங்கே கைப் பம்புகளை அமைத்துக் கொடுத்தது இப்பஞ்சாயத்து. ஆனாலும் இக்கிராம மக்களுக்கு தண்ணீரின் வேட்கை தணிந்த பாடில்லை. சுமார் 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மேல் நிலை நீர் தேக்க தொட்டி (Over head Tank) ஒன்றை அமைக்க தேசிய குடிதண்ணீர் திட்டம் முன் வந்தது. அத் திட்டத்தை அன்பு கொண்டு வரவேற்றது இப்பஞ்சாயத்து. செயலாற்றும் திறன்படைத்த இவ்வூர் பஞ்சாயத்துத் தலைவர் பல கஷ்டங்களுக்கிடையே குறுகியகாலத்தில் நீர்த்தேக்கத் தொட்டியை கட்டி முடித்துள்ளார். இன்னும் இரண்டொரு மாதங்களில் அன்பு சுரக்கும் உள்ளங்களுக்கெல்லாம் இன்பம் சுரக்க நீர் கிடைக்கப் போகிறது. இனி எக்காலத்திற்கும் இக் கிராமத்திற்கு தண்ணீர் பஞ்சம் இல்லாமல் செய்ததுடன், இவ்வூரைச் சேர்ந்த சுமார் இரண்டு பர்லாங் தூரத்திலுள்ள அரிசண

G.N.—5

மக்களும் இத் தண்ணீரை குழாய் மூலம் பெற்று குடித்து மகிழ வைத்த பெருமை இப்பஞ்சாயத்தையே சாரும்.

கட்டாயக் கல்வியும்—கடமையுள்ள பெற்றோரும்

கட்டாயக் கல்வி இக்கிராமத்தில் அமுலாக்கப்பட்டு வருகிறது. பஞ்சாயத்துத் தலைவர், கிராம உத்தியோகஸ்தர்கள், ஆசிரியர் ஆகியவர்களைக் கொண்ட சமூகக் கல்வி குழு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் வயதுவந்தும் படிக்க விடாமல் பாதுகாக்கும் பெற்றோர்களை இப் பஞ்சாயத்து அணுகி, அவர்கள் குறைகளைப் போக்க வழி வகுப்பதுடன், படிப்பின் முக்கியத்துவத்தை எடுத்து கூறுகிறது. படிப்பென்றால் பணம் படைத்தோருக்கு மட்டும் தான் என்று நினைத்த எண்ணற்ற ஏழை பெற்றோர்கள் இன்று இன் முகத்துடன் பள்ளிக்கு பிள்ளைகளை அனுப்புவதை காணலாம். பள்ளியில் நடைபெறும் விழாக்களில் பஞ்சாயத்து பெரும் பங்கு கொள்கிறது.

ஐந்து வகுப்புகளேயுள்ள இவ்வூர் ஆரம்பப்பள்ளி பஞ்சாயத்து யூனியன் பள்ளியாக திகழ்கின்றது. ஐந்து வகுப்புக்கு மேல் உயர்கல்வி பெற இக்கிராமக் குழந்தைகள் மூன்று மைல் நடந்து சென்று கல்வி பெற வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மாற நடப்பு ஆண்டில் இப்பள்ளியை ஒரு உயர்துவக்கப் பள்ளியாக மாற்றி அமைக்க பஞ்சாயத்து பெருமுயற்சி எடுத்து வருகிறது. இம்முயற்சி கை கூடுமானால், எண்ணற்ற ஏழைக் குழந்தைகளின் வாழ்க்கை வளமாக்கப்படும்.

மதிய உணவும்—மக்கள் ஆர்வமும்

இப்பள்ளியில் சுமார் 30 மாணவர்களுக்கு மேல் மதிய உணவு அளிக்கப்படுகிறது. இக்கிராம மக்கள் எதிலும் நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்பதை காட்ட ஏராளமான பொருளையும், நிதியையும் நன்கொடையாக அளித்து வருகின்றனர்.

சுத்தம் சோறுபோடும்

இக்கிராமச் சுகாதாரத்தை இப்பஞ்சாயத்து கண்காணித்து வருகிறது. இரண்டு அரை நேர ஊழியர்களை நியமித்து, இக்கிராம துப்புரவு வேலையை செய்து வருகிறது. இக்கிராமத்தைச் சுற்றிலுமுள்ள ஐந்து குளங்களுக்கு அழகிய படித்துறைகளும் பக்கச்சுவர்களும் அமைத்து ஆடுமாடுகள் அசுத்தம் செய்யாமல் பாதுகாத்து வருகிறது. எல்லாக் குளங்களிலும் மீன் வளர்த்து ஆண்டொன்றுக்கு சுமார் எழுநூறு ரூபாய்க்கு மேல் ஆதாயம் பெற்று வருகிறது இப்பஞ்சாயத்து.

அரிசன நலமும்—அரசாங்க வீடு கட்டும் திட்டமும்

இக்கிராம அரிசனங்களுக்கு நல்லாதரவு கொடுத்து வருகிறது இப்பஞ்சாயத்து. செயலாற்றும் இரு அரிசன உறுப்பினர்கள் இப்பஞ்சாயத்தில் அங்கம் வகிக்கின்றனர். குடியிருக்க இடமின்றி தவித்த முப்பது அரிசன ஏழை குடும்பங்களுக்கு அண்மையில் அரசாங்கத்தின்மூலம் இனமாக குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டது. நடப்பு ஆண்டில் அங்கு ஒரு அரிசன காலனியை அமைக்க முயற்சிக்கப்பட்டு வருகிறது. இதையெல்லாம் நோக்குமிடத்து அண்ணல் காந்தியடிகளின் கனவு நனவாகி வருவதை நாம் அறியலாம்.

குடி மராமத்தும்—குடிமக்கள் உதவியும்

இந்த ஆண்டில் இக்கிராம நீர்பாசன வாய்க்கால்கள் முழுவதையும் குடிமராமத்து செய்ய இப்பஞ்சாயத்து தீர்மானித்திருக்கிறது. இதற்கான செலவினத்தை அரசாங்க மானியத்துடன் பிரத்தியேக நிலவரியையும் அளிக்க இக்கிராம மக்கள் முன்வந்துள்ளனர்.

கூட்டுறவும்—குறைவற்ற வாழ்வும்

வாழ்க்கையில் வளம்பெற நினைத்த மக்களுக்கு கூட்டுறவு ஒரு வழிகாட்டியாக வந்தது. "ஒவ்வொருவரும் எல்லோருக்காகவும்! எல்லோரும் ஒவ்வொருவருக்காகவும்" (Each for All and All for Each) என்ற கூட்டுறவு தத்துவம் இக்கிராமத்தில் பூரணமாக நிலவி வருகிறது. 1960–ம் ஆண்டில்தான் இக்கிராமத்தில் ஒரு பல நோக்க கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டதாயினும், இக்கிராமப் பஞ்சாயத்தின் ஊக்கம் மிகுந்த தலைவரே கூட்டுறவு சங்கத்தின் தலைவராக அமைந்தது இக்கிராம மக்களின் நல்லகாலமே!

ஆரம்ப காலத்திலேயே முன்னூறுக்கும் மேற்பட்ட விவசாயிகளை அங்கத்தினராகக் கொண்டு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. ஏராளமான ரூபாய்களை கடனாக வினியோகித்து வருகிறது. கடந்த ஆண்டு காலத்தில் மட்டும் தீவிரசாகுபடித் திட்டத்தின் கீழ் சுமார் 140 விவசாயிகளுக்கு 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் கடன் வழங்கிய பெருமை எல்லோராலும் போற்றக்கூடியதாகும்.

பலநோக்க கூட்டுறவு சங்கம் அதன் பண்புக்கேற்ப விவசாயிகளுக்கு தேவையான ரசாயன உரங்களையும், பிண்ணாக்கு, கலப்பு உரங்களையும், விதைகளையும், விவசாய கருவிகளையும், பூச்சி மருந்துகளையும், மற்றும் சர்க்கரை போன்ற உணவுப் பொருள்களையும் வினியோகித்து வருகிறது. மருந்தடிக்கும் கருவிகள் மூன்றையும், சிறந்த உழவுக்கருவிகள் ஐந்தையும் வாங்கி குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு கொடுத்து வருகிறது.

பலனுள்ள திட்டமும்—பணியாற்றும் தலைவரும்

இக்கிராம கூட்டுறவு சங்கத்திற்கு அரசாங்க மானியத்துடன் சுமார் 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சேமிப்பு கிடங்கு ஒன்றை முப்பது தினங்களில் கட்டி முடித்த பெருமை, பணியாற்றும் திறன் கொண்ட இக் கூட்டுறவு சங்கத் தலைவரையே சாரும். சேமிப்பு கிடங்கை கட்டியதோடு நின்று விடவில்லை இதன் சிறந்த பணி, இந்த ஆண்டு மட்டும் சுமார் 1,600-க்கு மேற்பட்ட நெல் மூட்டைகள் இக்கிராம விவசாயிகளால் சங்கத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அப்படி விற்பனை செய்யும்போது சங்கத்தில் பெற்ற கடன் தவறாது செலுத்தப்படுகிறது. வாங்கிய கடனை நலம்பெற செலவு செய்தமையால் அதன் மூலம் அடைந்த பலனைக் கருதி அவர்கள் கடனை திருப்பிக் கொடுப்பதில் அவர்களுக்கு கஷ்டமே இருக்கவில்லை. ஆனால் கொள்ளை லாபமடித்து வந்த வியாபாரிகளுக்கு பேரதிர்ச்சியைத் தந்துள்ளது இச்செயல். நடப்பு ஆண்டில் இக்கிராமத்திலிருந்து ஒரு மூட்டை நெல்கூட தனிப்பட்டோரிடம் விற்கமாட்டோம் என்று உறுதி கூறுகின்றனர் இக்கிராம மக்கள்.

"கடிதக் கருத்தரங்கு"

பஞ்சாயத்துக்களின் வருமானத்தைப் பெருக்கச் சிறந்த திட்டம்

அன்புள்ள ஆசிரியருக்கு,

பஞ்சாயத்துக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்குரிய சிறந்த திட்டமொன்று தற்பொழுது திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியனில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்த யூனியனில் உள்ள 16 பஞ்சாயத்துக்களிலே மொத்தம் 140 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில், சவுக்கு, பசுந்தழை, பழச் செடிகள் முதலியவை, இத்திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டிருக்கின்றன. சவுக்குபோன்ற விறகுக்குப் பயன்படும் மரங்களை இப்புறம்போக்கு நிலங்களில் வளர்த்துப் பராமரிக்கும் பஞ்சாயத்து ஒவ்வொன்றுக்கும் நான்கு ஆண்டு காலத்துக்கு பிறகு ஏக்கருக்கு 2,000 ரூபாய வீதம் வருமானம் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இந்த யூனியனில், மொத்தம் 50 ஏக்கர் புறம்போக்கு நிலப்பரப்பில் விறகுக்குப்பயன் படும். மரங்களை வளர்த்துவரும் பஞ்சாயத்துக்களுக்கு, மூன்றாவது திட்ட கால இறுதியில், ஒரு லட்சம் ரூபாய், இதன் மூலம் கிட்டுமென எதிர்பார்க்கலாம். கனி தரும் மரங்களை 90 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில் வளர்த்து வரும் மற்ற பஞ்சாயத்துக்களுக்கு, நான்கு ஆண்டு காலத்துக்குப் பிறகு, வருடா வருடம் 18,000 ரூபாய் வருமானம் கிட்டுமென எதிர்பார்க்கலாம். வரி விதிப்பின் மூலம் வருமானத்தை அதிகரிக்காது, உற்பத்திப் பெருக்கத்தின் மூலம் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வது சிறந்த முறைதானே. திருக்கழுகுன்றம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள பஞ்சாயத்துக்கள் அனைத்திலும், இச் சிறந்த திட்டம் ஓரிருஆண்டுகளுக்குள் விஸ்தரிக்கப்பட்டுவிடும். ஏனெனில், சவுக்கு மரங்களையும், மாம்பழங்களையும் விற்று வருமானத்தைப் பெருக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருப்பதால், இத் திட்டம் விஸ்தரிக்கப்படாத இதர பஞ்சாயத்துக்களும் தங்கள் தங்கள எல்லைகளிலுள்ள புறம்போக்கு நிலங்களில், சவுக்கு போன்ற விறகுக்குரிய மரங்களையும், மாமரம் போன்ற கனி தரும் மரங்களையும் நட்டு வளர்த்துப் பயன்பெறும் என்பதில் ஐயமில்லை.

தலைவர்,
திருக்கழுக்குன்றம் பஞ்சாயத்து யூனியன்.

மனமகிழ் மன்றமும்—மலர்ப் பூங்காவும்

நாள் முழுதும் உழைத்தலுத்த உழவர் பெருங்குடி மக்கள் ஓய்ந்துபோய் வீடு திரும்புகின்றனர். களைப் படைந்த மக்களுக்கு களிப்பூட்டுகிறது இப்பஞ்சாயத்து. மக்கள் மனமகிழ் மன்றம் ஒன்றை வட்டார வளர்ச்சி திட்ட உதவியுடன் அழகு பெற கட்டியுள்ளது. அன்றாட செய்தித் தாள்களை அவர்கள் படித்து மகிழவும், மாலை நேரங்களில் வானொலிமூலம் இன்னிசை கேட்டு இன்புறவும் வழிவகுத்துள்ளது. இத்துடன் இக்கிராமத்தின் மற்றொரு பகுதியில் பஞ்சாயத்து பொதுப்பூங்கா ஒன்றை அமைத்துள்ளது. இங்கு ஒரு வானொலிப் பெட்டியும் இயங்கி வருகிறது. இந்த கிராமத்தில் நடைபெறும் எல்லாவித கூட்டங்களுக்கும், விழாக்களுக்கும் இப்பூங்கா வசதி செய்கிறது. இங்கு ஒரு விழா மேடை அமைக்க இப்பஞ்சாயத்து தீர்மானித்திருக்கிறது.

இளைஞர் சங்கமும்—மாதர் மன்றமும்

இருபது உறுப்பினர்களைக் கொண்ட இளம் விவசாயிகள் சங்கம் ஒன்று இக்கிராமத்தில் உள்ளது. இவ்வூர் பஞ்சாயத்து மூலம் இச்சங்கத்திற்கு தினசரி பத்திரிகைகள் வினியோகிக்கப்படுகின்றன. ஓய்வு நேரங்களிலும் இரவிலும் ஏராளமான வாலிபர்கள் இங்கு படித்து வருகின்றனர். அவ்வப்போது உண்டாகும் கிராம பொதுக் காரியங்களில் இச்சங்க உறுப்பினர்கள் பெரும் பங்குகொண்டு சேவை செய்து வருகின்றனர். மற்றும் இக்கிராம அரிசன காலனி பெண்கள் மாதர் சங்கம் ஒன்றை நடத்தி வருகின்றனர். இதில் எல்லா பெண்களும் பங்கு கொள்வதுடன் சீட்டு முறையில் சங்கத்திற்கு நிதி சேர்த்து வருகிறார்கள்.

பஞ்சாயத்து யூனியனும்—பஞ்சாயத்துக்களும்

கடந்த 1961 ஏப்ரலில் குத்தாலம் வட்டாரம் பஞ்சாயத்து யூனியனாக மாறியது. 1959–60 ம் ஆண்டில் சிறந்த பணியாற்றும் வட்டாரம் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான சுழலும் கேடயத்தை அரசாங்கம் இவ்வட்டாரத்திற்கு அளித்துள்ளதென்றால், வாணாதிராசபுரம் போன்ற செயலாற்றும் தலைவர்களைக் கொண்ட சிறந்த பஞ்சாயத்துக்களின் சேவையே அதற்குக் காரணமாகும்.

மீன், கடல் பாசி உரங்கள்

[திரு ஆ. து. வெங்கடசாமி]

நமது நாட்டின் முக்கிய பிரச்சினை உணவு உற்பத்தியை அதிகரித்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது. இப்பிரச்சினையில் முக்கியமானது பயிர்த்தொழில். பயிர்களுக்கு முக்கியமாக உரம் தேவை. கிராமாந்தரங்களில் வேண்டிய உரத்தை அங்கேயே தயார் செய்வதில் தமிழ் நாடு முதன்மையாக இருக்கிறது. பயிர்களுக்கு முக்கியமாக "நைட்ரஜன்" "பாஸ்பரஸ்", "பொட்டாஷியம்" இவைகள் தேவை என்பது ஒவ்வொரு விவசாயிக்கும் தெரிந்தது. இந்த "நைட்ரஜன்" பசுந்தாள் உரம், கம்போஸ்ட் உரம் மற்றும் செயற்கை உரங்கள் மூலம் கிடைக்கின்றன.

மீன் உரம்

மீன் உரத்தில் பயிர்களுக்குத் தேவையான "நைட்ரஜன்" பாஸ்பரஸ், "பொடாஷியம்" இவைகள் வேண்டிய அளவுக்கு இருக்கின்றன. மேற்குக் கரை பிரதேசத்தில் மீன்களிலிருந்தும், மீன் கழிவுப் பொருள்களிலிருந்தும் மீன் உரம் தயாரிக்கப்பட்டு, தென்னை, காப்பி, தேயிலை, புகையிலை தோட்டங்களில் அதிக அளவில் நல்ல பலனுடன் உபயோகிக்கப்பட்டு வருகிறது. மீன் உரங்கள் உபயோகித்தால் நிலங்கள் நிரந்தரமாக பக்குவப்படுத்தப்பட்டு விளைச்சலை அதிகமாக்கும். இந்த உரம் நிலத்தையோ, பயிர்களையோ சேதப்படுத்துவதில்லை.

உரம் தயார் செய்யும் முறை

மீன் உரம் இரண்டு விதமாக தயார் செய்யப்படுகிறது. ஒரு வகை, மீன்கள், மீன் கழிவுப்பொருள் முதலியவைகளை நேரடியாக கடற்கரையில் வெய்யிலில் உலர்த்துவது. மற்றொன்று கிராமாந்திரங்களில் கம்போஸ்டு உரம் தயாரிப்பது போன்றது. போதிய ஆழமுள்ள குழிகள் வெட்டப்பட்டு, உட்புறத்தில் குழியைச் சுற்றி ஓலை பாய்கள் வைத்து, மீனின் கழிவுப்பொருள்களைப் அடுக்கடுக்காக மாறிமாறி போட்டு மூடிவிடவேண்டும். நான்கு முதல் ஆறு வாரங்களுக்குப் பின் இந்த குழிகளிலிருந்து மீன் உரம் எடுக்கப்பட்டு உலர்த்தப்பட வேண்டும். இந்த இரண்டுவித உரங்களையும் மாறிமாறி உபயோகப்படுத்தலாம்.

மீன் உரம் உபயோகிக்கும் விதம்

ஒரு ஏக்கராவுக்கு வயலில் 4½ முதல் 5 குண்டல் எடையுள்ள மீன் உரம் உபயோகிக்கலாம். தோட்டப் பயிர்களுக்கு 5 முதல் 6 குண்டல், கரும்பு பயிருக்கு 1 முதல் 1·25 குண்டல், தென்னை பயிருக்கு ஒரு மரத்திற்கு ஒரு வருடத்திற்கு 2 முதல் 2·56 கி. கிராம், புகையிலைக்கு ½ டன் முதல் 1 டன் வரை, தேயிலை, காப்பி முதலியவைகளுக்கு ½ டன் முதல் 1 டன் வரை மீன் உரம் உபயோகிக்கலாம்.

கடல்பாசி உரம்

நமது மாகாணத்தில் தஞ்சாவூர், இராமனுதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கடல்பாசி ஏராளமாக உற்பத்தியாகின்றன.

சைனா, ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளில் இந்த கடல்பாசிகளை உலர்த்தியும் சமைத்தும் உண்பார்கள். ஆனால் நம் நாட்டில் மக்கள் இதை உண்பதில்லை. இந்த கடல் பாசியிலிருந்து ஆல்ஜின், அயோடின், அகர் முதலிய பொருள்கள் எடுக்கலாம் என்று ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவைகள் நமக்கு எத்தனையோ விதத்தில் உபயோகப்படும்.

மேலும் இந்த பாசிகள் மூலம் உயர்ந்த எரு தயார் செய்ய முடியும். வெளிநாடுகளில் பாசி எரு பழைய காலத்திலிருந்தே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. நம் நாட்டில் இந்த உரம் சிறிது காலத்திலிருந்தே உபயோகிக்கப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த உரம் தென்னை மரங்களுக்கு உபயோகிக்கப்படுகிறது. மரத்தைச் சுற்றி 3 அடி முதல் 4 அடி தூரத்தில் வட்ட வடிவமாக இரண்டு அடி ஆழமுள்ள பள்ளம் வெட்டப்பட்டு உலர்ந்த கடல் பாசிகள் போட்டு மூடிவிடப்படும். இதனால் தென்னை மரங்களின் நல்ல பலன் கிடைத்துள்ளது.

உரம் செய்யும் விதம்

கடல்பாசிகள் இரண்டு மூன்று நாட்கள் நன்றாக உலர்த்தப்பட்டப் பிறகுநல்ல தண்ணீர் மேல் தெளிக்கவேண்டும். பிறகு 6 அங்குலம் கடல்பாசி 1½ அங்குலம் உலர்த்தப்பட்டு பொடி செய்யப்பட்ட சாணம் இவைகளை மாறி மாறி 6 அடி வட்டம் 4 அடி உயரம் வரும்வரை வைக்க வேண்டும். இந்த மொண்டுகள் மேல் நல்ல நல்ல களிமண் பூசி இடைவெளியில்லாமல் மூடிவிட வேண்டும். இந்த மொண்டின்மேல் அவ்வப்போது தண்ணீர் தெளிக்கவேண்டும். இரண்டு மாதம் சென்ற பிறகு கடல் பாசி பக்குவமடைந்த உரமாக உபயோகிக்கத் தகுதியுள்ளதாக ஆகும்.

மிளகாய், பப்பாளி, எலுமிச்சை, மரவள்ளி முதலிய பயிர்களுக்கு இந்த உரம் உபயோகித்ததில் பெருவாரியான அளவுக்கு பலனளித்துள்ளது.

(22-ம் பக்கம் பார்க்க)

பஞ்சாயத்துக்களும் கிராமக் கைத்தொழில்களும்

(திரு டி. ஜனார்தனன் நாயர், உப தலைவர், கூடலூர் பஞ்சாயத்து யூனியன், நீலகிரி மாவட்டம்)

பண்டைக்காலத்துக் கிராமக் கைத்தொழில்கள் வளர்ச்சிக்கென கிராமக் கைத்தொழிற்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. போதிய ஆதரவின்றி மறைந்துக் கொண்டிருக்கும் பழைய தொழில்களையும், நல் வாய்ப்புள்ள புதிய சிறு கிராமத் தொழில்களையும் ஆதரித்து வளர்ப்பதே இக் கிராமக் கைத்தொழிற் குழுவின் கடைமையாகும். இத்தகைய தொழில்களுக்குத் தேவையான நிதி உதவியை மானியமாகவும், கடனாகவும் இந்தக் குழு அளிக்கிறது.

ஆனால் இத்தகைய தொழில்களைத் துவக்குவதற்குரிய வாய்ப்புகளையும், வாய்ப்புகளையறிந்து துவக்கியபின், நன்னிலையில் நடத்தவேண்டிய பொறுப்பினையும் நமது புதிய நிர்வாக முறையில் பஞ்சாயத்துகளே பெற்றுள்ளன. பஞ்சாயத்துகளுக்கு இத்துறையில் தேவையான உதவிகளைச் செய்ய அரசாங்கம் அலுவலர்களை நியமித்துள்ளது.

குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் கிடைக்கக்கூடிய பொருள்களையும், அப்பொருள்களைக்கொண்டு எந்தெந்தத் தொழில்களை ஆரம்பிக்கமுடியும் என்பதையும்பற்றி அலுவலர்கள் ஆலோசனை கூறுவர். மேலும் அவ்வகைத் தொழில்களுக்கு எந்தெந்த நிறுவனங்களிலிருந்து நாம் நிதிஉதவி பெறமுடியும் என்பதையும், தொழில்களைத் துவக்கும் ஆர்வமுள்ளவர்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்து மன்றங்களுக்கும், அரசாங்கம் அலுவலர்கள் ஆலோசனை கூறுவார்கள்.

அத்தகைய தொழில்களை ஆரம்பித்து வெற்றிகரமாக நிர்வகிக்க அரசாங்க அலுவலர்களுக்கு மட்டுமன்றி அவ்வட்டாரத்திலுள்ள தொழில் வல்லுனர்கள் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகிய இவைகளுடைய பொறுப்பும் ஆகும். புகைவண்டி ஒழுங்காக ஓட இரண்டு தண்டவாளங்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இந்த இரு துறையினரது தொழில்கள் இலாபகரமாக நடப்பதற்கு.

பஞ்சாயத்து யூனியன்களின் நேரடி நிர்வாகத்தில் இயங்கும் சிறு தொழில்களை இலாபகரமாக நடத்துவதற்குத் தடையாகப் பல இடையூறுகள் இருக்கின்றன. தொழிலகத்திற்கு அவசியமான மூலப்பொருள்களைத் தேவையான காலத்தில் அரசாங்க அனுமதி கிடைக்காத காரணத்தினால் வாங்க இயலுவதில்லை. இதுபோன்றே பழுதுபட்டுள்ள பொறிகளுக்குத் தேவையான உறுப்புக்களை வாங்கி மாற்றிச் செப்பனிடவும் சில சமயங்களில் இயலாது போய்விடுகிறது. பொது நிதியைச் செலவு செய்யும்போது போதிய பொறுப்பும், கவனமும் முன்னெச்சரிக்கையும் அவசியம் தான். ஆனால் முன்னெச்சரிக்கை என்ற பெயரில் தவிர்க்கக்கூடிய பொருள் இழப்பை தவிர்க்காது இருத்தல் ஓர் தவறு மட்டுமல்ல, தண்டனைக்குரிய குற்றமாகும். உதாரணமாக ஒரு தொழிலகத்திற்கு ஒரு பணியாளை மாதச் சம்பளத்தில் அரசாங்கம் அனுமதித்துள்ளது. ஆனால் அத்தொழிலகத்திலுள்ள இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக வழக்கமாக கிடைக்கக்கூடிய உற்பத்திப் பொருளில் பாதியளவே கிடைக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் மாதச் சம்பளத்திற்கு பணியாளை நியமிப்பதைவிட தினக்கூலிக்கு பணியாள் நியமிப்பது இலாபகரமாக இருக்கும். அரசாங்க ஆணையில் தினக்கூலி நியமிக்க ஒதுக்கீடு (Provision) இல்லை என்று கூறி அத் தொழிலகத்தையே மூடி வைத்திருப்பதைவிட, தினக் கூலியை நியமித்து தொழிலைத் தொடர்ந்து நடத்துவது இலாபகரமாக இருக்கும். இவ்வாறு தொழிலைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே அரசாங்கத்தின் அனுமதிக்கு விண்ணப்பித்து அதைப் பெறுதல் நலமாகும். இத்தகைய அதிகாரத்தை அந்தந்த வட்டார அலுவலர்களுக்கு அளிப்பது மிகவும் அவசியம். அலுவலர்கள் நமக்கு எதற்கு வீண் தொந்தரவு, அரசாங்க ஆணை வந்த பின்னர் பார்த்துக்கொள்ளுவோம் என்று வாளாயிருந்தால் வீணாகத் தொழில், நிலயத்திற்கு இழப்பு ஏற்படும்.

இது போன்றே இயந்திரத்தைப் பழுது பார்த்து மாற்று உறுப்புக்களை வாங்கிப்போடும் பணியிலும் நிகழ்கிறது. இயந்திரத்தின் உறுப்புக்கள் பழுது பட்டுள்ளன என்று அதை இயக்குபவன் அறிவிக்கிறான். ஆனால் அங்குள்ள அலுவலரோ அவனுடைய போக்கை ஒத்துக்கொள்ளாது வேறொரு இடத்திலுள்ள ஒரு அதிகாரி வந்து அது சரியில்லை என்று சொன்னபின்னர் தான் மாற்ற வேண்டும் என்று கூறுகிறார். அந்த அதிகாரியோ பலமுறை மடல்கள் மூலம் அறிவித்தும் ஏனோ வர இயலாதவராக இருக்கிறார். இத்தகைய சந்தர்ப்பங்களில் தனியார் துறையில் உடனே வேண்டிய பொருள்களை வாங்கி இயந்திரத்தை செப்பனிட வசதியுள்ளது. ஆனால் பொதுத் துறையிலோ அத்தகைய வசதிகள் இல்லை. ஆகவே போதிய முன்னெச்சரிக்கையுடன் இத்தகைய தேவையான செயல்களைச் செய்து தொழில் நிதி இழப்பு ஏற்படாதபடி தடுக்கும் வாய்ப்பையும், வசதியையும் பொதுத் துறையிலுள்ள அலுவலர்களுக்கும் ஏற்படுத்த வேண்டும்.

கிராம சேவகர்களும், ஊராட்சி மன்றங்களும், பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களுக்குப் பல துறைகளிலும் போதிய உதவிகளை அளித்து வட்டார வளர்ச்சிக்கு உதவ வேண்டும் என்பதுதான் பஞ்சாயத்து யூனியன்களை அமைத்ததின் அடிப்படை நோக்கமாகும்.. பஞ்சாயத்து யூனியனின் பொறி இயல் வல்லுனர் கல்வி விஸ்தரிப்பு அதிகாரி, கதர் வளர்ச்சி அதிகாரி, கம்போஸ்ட் உர மேற்பார்வையாளர் போன்ற அரசாங்க

அலுவலர்களுக்கு பஞ்சாயத்துக்கள் கிராம சேவகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு கிடைக்குமளவிற்கு கைத் தொழில் விஸ்தரிப்பு அதிகாரிக்குக் கிடைப்பதில்லை. உதாரணமாக, ஒரு தொழில் நிலையத்திற்குத் தேவையான மூலப் பொருள் ஒன்று பஞ்சாயத்தில் கிடைக்கிறது. அம்மூலப் பொருளை வாங்கி அளிக்கும்படி கைத்தொழில் விஸ்தரிப்பு அதிகாரியால் ஊராட்சி மன்றத் தலைவர், நிர்வாக அதிகாரி ஆகியோர் வேண்டப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் பஞ்சாயத்து யூனியனிலுள்ள அத் தொழில் நிலையத்திற்கு விற்க நேர்ந்தால் தங்களது ஊராட்சி மன்றத்தின் வருவாய் குறையும் என்று தவருகக் கருதி, அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வதில்லை. பிற இடங்களில் விற்கும் விலைக்கே அம் மூலப் பொருளை வாங்கிக் கொள்ளுவதாக வாக்களித்தாலும்கூட அவர்கள் அதை நம்புவதில்லை. எக்காரணங்களால் அவர்கள் இவ்வாறு நினைக்கிறார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் இணைந்து செயல்பட வழி வகைகளைக் கண்டால் அது நாட்டின் நலத்திற்கும் மக்கள் வளம் பெற்ற வாழ்வு நடத்தவும் மிகவும் உறுதுணையாக இருக்கும்.

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு உரங்களின் விகிதாசாரச் சத்துக்கள் கீழே குறிப்பிட்டுள்ளது:—

உரத்தின் பெயர்.	நைட்டிரஜன்.	பாஸ்பரஸ்.	பொடாஷியம்.
1. விளைநில உரம்	1.22	0.62	1.20
2. பசும் தழைகள்	0.8	0.62	0.2
3. நகராட்சி கழிவுப் பொருட்கள்.	0.4	0.6	0.4
4. எண்ணெய் பாளங்கள்.	7.6	1.3	..
5. உலர்த்தப்பட்ட மீன் உரம்.	6.8	7.1	..
6. கழிவு மீன் உரம்	2.9	1.7	0.6
7. உலர்த்தப்பயட்ட கடல் பாசிகள்.	1.4	0.2	3.0
8. மக்கிய கடல் பாசிகள்	1·6	0·6	0·9
9. நவச்சார உரம்	21·6	..	..
10. எரிபொருள்	22·0	..	..

தற்பொழுது தமிழ்நாடு மீன்துறையினுல் அதிராமபட்டிணம், இராமேஸ்வரம், துத்துக்குடி முதலிய இடங்களில் இந்த உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மீன்உரம் ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 145 விகிதமும் மக்கிய கடல்பாசி உரம் ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ. 50 வீதமும் விற்பனை செய்யப்படுகின்றது. வேண்டுவோர் கீழே குறித்துள்ள விலாசத்திற்கு எழுதித் தருவித்துக் கொள்ளவும் :

கண்காணிப்பாளர்,
மீனளத் தொழில் நுட்ப நிலையம்,
தூத்துக்குடி–1.

முக்கிய அறிவிப்பு

ஆரம்பக் கல்வி—தொடர் கட்டுரை

கிராமத்தில் திறம்பட இயங்கவேண்டியவை மூன்று. (1) பஞ்சாயத்து (2) பள்ளிக்கூடம் (3) கூட்டுறவுச் சங்கம். இம் மூன்று நிறுவனங்களுக்கும் அச்சாணி போன்றது பள்ளிக்கூடம். பள்ளிக்கூடத்தை ஒரு தெய்வீக மணம் கமழும் இடமாக, மனிதத் தன்மை வாய்ந்த கலைக் கோயிலாக, புதிய சமுதாயம் உருவாக்கப்படும் சிற்பச் சாலையாக, ஒவ்வொருவரும் கருதவேண்டும்.

தொடக்கக் கல்வி பற்றிய விளக்கங்களும், பயனுள்ள விஷயங்களும் 'கிராமநல'த்தில் தொடர்ந்து வெளிவர ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இத் தொடர் கட்டுரைகள் ஜூலை இதழ் முதற்கொண்டு வெளிவரும். கல்வித்துறைச் சம்பந்தப்பட்டவர்கள், குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்கள் இத் தொடர் கட்டுரையின் மூலம் மிகுந்த பயனைப் பெறுவார்களென நம்புகிறோம்.

—ஆசிரியர்



'மதிய உணவுத் திட்ட'த்தினை வெற்றிகரமாக நடத்தி வைக்க வேண்டியது பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் பொறுப்பு. கிராமப்புறங்களில் நடைபெறும் மதிய உணவுத் திட்டம்; கிராமப் பஞ்சாயத்துத் தலைவரின் மேற்பார்வையில் நடைபெற, அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கிராமப் புறங்களில் சுகாதாரம் சீர்கேடான நிலையில் இருந்த காலம் மாறி, இப்போது, கிராம மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சியின் காரணமாகவும், வைத்திய வசதிகள் பெருகியிருப்பதாலும், கிராம மக்களின் சுகாதாரம், புதிய பஞ்சாயத்து ஆட்சியில், நல்ல முறையில், பேணிப் பாதுகாக்கப்படுகிறது.



கோவை மாவட்டத்தில் பஞ்சாயத்து அபிவிருத்தி

பெரியநாயக்கன்பாளையம் பஞ்சாயத்து யூனியன்

1. பள்ளிக்கூட மதிய உணவுத் திட்டத்திற்கென்று, நிலத்தைத் தானமாக, அநேகர் வழங்கியுள்ளனர். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மதிய உணவுத் திட்டத்திற்கென்று, சுமார் ஐந்து ஏக்கர் நிலமாவது பள்ளிக்கூடத்திற்குத் தானமாக வழங்க வேண்டுமென்று நிதியமைச்சர் வேண்டுகோள் விடுத்திருப்பது, அறிந்ததே.

2. கருமாரப் பட்டறை—பயிற்சி நிலையம். ஏணிகள், உழவுத் தொழிலுக்கான நவீன கருவிகள் செய்வதற்கு, கிராம இளைஞர்க்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

3. கூட்டுறவுச் சங்கம் நடத்துகின்ற விவசாயப் பண்ணை, வெற்றிகரமாக நடைபெறுகிறது.

5. வெள்ளத் தடுப்புக்கென கரை எழுப்ப, புதிய பஞ்சாயத்து ஆட்சி உதவி புரிந்தது—கிராமங்கள் தண்ணீரில் மூழ்காமல் இருக்க, மாவட்டக் கலெக்டரின் விசேஷ சிரத்தையால் அமைக்கப்பட்ட அணை கரை.

பவானி சாகர் பஞ்சாயத்து யூனியன்

4. மேல் மட்டத் தண்ணீர்த் தொட்டி அமைக்கும் வேலை, பஞ்சாயத்துத் தலைவர் மேற்பார்வையில் சீராக நடைபெறுகிறது.

(விவரம் : 12-ம் பக்கம் கட்டுரை)

1. சத்தியமங்கலம் பஞ்சாயத்து யூனியனில் ஒரு காட்சி—கிராமங்களில் விவசாய வளர்ச்சிக்கென்று மின்சார வசதி அளிக்கப்படுகிறது.
2. பெரிய நாயக்கன் பாளையம் பஞ்சாயத்து யூனியனில், செலவில் சிக்கனமாகவும், தரத்தில் குறையாத வகையிலும் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களுள் ஒன்று.
3. பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் உருவாகின்றன—ஈரோடு பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தின் எழில் தோற்றம்.
4. அரிஜனங்களுக்கு வீட்டு வசதிகள்......எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் செய்து தரப்படுகின்றன.
5. பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் சிலவற்றில், கோழிப் பண்ணைகள் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன.



கிராமக் கைத்தொழில்கள் பெருகி வளர வேண்டும். அன்றுடத் தேவைகள் எல்லாம் கிராமங்களிலிருந்தே கிடைக்க வேண்டும். கிராமக் கைத்தொழில் வளர்ச்சி பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

கிராமப் பொருளாதாரம் வளரவேண்டுமென்றால், நல்ல பாதை வசதிகள் அவசியம் தேவை. கிராம மக்களின் பொருளாதார நிலை சீர்பட, எல்லாக் கிராமங்களும் ரோடுகள் மூலம் இணைக்கப்பட வேண்டும்.

பொதுஜன விஞ்ஞானம் :

அறிவியல் கட்டுரை : 10

ஐவகை ஆற்றல் – நிலம்

[பேராசிரியர் ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ., —அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.]

[கடந்த மார்ச் இதழில் வெளிவந்துள்ள "ஐவகை ஆற்றல்—நிலம்" என்ற கட்டுரையின் தொடர்ச்சியாக உள்ளது, கீழ்க்காணும் கட்டுரை. நிலத்தின் சிறப்பியல்புகளையும், விஞ்ஞான உண்மைகளையும் கட்டுரையாசிரியர் விளக்கமாகவும், தெளிவாகவும் கூறியுள்ளார். "ஐவகை ஆற்றல்" என்ற தொடரில் இதுவரை வெளிவந்துள்ள கட்டுரைகளைப் பற்றி, வாசகர்கள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

—ஆசிரியர்]

நிலத்தின் அடியில் என்ன இருக்கிறது என்பதை அறிவதற்கு நிலக்கரியையும் வைரத்தையும் தோண்டி எடுப்பதற்கு வெட்டப்பட்ட சுரங்கங்கள் பெரிதும் உதவி அளித்தன. நிலத்தை சிறிது ஆழம் தோண்டியவுடன் மணல், களிமண், சிறு கற்கள், சுண்ணாம்பு காரை அழுகி மலினமான மரம் செடிகள் இவை எல்லா இடங்களிலும் தோன்றுவதைக் காணலாம். நில மட்டத்தின் கீழ் சுமார் நானூறு அடி ஆழம் வரை களிமண் இருப்பதையும் அதற்கும் கீழ் காரைப் படலங்கள் இருப்பதையும் கவனித்தார்கள். சாதாரணமாக நாற்பது ஐம்பது அடி ஆழம் தோண்டியவுடனேயே தண்ணீர் ஊற ஆரம்பித்து விடுகிறது. காரைப்படலம் சுமார் எண்ணூறு அடி ஆழம் வரை வியாபித்து இருப்பதையும் அதற்கும் கீழே பாறுங்கற்களால் ஆன படலம் தென்படுவதையும் கவனிக்கலாம். இவற்றுக்கும் கீழே மற்றொரு வகைப் பாறைகள் தென்படுவதை கவனித்தார்கள். பூமியின் மேலோட்டில் பாறைகளே மிகுந்து தென்படுவதை உணர்ந்து விஞ்ஞானிகள் நிலத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் அறிவதற்கு இப்பாறைகளின் இயல்புகளை முதலில் தெரிந்து கொள்ள வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தனர். பாறைகள் எல்லாம் கனிப் பொருள்களினாலேயே [Minerals] அமைந்து இருப்பது தெரிய வந்தது. உலகில் நாம் காணும் சகல விதமான பொருள்களையும் சுமார் தொண்ணூற்றிரண்டு வகை தாதுப் பொருள்களிலிருந்து [Elements] பெற்று விடலாம் என்பதை விஞ்ஞானிகள் அறிந்தனர். பிராணவாயு, இரும்பு, கரி, தங்கம், வெள்ளி முதலியன தாதுப் பொருள்களுக்கு உதாரணங்கள். இத் தாதுப் பொருள்களை சேர்ந்த கூட்டுப் பொருள்களே கனிப் பொருள்களாக எங்கும் தென்படுகின்றன. இக் கனிப் பொருள்கள் பெரும்பாலும் படிக உருவங்கள் கொண்டிருக்கின்றன. படிக உருவங்களின் வேறுபாட்டை கொண்டு பாறைகளை எளிதாக வகைப் படுத்தலாம். மேலும் பாறைகளின் தோற்றத்தில் ஏற்படும் நிற பேதங்கள், கடினத் தன்மை முதலிய பௌதிக பண்புகளில் ஏற்படும் பேதங்கள் இவற்றைக் கொண்டும் பாறைகளை எளிதாக வகைப் படுத்த முடியும் என்பதை விஞ்ஞானிகள் உணர்ந்தனர்.

பூமியின் மேலோட்டில் தென்படும் பாறைகள் மூன்று வகைகளாக அமைந்திருப்பது தெரிய வந்தது. முதல் வகைப் பாறைகள் கனமாகவும், சீரோத்த அமைப்புடன் இருப்பதினால் மற்ற இரண்டு வகைகளிலிருந்தும் இவற்றை எளிதாக பிரித்து விடலாம். இவை மிகப் பண்டைக் காலத்தில் உருக்கு திரவமாக இருந்த உலோக சிலிகேட் [Silicate] பொருள்கள் ஆறி இருகியதனால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இவ் வகை பாறைகளே பூமியின் மேற் பரப்பில் எங்கும் தென்படுகின்றன. பூமியை சூழ்ந்துள்ள காற்று மண்டலம் ஏற்பட்டவுடன் காலப்போக்கில் இப்பாறைகள் சிதைந்து அவ்வாறு சிதைந்த பகுதிகளை ஆங்காங்கே ஆறுகள் அடித்துக் கொண்டு செல்ல, அவை படலம் படலமாக படிந்ததின் விளைவாக இரண்டாவது வகைப் பாறைகள் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இவ்விரண்டாவது வகைப் பாறைகளுக்கு நிறப் பண்பு ஒரு தனிச் சிறப்பு. இவ்விரண்டு வகைப் பாறைகளும் தட்ப வெப்ப மாறுதல்களுக்கு நீண்ட காலம் உட்படும் போது மூன்றாவது வகைப் பாறைகள் தோன்றியிருக்க வேண்டும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இம் மூன்று வகைப் பாறைகளுக்கும் இக்னியஸ், [Igneous], ஸெடிமெண்டரி, [Sedimentary], மெடமார்பிக், [Metamorphic], என்ற சிறப்புப் பெயர்களை இட்டு வகைப் படுத்தியுள்ளார்கள். ஓரிடத்தில் நிலத்தின் அடியில் பாறைகள் அமைந்துள்ள விதத்தை ஒட்டி நீர் படிவு மட்டதின் ஆழம் மாறுபடும். இந் நீர் படிவு மட்டத்திற்குச் சற்று கீழ் வரை கிணறுகளைத் தோண்டும் போது அவற்றிலிருந்து நாம் தண்ணீரை எளிதாகப் பெறுவது சாத்தியமாகிறது. இக் கிணறுகளைத் தவிர ஆர்டிஷியன் கிணறுகள் என்ற மற்றொரு வகைக் கிணறுகள் உண்டு. இவை ஊற்றுக் கிணறுகள்; எப்போதும் தண்ணீர் பீறிட்டுக் கொண்டே இருக்கும். முதன் முதலில் பிரான்ஸ் தேசத்தில் ஆர்டாய் [Artois] என்ற இடத்தில் இக் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டதினால் இதற்கு ஆர்டிஷியன் கிணறு என்ற பெயர் வந்தது. தமிழ் நாட்டில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் விருத்தாசலம்

நெய்வேலி போன்ற இடங்களில் இத்தகைய ஆர்டிஷியன் கிணறுகளைக் காணலாம். நிலத்தினடியில் பாறைகள் அமைந்துள்ள விதத்தை ஒட்டி இக் கிணறுகள் ஏற்படுகின்றன. நிலத்தினடியில் பாறைகள் சிதைந்து சரிந்துள்ள இடங்களிலேயே இக் கிணறுகள் கிடைக்கின்றன. மேலும் பாறைகளினிடையே துவாரங்கள் மிகுந்த படலங்கள் அமைந்திருக்க வேண்டும். இவ்விடங்களில் பூமியினடியில் ஆழமாக இரும்பு குழாய்களைப் புதைக்கும்போது இக்குழாய்களின் மூலம் தண்ணீர் எப்போதும் பீரிட்டுக்கொண்டு வெளிவந்துக் கொண்டே இருக்கும்.

நீரோட்டம், காற்றோட்டம், பனிமலை இவற்றால் பூமியின் மேற்பகுதிக்கு ஏற்படும் மாறுதல்களை நாம் உடனுக்குடனேயே உணர முடிவதில்லை. காலப் போக்கிலேயே இவற்றை நாம் உணரக்கூடும். பூமியின் மேற்பகுதிக்கு பூகம்பம், எரிமலை என்ற இரண்டு தாக்குதல்கள் உண்டாகும் போது ஏற்படும் மாறுதல்கள் மிகவும் பயங்கரமானவை. இவற்றினால் ஏற்படும் சேதங்கள் சொல்ல முடியாது. எனவே மக்கள் இவ்விரண்டு பேரின்னல்களைக் கண்டு திகிலடைவதில் வியப்பொன்றும் இல்லை. சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் பீஹார் மாகாணத்திலும் நேபாளத்திலும் ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட்டது. மூன்றே நிமிடங்களில் மாங்கியர் காட்மண்டு, பாட்னா, டார்ஜிலிங் முதலிய பெரிய நகரங்கள் பிணக்காடுகளாயின. பெரிய பெரிய கட்டிடங்களெல்லாம் இடிந்து தவிடு பொடியாயின. அப்போது பெருத்த முழக்கம் கேட்டதாம். இது பூமியிலிருந்து உண்டாகவில்லை. கட்டிடங்கள் இடிந்து விழுந்து அழிந்தபோது ஏற்பட்ட முழக்கம் தான் அவ்வாறு கேட்டதாம்! தரை அநேக இடங்களில் வெடித்துப் பிளவுகள் ஏற்பட்டன. தண்ணீர் பிளவுகளிலிருந்து கட்டுக் கடங்காமல் வெளிப்பட்டு வெள்ளமாக துள்ளி ஓடியதாம். இது ஏற்பட்ட சில காலத்திற்குள்ளேயே இப்போது பாகிஸ்தானில் உள்ள க்வெட்டா [Quetta] என்ற மற்றொரு பெரிய நகரத்தில் மீண்டும் பூகம்பம் ஒன்று ஏற்பட்டதாம். இது இரவில் ஏற்பட்டதாம். எனவே ஏராளமான மக்கள் மாண்டனர். அன்று இரவு சிறிது நேரத்தில் இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மடிந்தனராம். இத்தகைய சேதத்தை நொடிப் பொழுதில் பூகம்பம் ஏற்படுத்தி விடுமாம். பூகம்பம் ஓர் அரிதான நிகழ்ச்சி என எண்ணவேண்டாம். உலகில் ஒவ்வொரு ஆண்டும் பத்து லட்சம் பூகம்பம் ஏற்பட்டு வருவதாக விஞ்ஞானிகள் கணக்கு எடுத்து இருக்கிறார்கள். ஆனால் இவை எல்லாமும் மேற்சொன்ன சேதத்தை உண்டாக்குமானால் மனித வர்க்கம் முழுவதும் முன்னமேயே அழிந்திருக்க வேண்டும். இவற்றில் அரிதாகவே ஒன்றிரண்டே அதிவலிமை வாய்ந்ததாக அமைகின்றன. அதுவும் சில இடங்களில் மட்டுமே இத்தகைய சேதத்தை விளைவிக்கும் சூழ்நிலைகள் அமைந்திருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இப் பூகம்பங்கள் தோன்றுவதற்கு விஞ்ஞானிகள் கூறும் காரணங்களில் சிலவற்றை கவனிப்போம்.

சூரியனிலிருந்து பிரிந்ததிலிருந்து பூமியின் உட்புறம் குளிராமல் மேற்புறம் மட்டிலும் குளிர்ந்து வந்திருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். பூமியைக் குடைந்து செல்லச் செல்ல சூடு அதிகரித்துக்கொண்டு போவது தெரியவந்தது. பல சுரங்கங்களில் இச் சூட்டு அதிகரிப்பை அளந்து பார்த்ததில் ஒவ்வொரு மைல் ஆழத்துக்கும் சுமார் 44° அளவு சூடு அதிகரிப்பதை கண்டார்கள். எனவே பூமியின் மையப் பகுதிக்கு அருகே சூடுமிக உயர்ந்து இருக்க வேண்டும் என தெரிய வந்தது. இவ்வாறு பூமியின் மேற்பகுதி மட்டிலும் குளிர்ந்து வருவதினால் கனத்த கனிந்த மாம்பழத்தில் தோன்றும் சுருக்கங்கள்போல பூமியின் மேற்பகுதியில் சுருக்கங்கள் ஏற்பட்டு கொண்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். இச் சுருக்கங்கள் அதிக அளவில் ஏற்படும்போது பாறைகளும், மலைகளும் ஆட்டங்கண்டு பூகம்ப அதிர்ச்சி ஏற்படக்கூடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இச் சுருக்கங்களினால் ஏற்பட்ட மேடுகள்தான் மலைகள் ; பள்ளங்கள் தான் கடல்கள் ; பெரிய மலைத் தொடர்களின் அடிவாரத்தில் அவற்றின் பளு தாங்கமாட்டாமல் விரிசல் ஏற்படக்கூடும். இதன் விளைவாக மலைகள் சரிந்து அந்த அதிர்ச்சி பூகம்பமாக மற்ற இடங்களுக்கும் பரவக்கூடும் என்று கூறுகிறார்கள். இச் சரிவு நிதானமாக ஏற்படும்போது அதிர்ச்சி கடுமையாக இராமல் சரிந்தது, காலப் போக்கிலேயே தெரிய வரும் என்று கூறுகிறார்கள். பூமியின் மேற்பகுதியில் தரையின் பரப்பைவிட கடலின் பரப்பே இரு மடங்குக்கு மேலாக இருக்கிறது. கடலின் அடித் தளம் சில இடங்களில் அமுங்கி விடக்கூடும். இதன் விளைவாகவும் பூகம்பம் ஏற்படக்கூடும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இத்தகைய பூகம்பம் ஒன்று சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன் போர்ச்சுகல் நாட்டில் தோன்றியதாக கூறப்படுகிறது. இந்நாட்டின் தலைநகரான லிஸ்பனுக்கு [Lisbon] அருகே உள்ள கடலின் அடித் தளம் அமுங்கி இதன் விளைவாக பூகம்பம் ஏற்பட்டு கடலில் பெருத்த அலைகள் தோன்றி நகரத்தின் பெரும் பகுதியை அழித்து விட்டதாகக் கூறுகிறார்கள். சோழநாட்டு தலைநகரமாக விளங்கிய "பூம்புகார்" என்னும் காவிரிப் பூம்பட்டினமும் இத்தகைய இன்னலுக்கு உட்பட்டுதான் அழிந்திருக்க வேண்டும் என்றுதோன்றுகிறது. பூகம்பம் ஏற்படுவதற்கு நான்காவது காரணமாக எரிமலைகள் இருக்கின்றன என்று கூறுகின்றார்கள். எரிமலை குமுறி வெடித்து எரியத் தொடங்கும் காலங்களில் எல்லாம் பூகம்பம் ஏற்படுவதை அறிந்து இம்முடிவுக்கு வந்தனர். இனி பூகம்பத்தினால் உண்டாகும் அதிர்ச்சி பரவும் விதத்தை கவனிப்போம்.

தண்ணீரில் ஒரு சிறு கல்லைப் போட்டவுடன் கல் விழுந்த இடத்திலிருந்து வட்டம் வட்டமாக அலைகள் நாற்புறமும் பரவிச் செல்லுவதை அனைவரும் கவனித்திருக்கலாம். கல் விழுந்த இடத்துக்கு அருகில் ஒரு பொருள் மிதந்து கொண்டிருந்தால் அலைகள் பரவிச் செல்லும்போது இது மேலுங்கீழுமாக ஆடுவதைக் கவனிக்கலாம். இத்தகைய அலைகளை விஞ்ஞானிகள் குறுக்கலைகள் [Transeverse-waves] என்று குறிப்பிடுவார்கள். அலைகளில் மற்றொரு வகை இருக்கிறது. அறுவடை ஆவதற்கு சில நாட்களுக்கு முன்னர் நெற்பயிர்கள் மணிகளை ஏந்திய **வண்ணம்**

நிமிர்ந்து நிற்கும் காட்சியை சிலர் கண்டு களித்திருக்கலாம். இத்தகைய நிலையில் நெற்பயிர் இருக்கும் போது வயலின் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரையை நோக்கி காற்று வீசினால் பயிரில் ஒரு அலை இயக்கம் தோன்றுவதை பார்க்கலாம். மணிகள் முன்னும் பின்னுமாக ஆடிச்சென்று இந்த அலை இயக்கத்தினை தோற்றுவிக்கிறது. இவ்வலைகள் பரவிச் செல்லும்போது மணிகள் சில இடங்களில் நெருங்கியும் சில இடங்களில் விலகியும் அமைந்திருப்பதையும் கவனித்திருக்கலாம். இத்தகைய அலைகளின் தன்மை முன்னர் கூறிய அலைகளிலிருந்து வேறுபட்டது. எனவே இவற்றை அமுப அலைகள் (Compresional w a v e s) என்று விஞ்ஞானிகள் கூறுவார்கள். பூமியின் மேலோட்டில் பிளவு ஏற்பட்ட இடத்திலிருந்து இவ்விரு வகை அலைகளும் கிளம்பி எல்லா பக்கங்களுக்கும் பரவுகின்றன. இந்த இடத்தை பூகம்பத்தின் கேந்திரம் (Focus) என்று கூறுவார்கள். இதற்கு நேரே உயர பூமியின் மேற் பரப்பிலுள்ள இடத்தை மையம் Epicentre) என்று குறிப்பிடுவார்கள். இவ்விரண்டு வகை அலைகளும் வெவ்வேறு வேகத்துடன் பரவிச் செல்லுகின்றன. அமுக்க அலைகள் வினாடிக்கு ஐந்து மைல் வேகத்துடனும் குறுககலைகள மூன்று மைல் வேகத்துடனும், பரவிப் பரவிச செல்லுகின்றன. அமுக்க அலைகளை "P" என்றும் குறுக்கலைகளை "S" அலைகள் என்றும் சங்கேதங்களின் உதவி கொண்டு குறிப்பதுண்டு. ஓரிடத்தில் பூகம்பத்தினால் ஏற்படும் முதல் அதிர்ச்சி அமுக்க அலைகளினாலும், இரண்டாவது அதிர்ச்சி குறுக்கலைகளினாலும் ஏற்படுகின்றன. முன்னர் கூறியதுபோல் இவ்விருவகை அலைகளும கேந்திரததிலிருந்து நேராக வருபவை. இவற்றைத் தவிர மற்றொரு அலைத் தொடர் ஒன்று பரவுகிறது. இதற்கு ராலே (Rayleigh) அலைகள் என்று பெயர். இவை கேந்திரத்திலிருந்து நேராக வருவதில்லை பிரதி பலத்தினால் மேறபரபபின் மூலம் அதாவது மையத்திலிருந்து கிளம்பி மேற்பரப்பிலேயே பரவிச் செல்லுகிறது. இதற்கு பரப்பு அலைகள் (Surface wav es) என்ற பெயரும் உண்டு. முன்னர் கூறிய இரண்டுவித அலைகளைக் காட்டிலும் இவ்வலைத் தொடர் தாமதமாகச் செல்லும். இவ்வலைகளின் வலிமையை அளப்பதற்கு விஞ்ஞானிகள ஒரு கருவியை அமைத்திருக்கிறார்கள். அதற்கு சீஸ்மோ கிராப் (Seismograph) என்று பெயர். இதன் செயல் முறை எளிதாக அமைந்திருக்கிறது. மிகப் பளுவான ஒரு பெரிய கல்லை பெண்டுலத்தை தொங்க விடுவது போல தரையில் புதைக்கப் பட்டுள்ள ஒரு ஆதாரத்திலிருந்து தொங்க விட்டிருப்பார்கள். பூகம்பத்தின் போது தரையுடன் சேர்ந்து கல் தொங்குவதற்குண்டான பிடிப்பு அதிரும். ஆனால் கல் தரையைத் தொடாமல் நிற்பதினாலும் பளு அதிகாமாக பெற்றிருப்பதனாலும் உடனுக்குடன் அசையாது. சற்று தாமதமாகவே அசையும். இக்கருவியில் பிடிப்புக்கும், கல்லுக்கும் இடையே யுள்ள இந்த அசைவு வேற்றுமையை தக்க கருவிச் சாதனங்களினால் படத்தின் மூலமாக காட்டப் படுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய கருவிகளை உலகில் பல இடங்களில் அமைத்து பூகம்பத்தின் வலிமையை அளந்து வருகிறார்கள்.

பூகம்பத்தைப் போல மற்றொரு கோரமான நிகழ்ச்சி எரிமலைகள். இவை உண்டாகும் போது பூமியின் மேலோட்டிலிருந்து நெருப்பும், வென்னீரும், மண் குழம்பும் வெளிப்படும். எரிமலைகளை பூமிக்குள் ஆழமாக இறக்கப் பட்டுள்ள பெறும் குழாய்கள் எனலாம். வெளிப்படும் திடப் பொருள்களும், திரவ பொருள்களும் மலைகப்பால் குவிந்து விடும் இவறறை லாவா (Lava) என்று கூறுவார்கள். எரிமலையின் உச்சியைக் கிடாரம் (Crater) என்று கூறுவார்கள் பெரிய அகல் போன்று அமைந்திருக்கும். எரிமலைகள் ஆரம்பித்தவுடன் முதலில் ஓர் கூம்பு போன்று தோன்றும்; பின்னர் அதை அடுத்து பல கடம்புகள் ஏற்பட்டுவிடும். எரிமலைகள் எப்போதும். லாவாப் பொருளை கக்கிக் கொண்டிராது. சிற்சில சமயங்களிலேயே பூரிக்கும். எரிமலைகள் பூரிக்காமல் இருக்கும் காலங்களில் கிடாரங்களில் தண்ணீர் தேங்கி ஏரிபோல காட்சி அளிக்கும். எரிமலைகளின் குழாய்கள் நிலமட்டத்தின் கீழ் சுமார் இருபது மைல் ஆழம் வரை இறங்கியிருப்பது தெரிய வந்தது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் எரிமலைகள் உயிருடன் இருந்து வருகின்றனவாம். (Stramboli) "ஸ்டாரம்போலி" என்ற எரிமலை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகக்கக்கிக் கொண்டு வருவதாகக் கூறுகிறார்கள். இத்தகைய எரிமலைகள் உலகில் ஐந்நூறுக்கு மேற் பட்டு இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகிறுகள் இத்தாலி நாட்டில் உள்ள வெஸ்வியஸ் (Vesuvius) என்ற எரிமலையின் பூரிப்பின் விளைவாக பல நூற்றுண்டுகளுக்கு முன்னம் பாம்பே [Pompeii] ஹெர்குலீனியநீ [Herculeneur] என்ற நகரங்கள் அழிந்து விட்டதாக கூறப்படுகிறது. ஒரு சமயம் அந்த எரிமலை சுமார பத்தாயிரம் அடி உயரம் வரை எரிந்து கொண்டிருதாம் சில எரிமலைகளிலிருந்து பெருத்த அளவுக்கு தூசி வெளிப் படுவதை கவனித்தார்கள். 1883–ஆம் ஆண்டில் கிராகோடா [Krakota] என்ற எரிமலை வெடித்து வெளிப்பட்டபோது கிளம்பிய தூசியும் புகையுல் அதனின்று சுமார் 150 மைல்கள் வரை பரவி வானத்தை மேகம் போல் மறைத்து விட்டதாக கூறுகிறார்கள். இதிலிருந்து வெளிப்பட்ட லாவா கற்கள் ஆயிரம் மைல்கள் வரை வீசி எரியப்பட்டனவாம். தாய்லாந்து, இலங்கை, பிலிபைன் தீவு, இவற்றிலும் இநத எரிமலை வெடித்த சத்தம் கேட்டதாக கூறுகிறார்கள், பெரும்பாலும் இவ்வெரிமலைகள் தீவுகளிலேயே அதிகமாக ஏற்படுவதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். ஜப்பானியர்களின் தீவுதான் இவ்விபத்துக்கு அடிக்கடி உள்ளாகிறது. கடல்களின் அடி தளத்திலும், எரிமலைகள் தோன்றக் கூடும். எரிமலைகள் வெடித்துக் குமுறும் காலங்களில் எல்லாம் பூகம்பங்களும் ஏற்படுகின்றன.

பூகம்பங்களினால் ஏற்படும் அலைகள் பரவும் விதங்களைக் கொண்டும் எரிமலைகளைக் கொண்டும், பூமியின் மத்திய பிரதேசம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து சில முடிவுகளை பெற்றிருக்கிறார்கள். பூமியினடியை குடைந்துச் செல்ல செல்ல சூடு அதிகரித்துக் கொண்டே போவதை முன்பு குறிப்பிட்டோம்.

(32-ம் பக்கம் பார்க்க)

பண்டகசாலைகளின் பணி

விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களை விற்றுத் தான் தங்களுடைய பணத்தேவையை ஈடுசெய்யமுடியும். அவ்வாறு அவர்கள் பொருள்களை நினைத்தவுடன் விற்று விட முடிவதில்லை. ஏனெனில், அறுவடையை அடுத்து விலைகள் குறைவாக உள்ளன. ஆனால், தம்முடைய செலவுகளைச் சமாளிக்க விவசாயிகளுக்கு ரொக்கம் அவசரமாகத் தேவைப்படுகிறது. எனவே, அவர்கள் தங்களுடைய விளை பொருள்களைக் குறைந்த விலைக்கு விற்றுவிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகின்றனர். இந்தச் சங்கடங்களைத் தீர்த்துவைக்க இப்போது முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய பண்டகசாலைக் கார்ப்பொரேஷனும், 14 ராஜ்ய பண்டகசாலைக் கார்ப்பொரேஷன்களாலும் திறக்கப்பட்டுள்ள பண்டகசாலைகள் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பலனடைகின்றனர். 'விவசாயப் பண்டங்களுக்கு நியாயமான விலை மதிப்பைப் பெறுவதில் மக்களுக்கு உதவுவதற்காக, சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இப்பண்டகசாலைத் திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது. ஈரம், எலிகள், பூச்சி பொட்டுக்கள் ஆகிய பரம்பரை விரோதிகளால பாதிக்கப்பட்டு விடாதபடி விவசாயப் பண்டங்கள் இப்பண்டகசாலைகளில் விஞ்ஞான ரீதியில் மிகப் பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்கப் படுகின்றன. பண்டகசாலைகளில் தங்களுடைய பண்டங்களை வைத்திருப்பவர்கள், பண்டகசாலை ரசீதின் பேரில் தங்களுடைய சரக்கின் மொத்த மதிப்பில் 75 சதவிகிதம் வரை முன் பணம் வாங்கிக் கொள்ளலாம். இவ்வாறாகப் பண்டகசாலைகள் இருவகைத் தேவைகளையும்—விஞ்ஞான ரீதியான சேமிப்பு, கடன் வசதி—பூர்த்தி செய்கின்றன.

பண்டகசாலைத் திட்டம் சுமார் நான்கு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறபோதிலும், இந்த விஷயத்தில் சமாளிக்க வேண்டியுள்ள பலதரப்பட்ட பிரச்னைகளையும் பொதுமக்களில் மிகச் சிலரே தெரிந்து கொண்டுள்ளனர். அவற்றில் முதலாவது பிரச்னை விஞ்ஞான ரீதியில் சேமித்துவைக்கும் ஏற்பாடாகும். ஒவ்வொரு வகைப் பண்டத்தையும் சேமித்து பாதுகாப்பதற்கு வெவ்வேறு வகையான முறைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. இத்திட்டம் வெற்றிகரமாக இயங்க வேண்டுமென்றால், விவசாயி உற்பத்தி செய்யும் எல்லாவகைப் பண்டங்களுக்கும் தகுந்த திருப்திகரமாக பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அவருக்கு உறுதியளித்தாக வேண்டியிருக்கிறது. எனவே, கேரளாவில் உற்பத்தியாகும் இலவங்கப் பொருள்கள், மேற்கு உத்தரப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் வெல்லம் தென் மகாராஷ்டிராவில் உற்பத்தியாகும் மஞ்சள், வேர்க்கடலை, வங்காளச் சணல், விதர்பா பருத்தி, அனேகமாய் எல்லா இடங்களிலுமே உற்பத்தியாகும் உணவுத் தானியங்கள், பயறு வகைகள் முதலிய பல்வேறு வகையான பண்டங்களையும் தக்க முறையில் விஞ்ஞான ரீதியில் சேமித்து வைப்பதற்கான வசதிகளுக்கு இப்பண்டகசாலைகள் ஏற்பாடு செய்தாக வேண்டியிருக்கிறது. இதற்குப் புதிய முறைகளைக் கையாள வேண்டியிருக்கிறது. வெகு காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் முறைகளைவிட இப்புதிய முறைகள் சாலச் சிறந்தவை என்பதைப் பிரத்தியட்சமாகச் செய்துகாட்ட வேண்டியுமிருக்கிறது. ஒரு பெரிய பண்டகசாலையில் நூற்றுக்கணக்கான மக்களுக்குச் சொந்தமான பலவகையான பண்டங்களை—அவை 60 வகை வரையில்கூட இருக்கலாம்—சேமித்து வைக்க வேண்டியிருக்கும் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பண்டங்கள் திருப்திகரமாகச் சேமித்து வைக்கப்பட வேண்டியது மட்டுமின்றி, ஒவ்வொரு நபரின் பண்டங்களும் சுலபமாக அடையாளங் கண்டு பிடிக்கப்பட வேண்டியதும், அவசியமாகும்.

பண்டகசாலைக் கார்ப்பொரேஷன்கள் தங்களுடைய நடவடிக்கைகளைச் சீக்கிரமே ஆரம்பிக்க விரும்பின. பண்டகசாலைக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது. கட்டடங்கள் கட்டுவது வரை உற்பத்தியாளர்களைக் காத்திருக்கச் செய்வதும் சாத்தியமல்ல. எனவே, இப்பண்டகசாலைகள், முதலில், வாடகைக் கட்டடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இதன் மூலம் ஒவ்வொரு இடத்திலும் தகுந்த நடைமுறை அனுபவம் கிடைத்தது. மத்திய கார்ப்பொரேஷனுக்கு இப்போது சுமார் 60 பண்டகசாலைகள் இருக்கின்றன; சுமார் 50 இடங்களில் சொந்தக் கட்டடங்களைக் கட்டுவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றில் ஏழு இடங்களில் கட்டடங்கள் தயாராகிவிட்டன; வேறு மூன்று இடங்களில் கட்டட வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கல்கத்தாவிலும் டில்லியிலும் ஒவ்வொரு குளிர் பதனக் கிடங்குகளைத் திறக்கவும் இக்கார்ப்பொரேஷன் உத்தேசித்திருக்கிறது. வேறு சில இடங்களில் குளிர்பதனக் கிடங்குகளைத் திறப்பதற்கான பூர்வாங்க சர்வேக்களும் பூர்த்தியடைந்துள்ளன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் மத்திய கார்ப்பொரேஷனுக்கு 40 பண்டகசாலைகள் இருந்தன. மூன்றாவது திட்ட காலத்தில் மேலும் 60 திறக்கப்படும். இவற்றில் சுமார் 20 பண்டகசாலைகள் மூன்றாவது திட்டத்தின் முதல் ஆண்டிலேயே திறக்கப்பட்டுள்ளன.

பண்டகசாலைத் திட்டத்தின் முக்கியமானதொரு அம்சம், டிபாஸிட்டர்களுக்கு ஷெடியூல் பாங்கிகளிலிருந்து கிடைக்கும் கடன் வசதியாகும். இவ்வாறு கொடுக்கப்படும் முன் பணத்தின் அளவு படிப்படியாக அதிகரித்து வந்திருக்கிறது. பண்டகசாலை ரசீதுகளின் மீது கொடுக்கப்பட்ட கடன் தொகைகளின் மதிப்பு 1961 ஜூன் 30-ந் தேதியன்று ரூ 7·20 கோடியாக இருந்தது; இந்த மதிப்பு 1960-61 இறுதியில் ரூபாய் 5 கோடியாகவும், 1959-60 இறுதியில் ரூபாய் 2·86 கோடியாகவும் இருந்தது.

பெரிய நகரங்களில் சொந்தமாகப் பண்டசாலைகள் நடத்துவதோடு கூட, மத்திய பண்டசாலைக் கார்ப்பொரேஷனுக்கு 14 ராஜ்ய பண்டசாலைக் கார்ப்பொரேஷகளிலும் 50 சதவிகிதம் பங்கு இருக்கிறது. இந்த ராஜ்ய கார்ப்பொரேஷன்களுக்கு இப்போது 350 பண்டகசாலைகளுக்கு மேல் இருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் 42 தான் இருந்தன. மூன்றாவது திட்ட இறுதியில் இவற்றின் எண்ணிக்கை 600 வரை உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ராஜ்ய கார்ப்பொரேஷன்களும் சுமார் 40 இடங்களில் சொந்தக் கட்டடங்களைக் கட்ட ஆரம்பித்துள்ளன.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே, பண்டகசாலை நடவடிக்கைகளில் பொது மக்களின் தொடர்பைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. பண்டகசாலையின் தத்துவம் மக்களுக்கு எட்டும்படி செய்யக்கூடியபடி, அனேகமாய் எல்லாப் பண்டகசாலைகளிலுமே, உற்பத்தியாளர்கள், பாங்கர்கள், வர்த்தகர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளடங்கிய ஆலோசனைக் கமிட்டிகள் இயங்கி வருகின்றன. பண்டகசாலைகளின் சேவைகளில் மக்களுக்கு பரிச்சயம் ஏற்படும்படி செய்வதற்காகப் பண்டகசாலைக் கார்ப்பொரேஷன்கள் ஏப்ரல் 16 முதல் "பண்டகசாலை வாரம்" கொண்டாடின.

சென்ற நான்கு ஆண்டுகாலமாக நமது கிராமப் பொருளாதாரத்தில் இப்பண்டகசாலைகள் முக்கிய பங்கெடுத்து வந்துள்ளன. இவை உற்பத்தியாளர்களுக்குத் தக்க சமயத்தில் பண உதவி அளிப்பதோடு, விலையுயர்ந்த பண்டங்களைக் கெட்டுவிடாமல் பாதுகாத்தும் வருகின்றன. இவ்வாறாக, பண்டகசாலைத் திட்டமானது, உணவுத் தானியங்கள் விஷயத்தில் நாடு தன்னிறைவு நிலையை அடையச் செய்வதிலும், அன்னியச் செலவாணிச் சம்பாதியத்திலும் உதவிபுரிந்து வருவதோடு, உற்பத்தியாளர்களுக்கும் உதவியாக இருந்து வருகிறது.

கன்னுகுடியில் கூட்டுறவுப்பண்ணை

திரு. கே. என். தங்கவேலு, தலைவர், பஞ்சாயத்து யூனியன் மன்றம், லால்குடி.

[திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கன்னுகுடி என்ற கிராமத்தில் நடைபெற்றுவரும் அபிவிருத்தி வேலைகளை விளக்குகிறது இக்கட்டுரை. குறிப்பாக, கன்னுகுடியில் அமைத்துச் செயலாற்றப்பட்டு வரும் கூட்டுறவுப்பண்ணை முறைபற்றிய குறிப்பு மிகவும் ருசிகரமானதுமட்டுமல்ல ; உபயோகமானதும் கூட. —ஆசிரியர்.]

கூட்டுறவு என்றாலே சற்று நின்று சிந்திக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அதிலும் கூட்டுறவு முறையில் விவசாயம் என்றால் இன்னும் கொஞ்சம் குழப்பம் தான் முதலில் ஏற்படுகிறது. ஆனால் இதற்கு மாறாக, கன்னுகுடியில் நடக்கும் ஹரிஜன காலனியைப் பார்த்து விட்டு வந்தால் கூட்டுறவு முறையில் எதையும் சீராக நடத்தலாம் என்ற நம்பிக்கை நிச்சயமாக வேர்விடுகிறது.

பூர்வ கதை

கன்னுகுடி என்பது திருச்சி மாவட்டம் லால்குடி வட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமம். இதில் 182 ஏக்கர் புறம்போக்கு நிலம் நீண்ட நாட்களாக தரிசாக கடந்தது. இந்த புறம்போக்கில் திருச்சி மாவட்ட முன்னாள் கலெக்டர் திரு. மலையப்பன் ஐ. ஏ. எஸ். அவர்கள் நரிக்குறவர்களுக்கு 6 வீடுகள் கட்டி குடியேற்றினார்கள். ஆனால் நாடோடிகளான இந்த நரிக்குறவர்கள் இந்த வீடுகளில் தங்கி சுற்றியுள்ள நிலத்தை பண்படுத்தி விவசாயம் செய்வதற்கில்லாமல் வழக்கம்போல் ஊர் சுற்றித்திரிந்தார்கள். இதை அறிந்த திருச்சி மாவட்ட இப்போதைய கலெக்டர் திரு. குலாம் முகமது பாஷா, ஐ. ஏ. எஸ். அவர்கள் இந்த இடத்தில் ஹரிஜன குடும்பங்களை குடியேற்றி சுற்றியுள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வர உடனடி ஏற்பாடு செய்தார்கள். இதற்கு முதலில் இரண்டு பாசன கிணறுகள் வெட்ட அநுமதி அளித்தார்கள். ஹரிஜனங்களை குடியேற்றி கிணறுகள் வெட்டி தரிசு நிலத்தை சாகுபடிக்குக் கொண்டு வர வேண்டிய இந்த வேலையை லால்குடி வட்டார வளர்ச்சி அலுவலருக்கு கொடுத்து வேலைகளை உடனடியாக கவனிக்கும்படி பணித்தார்கள். அதன்படி லால்குடி வட்டார வளர்ச்சி அலுவலரும் பல கிராமங்களில் ஹரிஜன மக்களை சந்தித்து இந்த புது மாதிரி வேலைக்கு பொருத்தமான குடும்பங்களைச் சேர்த்து இந்த புறம்போக்கு நிலத்தில் குடியேற்றினார். கிணறு வெட்டு வேலை ஆரம்பித்தது. கிணறு வெட்டு மூலம் கிடைக்கக்கூடிய பணத்தலதக்கொண்டே இந்த ஹரிஜன மக்கள் தங்கள் சாப்பாட்டு பிரச்னையை தீர்த்துககொண்டு சுற்றியுள்ள தரிசு நிலத்தையும் வெட்டி பண்படுத்தி சாகுபடிக்குக்கொண்டு வந்தார்கள். இந்த மாதிரி வேலைகள் துரிதமாக நடப்பதை நேரில் கண்ட மாவட்ட கலெக்டர் அவர்கள் மேலும் கிணறுகள் வெட்டுவதற்கும் நிலத்தை சீர்படுத்தி சாகுபடிக்குக்கொண்டு வருவதற்கும அநுமதி அளித்தார்கள். இப்படியாக இது வரை இந்த கன்னுகுடி காலனியில் ஏழு நீர்ப்பாசன கிணறுகள் வெட்டப்பட்டு இந்த கிணற்றைச் சுற்றிலும் சுமார் 15 ஏக்கர் நிலம் தோட்ட சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. சுமார் 105 ஏக்கர் தரிசு நிலம் உழுது பண்படுத்தப்பட்டு புஞ்சை சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. மொத்தம் 12 ஜதை மாடுகள் வாங்கி வழங்கப் பட்டுள்ளது. 12 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 20 ஏழை ஹரிஜன குடும்பங்கள் குடியேற்றப்பட்டுவிளன.

தற்போதைய நிலை

சிறிது காலத்திற்கு முன்பு வரை கன்னுகுடியில் பொட்டலாக, கட்டாந்தரையாக கிடந்த இந்த புறம்போக்கு பூமியில் இப்போது மானவாரியாக கம்பு, சோளம், வரகு, துவரை, மல்லி போன்ற பயிர்களும் கிணற்றுப்பாசனத்தில் நெல், வாழை காய்கறி போன்ற பயிர்களும் அவைகளை ஒட்டி ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் குடும்பங்கள் புத்துயிர் பெற்று பூத்துக்குலுங்கும் காட்சியும் யார் மனதைத் தான் குளிரவைக்காது ?

அமைப்பு முறை

இந்த காலனி வாழ் மக்கள் ஆண், பெண் அத்தனை பேரும் உழைக்கிறவர்கள். அவர்கள் வேலையை அளந்து அவர்களின் தலைவர் பெயருக்கு பில் போட்டு பணம் பட்டுவாடா ஆகிறது. இந்தப் பணத்தைக் கொண்டு காலனிக்கு வேண்டிய அரிசி, பருப்பு முதலிய சாமான்களை வாங்கி அவரவர் குடும்பங்களிலுள்ள எண்ணிக்கைப் பிரகாரம் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. ஆரம்பத்தில் இப்படியாக எல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டாக உழைப்பது, வரவும் செலவும் கூட்டாக ஒத்துக்கொள்வது, நிலத்திலிருந்து வரும் விளைச்சலையும் அவரவர் தேவைக்கு தகுந்தபடி பகிர்ந்து கொள்வது என இருந்தது. இந்த முறையில் எல்லோரும் ஒன்றுபோல சுயமாக முயற்சி எடுத்து முழு மனதுடன் வேலை செய்வதில்லை. எல்லோருக்கும் பொதுவான மாடுகள், விவசாயக் கருவிகள், முதலியவைகளை பொறுப்புடன் கவனித்துக்கொள்வதில்லை. அவர்களுக்குள்ளேயே அந்த நிலங்களை சொந்தமாககுவார்களோ இல்லையோ என சந்தேகம் இருந்து இருந்தது. இம்மாதிரி பாகுபாடுகளை நிவர்த்திப்பதற்காக ஒவ்வொரு நீர்ப்பாசன கிணற்றுக்கும் நாலு பேர் அல்லது மூன்று பேர் என்ற அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் ஒரு ஏக்கர் தோட்டம் மூன்று அல்லது நான்கு ஏக்கர் புஞ்சை நிலம் கிடைக்கக்கூடிய முறையில் பல குழுக்களாக பிரித்து அந்தந்த குழுவிற்கும் தனித் தனியாக மாடுகள் விவசாய கருவிகள் முதலியவைகளைப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. நான்கு பேர் அல்லது மூன்று பேர் கொண்ட அந்தக் குழுக்கள் தானே சுயமாக முயற்சி

எடுத்து எல்லா வேலைகளையும் கவனித்துக்கொள்ள வேண்டியது. அந்த குழுவிற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் அந்த குழுவினர் எல்லோரும் மொத்தமாக வேலை செய்து அதிலிருந்து வரக்கூடிய விளைச்சல், வருமானத்தை எல்லோரும் சமமாக பகிர்ந்துகொள்ளவேண்டியது என்ற முறை ஏற்படுத்தப்பட்டது. இந்த முறை ஏற்படுத்திய பிறகு அத்தனைபேரும் திருப்தியுடனும் பொறுப்புடனும் சுயமாக முயற்சி எடுத்து முழு மனதுடன் வேலை செய்து வருகின்றனர். இப்பொழுதெல்லாம் தங்களுக்கு அந்த நிலங்களின் பேரில் தனிப்பட்டா தேவையில்லை என்றும் இப்படியே குழு (Group) வாக வேலை செய்து வருகிறோம் என்றும் அவர்கள் மனம் விட்டு சொல்லிவருகின்றனர். சீனாவில் இம்மாதிரி குழுப் பண்ணை (Group Farming) நல்ல முறையில் நடந்து வருவதாக கேள்விப்பட்டு இருக்கிறேன். ஒரு வேளை அது போன்ற குழுப் பண்ணை தானோ என்னவோ இந்த கன்னுகுடி காலனியிலும் சிறந்து முறையில் இயங்கி வருகிறது. கூட்டுப் பண்ணை பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இது ஒரு சிந்தனைப் பொருளாகும்.

கூட்டுறவுப் பண்ணைக் குழு

சமீபத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் தேதியில் நமது ராஜ்ய கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார், அவருடைய உதவியாளர்கள், மாவட்ட கலெக்டர், திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்களைக்கொண்ட குழு ஒன்று இந்தக் கன்னுகுடி காலனியை பார்வையிட்டு வேலை செய்யும் முறையையும், அடைந்துள்ள பலன்களையும் நேரில் கண்டறிந்தார்கள். சுமார் ரூ. 20,000 செலவில் சுமார் 120 ஏக்கர் தரிசு நிலம் சீர்திருத்தி சாகுபடிக்குக் கொண்டு வந்து இருபது குடும்பங்களைக் குடியேற்றி நிலைக்க வைத்து ஒரு பெரும் சாதனையே. இந்த சாதனைக்கு மூலகாரணமாக இருந்த அனைவருக்கும் நன்றி செலுத்தவேண்டும்.

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

எரிமலைகளிலிருந்து பூமியின் உட்பகுதி மிகுந்த சூட்டில் இருப்பதை சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெரிந்து கொள்ளலாம் அல்லவா ? பூமியின் உட்பகுதி அத்தகைய மிகுந்த சூட்டில் இருக்கும்போது அங்குள்ள பொருள் திட நிலையில் இருக்க இயலாது அல்லவா ? அப்படியானால் உட்பகுதி திரவ நிலையிலா இருக்கிறது என்ற சந்தேகம் விஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டது திரவ நிலையில் இருக்குமானால் கடலில் அலைகள் உண்டாவது போல பூமியின் உட்பகுதியிலும் அலைகள் உண்டாக வேண்டும். சூரியன் சந்திரன் இவற்றின் கவர்ச்சியால் பூமியின் உட்பகுதி மேலோட்டை பீரிட்டுக் கொண்டு வெளி வர வேண்டும். மேலும் கடலில் எப்போதும் தோன்றிக் கொண்டிருக்கும் அலைகளைப் போல பூமியின் உட்பகுதியிலும் எப்போதும் அலைகள் அல்லவா தோன்றும் என்று நினைத்தார்கள் இவ்வாறு ஒன்றும் நடைபெறுதினால் பூமினடியில் உள்ள பொருள்கள் திரவ நிலையில் இருக்க இயலாது என்ற முடிவுக்கு வந்தனர். மேலும் ஆழச் செல்ல செல்ல இறுக்கமும் அதிகரித்துக் கொண்டே போவதினால் பூமியின் உட்பகுதி அரக்கை போல் எளிதில் இளகக் கூடிய பொருளாக இருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். பூமியின் அமைப்பைப் பற்றி விஞ்ஞானிகள் கூறும் விவரத்திலிருந்து பூமி நான்கு பகுதிகளாக அமைந்திருக்கிறது என்று தெரிகிறது. பூமியின் மேற்பகுதியான மேலோடு ஆரஞ்சு பழத்தின. தோலைப் போல பூமியை மூடிக் கொண்டிருக்கிறதாம். இருபது மைல் முதல் நூறு மைல் ஆழம் வரை இம்மேலோடு அமைந்திருப்பதாக தெரிகிறது. இதில் முன் சொன்ன பாறை வகைகள் தண்ணீர் முதலிய இருக்கின்றன. பூமியின் விட்டம் எண்ணாயிரம் மைல்கள். எனவே மேலோட்டின் பகுதியின் ஆழம் எவ்வளவு அற்பமானது என்பதை ஊகித்து கொள்ளலாம். மேலோட்டிற்குக் கீழே 500 மைல் முதல் 1,000 மைல் ஆழம் வரை எரிமலை குழம்பினால் ஆக்கப்பட்ட பாறை இருப்பதாக கூறுகிறார்கள். மேலோட்டிலிருக்கும் பகுதிக்கும் இப்பகுதிக்கும் நடுவே ஒருவித பாறைகளினால் ஆன மற்றொரு பகுதி எரிமலைக்குழம்பின் மீது மிதந்து கொண்டிருக்கிறது என்கிறார்கள். இதற்கும் கீழே ஒரே ஆழத்திற்கு கந்தகம் கலந்த இரும்பு, நிக்கல் உலோகப் பொருள்கள் இருப்பதாக கூறுகிறார்கள். இதற்கும் கீழே பூமியின் மையம் வரை இரும்பு, நிக்கல் உலோகக் கலவை இருப்பதாகத் தெரிகிறது. மையம் பகுதி அதிகத் திண்மை கொண்டிருப்பதை ஊகித்தார்கள். இதுவே விஞ்ஞானிகள் கூறும் பூமிதேவியின் வர்ணனை.

கிராம நலம்-
பகுதி-௨. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM
PART II PANCHAYAT GAZETTE

1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின் கீழ், மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தை ஒப்படைத்தல்—அதற்கான பொருளாதார, கணக்கு வைப்பு முறைகளைப் பற்றிய விளக்கம்

[Panchayat Unions—Third Batch—Entrustment of National Extension Service Scheme of Community Development under section 66 of the Madras Panchayats Act, 1958—Instructions regarding financial and accounting Procedure—Issued.]

(G.O. Ms. No. 5, R.D. & L.A., dated 1st January 1962.)

கிராம நல-தல நிர்வாகத்துரையின் 21-3-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 838-ல், சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித்திட்ட நிறைவேற்றத்தை மூன்று தொகுதி பஞ்சாயத்து யூனியன்களுக்கும், சில வரையறைகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு, கீழ்க்கண்ட தேதிகளிலிருந்து ஒப்படைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டது

முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்.	1-4-1961
இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள். ..	1-7-1961
மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள். ..	1-1-1962

2. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 21-3-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 841-ல், மேற்குறித்த தேதிகளில் ஒப்படைக்கப்பட்டதும், ஒப்படைக்கப்படாததுமான சமுதாய அபிவிருத்து வேலைகள் சம்மந்தமாக, பின்பற்றப்படவேண்டிய பொருளாதார, கணக்குவைப்பு முறைகள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. கிராம நல-தல நிர்வாகத்துறையின் 30-12-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 3434-ல் மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடம், சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித்திட்ட நிறைவேற்றத்தை 1-1-1962-ல் இருந்து அமுலாக்க, ஒப்படைத்து ஆணை பிறப்பிக்கப் பட்டது.

3. கிராம நல-தல நிர்வாகத்துறையின் 21-3-1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 841, (இந்த ஆணையின் தமிழாக்கம் 1961 ஏப்ரல் "கிராம நலம்"—பகுதி II—பக்கங்கள் II, III, IV-ல் வெளியிட்டிருக்கிறோம்.) 2, 3, 4, 5 பாராக்களில் கூறப்பட்டுள்ள விளக்கம், இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களுக்கும் 1-1-1962 தேதியிலிருந்த பொருந்துவதாகும் என்று மறுபடியும் வலியுறுத்துகிறது.

இணைப்பு

வடார்க்காடு மாவட்டம்

1. கந்திலி.
2. வாணியம்பாடி.
3. ஆலங்காயம்.
4. காட்பாடி.
5. குடியாத்தம்.
6. பேர்ணம்பட்டு.
7. மாதனூர்.
8. அணைக்கட்டு.
9. வேலூர்.
10. திமிரி.
11. அரக்கோணம்.
12. புதுப்பாளையம்.
13. தண்ட்ராம்பேட்டை.
14. திருவண்ணமலை.
15. கீழ்பென்னத்தூர்.
16. கலஸ்தாம்பாடி.
17. வந்தவாசி.

18. தெள்ளார்.
19. அனக்காவூர்.
20. செங்கம்.

தென்னார்க்காடு மாவட்டம்

21. வல்லம்.
22. திருவெண்ணெய்நல்லூர்.
23. முகையூர்.
24. திருக்கோயிலூர்.
25. வானூர்.
26. மயிலம்.
27. ஓலக்கூர்.
28. கண்டமங்கலம்.
29. விக்கிரவாண்டி.
30. கடலூர்.
31. நெல்லிக்குப்பம்.
32. கொமராட்சி.
33. காட்டுமன்னார்கோயில்.
34. விருத்தாசலம்.
35. கம்மாபுரம்.
36. ரிஷிவந்தியம்.
37. சங்கரபுரம்.

செங்கற்பட்டு மாவட்டம்

38. திருவொற்றியூர்.
39. வாலாஜாபாத்
40. திருப்போரூர்.
41. சித்தாமூர்.
42. லத்தூர்.
43. அச்சரப்பாக்கம்.
44. சோழவரம்.
45. திருத்தணிகை.
46. திருவாலங்காடு.
47. பள்ளிப்பட்டு.
48. இராமகிருஷ்ண ராஜு பேட்டை.

கோயம்புத்தூர் மாவட்டம்

49. பெருந்துறை-II.
50. ஊத்துக்குளி.
51. நம்பியூர்.
52. தாளவாடி.
53. அந்தியூர்.
54. அன்னூர்.
55. காரமடை. (மேட்டுப்பாளையம்)
56. பேரூர்.
57. சிங்காநல்லூர்.
58. சர்க்கார் சாமக்குளம்.
59. மதுக்கரை.
60. குடிமங்கலம்.
61. மாடத்துக்குளம்.
62. பொள்ளாச்சி.
63. ஆனைமலை.
64. தென்கரை.
65. தேனி.
66. சின்னமனூர்.
67. உத்தமபாளையம்.
68. கம்பம்.
69. சாணார்பட்டி.
70. வடமதுரை.
71. பாளையம். (குஜிலியாம்பாறை)
72. தொப்பம்பட்டி
73. ஒட்டன் சத்திரம்.
74. மேலூர்-II.
75. நத்தம்.

இராமநாதபுரம் மாவட்டம்

76. அருப்புக்கோட்டை.
77. திருச்சுழி.
78. நரிக்குடி.
79. இளையான்குடி.
80. திருப்புவனம்.
81. சிவகெங்கை.
82. திருப்பத்தூர்.
83. சாக்கோட்டை.
84. திருப்புல்லணி.

சேலம் மாவட்டம்

85. சூளகிரி.
86. கெலமங்கலம்.
87. தளி.
88. பாலக்கோடு.
89. நல்லம்பள்ளி.
90. அரூர்.
91. நங்கவள்ளி.
92. ஓமலூர்.
93. தாரமங்கலம்.
94. கடையம்பட்டி.
95. காரிப்பட்டி.
96. வீரபாண்டி.
97. சேலம்.
98. ஏர்க்காடு.
99. பனைமரத்துப்பட்டி.
100. இராசிபுரம்.
101. வெண்ணந்தூர்.
102. புதுச்சத்திரம்.
103. எருமைப்பட்டி.
104. நாமக்கல்.
105. மோகனூர்.
106. கபிலமலை.
107. கொல்லிமலை.
108. பள்ளிப்பாளையம்.
109. மல்ல சமுத்திரம்.

110. எலச்சிபாளையம்.
111. மகுடஞ்சாவடி.
112. சங்கரி.
113. கொங்கணபுரம்.

தஞ்சாவூர் மாவட்டம்

114. தஞ்சாவூர்.
115. திருவையாறு.
116. திருவோணம்.
117. மதுக்கூர்.
118. பேராவூரணி.
119. அறந்தாங்கி.
120. திருமருகல்.
121. நன்னிலம்.
122. கொரடாச்சேரி.
123. திருவாரூர்.
124. மன்னார்குடி.
125. நீடாமங்கலம்.
126. தலைஞாயிறு.
127. வலங்கைமான்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

128. கரூர்.
129. கிருஷ்ணராயபுரம்.
130. மணப்பாறை.
131. வையம்பட்டி.
132. மருங்காபுரி.
133. கடவூர்.
134. அரிமளம்.
135. திருமயம்.
136. பொன்னமராவதி.
137. அன்னவாசல்.
138. விராலி மலை.
139. புள்ளம்பாடி.
140. மணச்சநல்லூர்.
141. ஆலத்தூர்.
142. கீழப்புலியூர் (வரகூர்/வேப்பூர்.)
143. ஜெயங்கொண்டம்.
144. செந்துறை.
145. தா. பழூர்.
146. திருவரம்பூர்.
147. ஸ்ரீரங்கம்.

திருநெல்வேலி மாவட்டம்

148. திருச்செந்தூர்.
149. ஆழ்வார் திருநகரி.
150. கயத்தாறு.
151. ஸ்ரீ வைகுண்டம்.
152. விளாத்திக்குளம்.
153. நாங்குனேரி.
154. களக்காடு.
155. அம்பா சமுத்திரம்.
156. கடயம்.
157. பாளையங்கோட்டை.
158. கடைய நல்லூர்.
159. கீழப்பாவூர்.

—0—

கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் கடமைகளும் பொறுப்புகளும்

[Community Development Programme—Establishment—Extension officer for Co-operation-Duties and Responsibilities—Defined—Orders issued.]

(G. O. Ms. No. 455, R.D. and L.A., dated 26th February 1962.)

வளர்ச்சிப் பணி அதிகாரிகளின்கடமைகளையும், பொறுப்புக்களையும் தெளிவாக வரையறுத்து அறிவிக்கவேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டது. கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் கடமைகளையும், பொறுப்புக்களையும்பற்றி அரசாங்கம், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருடன் கலந்து, பரிசீலனை செய்து, கீழ்க்கண்ட ஆணைகளைப் பிறப்பிக்கிறது :

I. நிலையும் மேற்பார்வையும் (Status and Control)

(a) கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் முழு நிர்வாக மேற்பார்வையில் இருப்பார். எல்லா நிர்வாக விஷயங்களிலும, கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் யோசனையைக் கேட்டு, அவருடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்.

(b) அவர் உதவிப் பதிவாளரின் தொழில் நுட்ப (Technical) மேற்பார்வையின் கீழ் இருப்பார். தொழில் நுட்ப விஷயங்களில், கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் மூலம், உதவிப் பதிவாளரின் யோசனையைக்கேட்டு, அவருடைய ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்.

(c) அலுவலக ஒழுங்கு, சுற்றுப்பயண ஏற்பாடு, கூட்டங்களுக்குச் செல்லல், நாட்குறிப்புத் தயாரித்து சமர்ப்பித்தல், முதலியவை உள்பட மற்ற எல்லா விஷயங்களிலும், மற்ற வளர்ச்சிப் பணி அதிகாரிகளுக்குப் பொருந்தும் விதிகள் எல்லாம் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரிக்கும் பொருந்துவனவாகும்.

(d) கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் கடிதத்தொடர்புகள் கிராம சேவகர்களுடன் தொடர்பு கொண்ட அன்று

டத் தொடர்புகள் நீங்கலாக ஏனைய அனைத்தும் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் மேற்பார்வையுடனே நடைபெறவேண்டும். சட்ட பூர்வமான வேலைகளைப்பொறுத்த மட்டில், உதவிப் பதிவாளர்கள் (Deputy Registrars) மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்குகள், மத்திய பாங்கு மேற்பார்வையாளர்கள், தனிப்பட்டவர்கள் முதலானோருடன் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி நேரடியாகக் கடிதத் தொடர்பு கொள்ளலாம். இத்தகைய விஷயங்களில்' கடிதத்தின் பிரதி கமிஷனரின் பார்வைக்குத் தவறுமல் வைக்க வேண்டும்.

(e) கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியைப் பொறுத்த மட்டில், மாநில அளவில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்கள் (Registrar of Co-operative Societies) துறைத் தலைவராகவும், சம்பந்தப் பட்ட மாவட்ட அதிகாரியாக, உதவிப் பதிவாளரும் (Deputy Registrar) விளங்குவார்கள்.

II. கடமைகள்

1. பொதுவாக, ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வருகின்ற கூட்டுறவு வேலைகளை நிறைவேற்றுவதற்கும், வட்டாரப் பகுதிகளில்கூட்டுறவு அபிவிருத்திக்கும் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி பொறுப்பாளர் ஆவார். வட்டாரத்தில் உள்ள மக்களுக்கு கூட்டுறவுக் குறிக்கோளை அறியச் செய்வதுடன், பல்வேறு வகையான கூட்டுறவு இயக்கங்களின் குறிக்கோள்களையும் விளக்குவதன்மூலம் அவர்களை கூட்டுறவு உணர்வு உடையவர்களாகச் செய்து, மக்களால் நடத்தப்படும் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களும் நல்ல முறையில் நடந்து, அங்கத்தினர்களுக்கு நல்ல பலன் அளிக்கும் வகையில் பணியாற்றச் செய்ய வேண்டியது கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் கடமையாகும்.

2. கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி, கிராம வீட்டு வசதி சங்கங்கள், தொழிற் கூட்டுறவுகள் உள்பட அவருடைய பகுதியிலுள்ள எல்லா கூட்டுறவு சங்கங்களின் அமைப்புக்கும் பொறுப்பாளியாவார். மேலும் அவர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எல்லா தணிக்கை, மேற் பார்வைகளுக்கும், கணக்கு வைப்பு, அவைகளின் வேலைகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றிற்கு உதவியாக இருக்கவும் பொறுப்பாளர் ஆவார். மேலும் அவர் கிராம வீட்டு வசதிச் சங்கங்களுக்கு, கடன் மனுக்கள் தயாரித்தல், வீடுகளின் மாதிரி வரைபடங்கள், அமைப்புத் திட்டப் படங்கள் முதலானவற்றைப் பெறுதல் ஆகிய விஷயங்களில் உதவி செய்ய வேண்டும்.

3. அவர், தம்முடைய வட்டாரத்தில், விவசாயக் கடன் விரிவு படுத்தல், கடன், விற்பனை ஒருங்கிணைவு ஆகியவற்றுக்குப் பொறுப்பாவார். சங்கங்களை அமைத்தல், ஏற்கனவே இருக்கும் சங்கங்கள் செயல்படும் பிரதேசத்தை விரிவு படுத்தல், அதிகமான உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல், பல்வேறு வேலைகளுக்கென்று திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகைக்குட்பட்டு விவசாயக் கடன்களை வழங்குதல் ஆகிய வேலைகளைச் செய்வதன் மூலம் விவசாயக்கடன் முறையை அவர் விரிவுபடுத்த வேண்டும்.

4. அவர், வட்டாரத்தில், அல்லது செயல்படும் வட்டாரப் பகுதியில் அமைந்துள்ள விற்பனைச்சங்க நடைமுறைகளை, வட்டாரத்தில் உள்ள கடன் சங்கங்களை இணைத்தும், தனிப்பட்டவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டும்' விவசாயிகள் தம் உற்பத்திப் பொருள்களை விற்பனைச் சங்கங்களின்மூலம் விற்க ஏற்பாடு செய்தும்—அபிவிருத்தி செய்யப் பொறுப்பாளியாவார்.

5. இந்த நிறுவனங்களைப் பற்றிய விவரங்களை அறியும் வகையிலும், அவற்றின் வேலைகளில் ஏதாவது தடை இருந்தால் அதைத் தீர்த்து வைக்கின்ற முறையிலும் அவர் சில விவசாய பாங்குகளையும், கடன் சங்கங்களையும் தணிக்கை செய்வார்.

6. கிராமக் கடன் சங்கங்களும், விவசாய பாங்குகளும், விதைகள், உரங்கள், கருவிகள் முதலான விவசாய சம்பந்தமான தேவைகளையும், வீட்டுத் தேவைகள், பிற உபயோகமானபொருள்கள் ஆகியவற்றையும் கிராமத்தில் விநியோகம் செய்யும் வேலையைச் செய்யுமாறு கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி பார்த்துக்கொள்ள வேண்டும்.

7. வட்டாரப் பகுதியில், எங்கெங்கு கூட்டுறவுச் சங்கங்கள் கிடங்கு கட்டும் வேலையை எடுத்துச் செய்கின்றனவோ அங்கெல்லாம் அவர் மேற்பார்வையும், தணிக்கையும் செய்வதுடன், கூட்டுறவுச் சங்கங்கள் கிடங்குகளை வேகமாகக் கட்டி முடிக்கத் தேவையான எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். பட்டை நீக்கும் கருவி, தொலிப்புக் கருவி (தோல் உரிக்கும் கருவி) முதலானவற்றை அமைத்து, உற்பத்தியாளர்க்குப் பயன் படும் வகையில் செயல்பட வைப்பதில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அவர் உதவியாக இருக்க வேண்டும்.

8. பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களையும், பால் வழங்கு யூனியன்களையும், அமைக்க முடியுமான சூழ்நிலைகளை உருவாக்குதல், ஏற்கனவே இருக்கிற சங்கங்கள் அவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவி செய்தல் ஆகிய வேலைகளையும் அவர் செய்ய வேண்டும். வறட்சியான காலங்களில் கறவை மாடுகளை அங்கத்தினர்கள் பராமரிக்கவும், வட்டாரப் பகுதி மக்களின் வருவாய்க்கு வழி செய்யவும், வசதியுள்ள இடங்களில் பராமரிப்புப் பண்ணைகளை (Salvage Farms) அமைக்க உதவ வேண்டும்.

9. குத்தகைப் பண்ணைச் சங்கங்கள், தொகுப்புப் பண்ணைச் சங்கங்கள் (Collective Farming Societies) முதலான இணைப்புப் பண்ணைச் சங்கங்களையும், கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களையும் அமைக்க முடிந்த இடங்களில் எல்லாம் அமைக்க முயலவேண்டும். ஒவ்வொரு கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியும் அவருடைய வட்டாரத்தில் குறைந்த பட்சம் ஒரு இணைப்புப் பண்ணைச் சங்கமாவது செயல்படுமாறு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

10. உறுப்பினர்கள், எதிர்காலத்தில் உறுப்பினர்களாக கூடியவர்கள் (Prospective Members), கூட்டுறவுச் சங்கங்களின் பஞ்சாயத்தார்கள் ஆகியோருக்கு மாநிலக் கூட்டுறவு யூனியன் வட்டாரத்தில் பயிற்சி வகுப்புகளை நடத்தும் பொழு

தெல்லாம் அந்த வட்டாரத்துக் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி அவற்றில் பங்கெடுத்துக் கொண்டு, பயிற்சியாளரிடையே கூட்டுறவுக் குறிக்கோள்களைப் பிரசாரம் செய்ய வேண்டும். மேலும் அவர் வட்டாரப் பகுதியில் நடக்கும் "உறுப்பினர் வாரம்", "அகில இந்தியக் கைத்தறி வாரம்", "அகில இந்தியக் கூட்டுறவு வாரம்", "பால் நாள்" (Milk Day) முதலான விழாக்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

11. மேலே குறிப்பிட்ட அபிவிருத்தி வேலைகளைக் கவனிப்பதுடன், அபிவிருத்திக்கு ஆக்கம் அளிக்குமாயின், 1932-ம் வருடத்திய, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 38-வது பிரிவின் கீழ் விசாரணைகள், நிறைவேற்றம், மத்தியஸ்தம், முதலான சட்டபூர்வமான வேலைகளையும் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி கவனித்துக் கொள்ள வேண்டும்.

12. அவர், வட்டாரப் பகுதியில் உள்ள கடன் வழங்காச் சங்கங்களை (Non-Credit Societies) அவ்வப்பொழுது, தணிக்கை செய்வார். அவர், சங்கங்களில் வழக்கு தொடர ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட வேண்டிய விஷயங்களில் தவிர ஏனைய சட்ட பூர்வமானதும், சாதாரணமானதுமான விசாரணைகளை நடத்த அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறார்.

13. ஒரு முக்கியமானதும், சிக்கல் நிறைந்ததுமான தன்மையுள்ள மத்தியஸ்தங்களை, அதாவது, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் பிரிவு 51 (1) (C)ன் கீழ், சாதாரணமாக துணைப்பதிவாளரிடம் (Sub-Registrar) ஒப்படைக்கப்பட்ட விஷயங்களையும் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி கவனிக்க வேண்டும்.

14. வளர்ச்சிப் பணி சம்பந்தமான முக்கியமான வேலை நிறைவேற்ற மனுக்களையும் அவர் கவனிக்க வேண்டும்.

15. கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி, மத்திய பாங்கு மேற்பார்வையாளர்கள் உள்பட, வட்டாரத்தில் உள்ள அதிகாரிகள், அதிகாரிகள் அல்லாதவர்கள் ஆகியோரைச் சந்தித்து வேலையில் ஒருமைப்பாடு காணவேண்டும்.

அவர், மத்திய பாங்கைக் கலந்தாலோசித்து, கூட்டுறவு மத்திய பாங்கு மேற்பார்வையாளர் ஏனையோரைக் கூட்டி, வேலை முறை, சங்கங்களின் பல்வேறு வேலைகள் சம்பந்தமாக விவாதிக்க ஏற்பாடு செய்வார்.

16. அவர் கிராமச்சேவகர்க்கு ஒரு பணிப்பயிற்சி அளித்து கூட்டுறவுக் கொள்கைகள், நடைமுறைகளைப் பற்றி நன்கு அறியுமாறு செய்ய வேண்டும். பணியாளர் கூட்டத்தில் எல்லா கிராமச் சேவகரும் வந்திருக்கும் சந்தர்ப்பத்தில் கூட்டுறவு பற்றிய பேச்சு நிகழ்த்த வேண்டும். அந்தப் பேச்சுக்களின் குறிப்புகளைத் தயார் செய்து தேவையான பிரதிகளை கிராம சேவகர்க்கு வழங்க வேண்டும். கிராம சேவகர்க்கு தத்துவ விளக்கங்கள் அளிக்கப்படுவதுடன் (Theoritical Instructions), அப்பகுதியில் உள்ள பல்வேறு வகைச் சங்கங்களுக்கு அழைத்துச் செல்வதன்மூலம் நடைமுறை விளக்கங்களையும் அளிக்க வேண்டும்.

17. அவர், தன்னுடைய வேலைகள் சம்பந்தமான சாதனைகளைப் பதிவு செய்வதற்கு நிரந்தரமான பதிவேடு, ஏதாவது அமைப்பு வரையறுக்கப் பட்டிருந்தால் அதன் படி சரியாக வைத்து வரவேண்டும்.

18. கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி, தம்முடைய விஷயங்கள், சம்பந்தமாக வைத்துக் கொள்ளும் கடிதத் தொடர்புகளுக்கென்று, வரையறுக்கப்பட்ட அமைப்பின் படி தன்பதிவேட்டை (Personal Register) வைத்து வர வேண்டும். அந்தத் தன் பதிவேடு குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது பஞ்சாயத்து யூனியன் கமிஷனரால் பரிசோதிக்கப் படவேண்டும். கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் கடிதத் தொடர்புகள் எல்லாம் மேலே, விதி I (d)-யில் கூறியபடி, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் மூலமே செல்ல வேண்டும்.

19. கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி வரையறுக்கப்பட்ட அமைப்பில், ஒரு நாட் குறிப்பு வைத்து வருவதுடன் அது விமரிசனத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது விஷயத்தில் மற்ற வளர்ச்சிப் பணி அதிகாரிகளுக்குப் பொருந்திவரும் விதிகள் இவருக்கும் பொருந்திவருவன வாகும்.

20. அவர், இத்துறை சம்பந்தப்பட்ட அவ்வப் பொழுதைய அறிக்கைகள் சரியாகவும், காலாகாலத்திலும் குறிப்பிட்ட அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பில் உள்ளார்.

21. அவர், பஞ்சாயத்து யூனியன் கமிஷனரின் வேலை முன்னேற்ற அறிக்கைகள் (Progress Reports) தயாரிக்க அளிக்கும் புள்ளி விவரங்கள் சரியானவையாகக் கொடுக்க வேண்டிய பொறுப்பாளி ஆவார்.

(கிராம நல-தலநிர்வாகத்துறையின் 26-2-62-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 455)

குறிப்பு:—"கிராமநலம்" மே, 62-இதழின் 'கேள்வியும் பதிலும்' பகுதிக்கு, திருநாவலூர் பஞ்சாயத்து யூனியன் தலைவர், "பஞ்சாயத்து யூனியனின் கூட்டுறவு வளர்ச்சி அதிகாரியின் விரிவான பணிகளும், கடமைகளும் என்ன?" என்ற கேள்வியை அனுப்பியுள்ளார். அந்தக்கேள்விக்கு, மேற்கண்ட அரசாங்க ஆணை விளக்கமான பதிலாக அமையும்.

தமிழில் அரசாங்கஆணைகள் அனுப்பக் கோரும் மேற்கு தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி மன்றத் தீர்மானத்திற்கு அரசாங்கத்தின் விளக்கம்

[District Development Councils—West Thanjavur—Resolution No. 11 (1) of the meeting held on 30-12-61— Issue of Government Communications in Tamil]

(Memorandum No. 12598, R.D. and L.A., dated 9-3-62.)

பஞ்சாயத்து யூனியன்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் அரசாங்க ஆணைகளின் பிரதிகளைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஒரே நேரத்தில் அனுப்பும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, மேற்கு தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் 30-12-1961 தேதிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் [எண் : 11 (1)] தஞ்சாவூர் கலெக்டரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. அரசாங்ககாரியங்களில் தமிழ் கடிதத் தொடர்பு ஏற்படுத்தும் திட்டம் இன்னும் செயலாளர் அலுவலகத்தின் (Secretariat) அமுலுக்கு வராததால் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தின் மேற்படி வேண்டுகோளை நிறைவேற்ற முடியவில்லை என்று கலெக்டர் அறிவிக்கப்படுகிறார்.

2. பஞ்சாயத்து அபிவிருத்தி சம்பந்தமாக செயலாளர் அலுவலகத்தின் பல்வேறு துறைகள் வெளியிடும் முக்கியமான அரசாங்க ஆணைகள் "கிராமநலம்" மாத இதழில், தமிழில் வெளியிடப்படுகின்றன என்பது இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்டப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டக் கலெக்டர் இதுவிஷயத்தை மேற்கு தஞ்சாவூர் மாவட்ட அபிவிருத்தி மன்றத்திற்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்.

(கிராமநல—தல நிர்வாகத் துறையின் 9-3-62 தேதியிட்ட அறிக்கை எண் 12598.)

—

கிராம அதிகாரிகளுக்கு பஞ்சாயத்து வரி வசூலுக்காக போனஸ் வழங்கும் யோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை

[Panchayat Development—Village Officers—Collection work—Payment of bonus to Village Headman—Proposal Negatived.]

(G.O. No. 593, R. D. & L. A., dated 26-3-62.)

பஞ்சாயத்துக்களின் வரி வசூலிப்போருக்கு, கேட்புத் தொகையில் குறிப்பிட்ட சதவீத வசூலுக்குகாகசில வீதாச்சாரங்களில் போனஸ் வழங்க அரசாங்கம் அனுமதித்துள்ளது. (தலநிர்வாகத்துறையின் 22-8-51 தேதியிட்ட அரசாங்க ஆணை 1652-ஐக் காண்க.) கிராமநலத் துறையின் 9-8-60 தேதியிட்ட ஆணை 644-ல் கூறியுள்ளபடி கிராமப் பஞ்சாயத்துக்களில் தற்போது வரிவசூலிக்கும் பொறுப்பில் உள்ள கிராம மணியக்காரர்களுக்கு இது போன்றதொரு போனஸ் வழங்கலாம் என்று திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் யோசனை கூறியுள்ளார். மேலும் அவர், இவ்வாறு போனஸ் வழங்குவது இப்பொழுது இருக்கும மோசமான நிலைமையைமாறி, பஞ்சாயத்து வரிபாக்கிகளை வசூலிப்பதற்கு தூண்டுவதாகவும், உற்சாகமளிப்பதாகவும் இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

2. திருநெல்வேலி மாவட்டக் கலெக்டரின் யோசனையை அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்தது. பஞ்சாயத்து வரி வசூல் வேலை கிராம அதிகாரிகளின் கடமையைச் சேர்ந்ததென்றும், இப்போதைய அமைப்பில், போனஸ் வழங்க வேண்டிய நிலை இல்லை என்றும் அரசாங்கம் ஆணையிடுகிறது.

(கிராமநல—தலநிர்வாகத்துறையின் 26-3-62 தேதியிட்ட அரசாங்க ஆணை 593.)

— —

<u>குடும்பக்கட்டுப்பாடு</u>: அறுவை சிகிச்சை முறையைப் பரப்பத் தீவிரத் திட்டம் இத்திட்டத்தை முதல் நிலை சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தல்

[Family Planning—Intensive Scheme for the Papularisation of surgical method—Extension of the scheme to the Primary Health Centres—Orders passed].

(G.O. Ms. No. 316 Health, E. & P. H. Department, dated 3—2—62.)

இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள முதல் நிலைச் சுகாதார நிலையங்களை, ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அறுவைச் சிகிச்சை நிலையங்களுடன், அறுவைச் சிகிச்சை முறையைப் பரப்பும் தீவிரத் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சை நிலையங்களாகக் கருதப்பட, மருத்துவப்பணி இயக்குநர் கூறியுள்ள கருத்தை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது.

2. முதல் நிலை சுகாதார நிலையத்தைக் கவனித்துக் கொள்ளும் ஒவ்வொரு மருத்துவ அதிகாரிக்கும், இந்த நிலையங்களில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்பவர்களுக்கு நஷ்ட ஈட்டுப்படி அளிப்பதற்காக என்று ஒரு தனியான நிரந்தர முன் பணம் 500 ரூபாய் (ஐந்நூறு ரூபாய் மட்டும்) அளிக்கவும், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு நஷ்ட ஈட்டு மானியம் அளிக்கவும் அரசாங்கம் அனுமதிக்கிறது.

3. இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள முதல் நிலை சுகாதார நிலையத் தலைவர்களுக்கு இத்தொகையைக் கொடுக்குமாறு தலைமைக் கணக்கு அதிகாரி (Accountant General) கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. சுகாதாரத் துறையின் 17—8—60 தேதியிட்ட அரசாங்க ஆணை 2101–ல், பஞ்சாயத்துக்களுக்கும், அறுவை சிகிச்சை செய்து கொள்வோருக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள நஷ்ட ஈடுப்படி மேலே பாரா 1–ல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் நிலை சுகாதார நிலையங்களைக் கவனித்துக்கொள்ளும் மருத்துவ அதிகாரிகளின் மூலம் வழங்கப்படும். இந்த நஷ்ட ஈட்டுப்படி, அறுவை சிகிச்சை செய்த மருத்துவரின் (Surgeon) சான்றிதழின் அடிப்படையில், அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட உடனே வழங்கப்படவேண்டும். இந்தக் கணக்கை சம்பந்தப்பட்ட நிலையங்களின் பொதுவான பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களுடன் கலக்காமல் தனியாகத் தயாரித்து வைக்கவேண்டும். மொத்த முன்பணமும் தீர்ந்துவிடும் வரையில் காத்திராமல், பணம் வழங்கப்பட்ட உடனே 2-வது பாராவில் அனுமதிக்கப்பட்டுள்ள தனியான முன்பணம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

5. பணத்தைப் பெறும்போது, "S. III—காப்புத் தொகை முன்பணம் முதலியன—(முன்பணம் வட்டியைப் பெறுது—நிரந்தர முன் பணம்—மாநிலம் S. A. 27. A." என்ற தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்.

6. இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள முதல் நிலை சுகாதார நிலையங்களின் பொறுப்பேற்றுள்ள மருத்துவ அதிகாரிகள், நிரந்தர முன்பணம் வாங்கிய தேதியிலிருந்து, மூன்று மாதத்துக்கு தேதிவாரியாக ஆன செலவு விவரங்களைக் காட்டும் அறிக்கை ஒன்றைத் தயாரித்து மருத்துவப் பணி இயக்குநர் மூலம் சென்னை, தலைமைக் கணக்கு அதிகாரிக்கு (Accountant General, Madras) அனுப்பி வைக்கவேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் அந்தக் கணக்கு, தலைமைக் கணக்கு அதிகாரி சரி பார்ப்பதற்கு அனுப்பப்படுவதாகும். தமிழ்நாடு பொருளாதாரச் சட்டம், பாகம் I, விதி 98ல் கூறியுள்ளபடி, தலைமைக் கணக்கு அதிகாரிக்கு, மருத்துவ அதிகாரிகள், நிரந்தர முன் பணம் பெற்றதற்கான ஒப்புதலை அனுப்பிவைக்கவேண்டும்.

7. நிரந்தர முன்பணம் தேவையில்லாதபோது, அல்லது, அந்தத் தொகையை குறைக்கப்படும்பொழுது, தேவையற்ற அந்தத் தொகையை, அதிலிருந்து செலவு செய்துவிட்ட தொகையை முறைப்படி கணக்கு வைத்தபின் முழுத் தொகையும் கஜானாவில் பற்று வைக்கப்படவேண்டும். அந்தப் பணம் திருப்பிச் செலுத்தும்போது, "S. III—காப்புத் தொகை, முன் பணம் முதலியன—நிரந்தர முன் பணம்—மாநிலம் S. A. 27 A." என்ற தலைப்பில் பற்று வைக்கவேண்டும். அவ்வாறு திருப்பிச் செலுத்தியதை ஒரு தனிக் கடிதத்தின் மூலம் தலைமைக் கணக்கு அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு பொருளாதாரச் சட்டம், பாகம் I, விதிகள் 45, 50, 94, 95, 96, 97, 98, 106, 107 (a), 114 (a)—பின்பற்றப்பட வேண்டும்.

இணைப்பு

அறுவைச் சிகிச்சை முறையைப் பரப்பும் தீவிரத் திட்டத்தின்கீழ் அறுவைச் சிகிச்சை நிலையங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ள முதல் நிலை சுகாதார நிலையங்களின் பட்டியல்:

வடார்க்காடு மாவட்டம்

1. கீழ்பென்னாத்தூர்.
2. வேட்டவலம்.
3. நார்த்தாம்பூண்டி.
4. மங்கலம்.
5. வடுகன்தாங்கல்.
6. களம்பூர்.
7. கொம்மாந்தல்.
8. லாலாபேட்டை.
9. எஸ். வி. நகரம்.
10. கடலாடி

தென்னார்க்காடு மாவட்டம்

1. வடலூர்.
2. வளத்தி.
3. சத்தியமங்கலம்.
4. திருநாவலூர்.
5. மருங்கூர்.

செங்கற்பட்டு மாவட்டம்

1. ஊத்துக்கோட்டை
2. மதுரமங்கலம்.
3. ஆவடி.
4. திருக்கழுக்குன்றம்.
5. ஜமீன் எண்டத்தூர்.
6. உத்திரமேரூர்.
7. வெள்ளியூர்.
8. பேரம்பாக்கம்.
9. மீஞ்சூர்.
10. பூனிமாங்காடு.

சேலம் மாவட்டம்

1. மல்லியக்கோரை.
2. பாரூர்.
3. பருகூர்.
4. குளத்தூர்.
5. மேகலசின்னம்பல்லி.
6. பாகலூர்.
7. துரிஞ்சிப்பாடி.
8. கங்கவல்லி.
9. நாமகிரிப்பேட்டை.

கோயமுத்தூர் மாவட்டம்

1. பெருந்துறை.
2. சிவகிரி.
3. குன்னத்தூர்.
4. கணபதிபாளையம்.
5. சித்தோடு.
6. மாதூர்.
7. தூக்கநாய்க்கன்பாளையம்.
8. புஞ்சைக்கொளநல்லி.
9. காசிபாளையம்.
10. சென்னிமலை.
11. அவனாசி.
12. தாயம்பாளையம்.
13. பெரியநாய்க்கன்பாளையம்.
14. வடுகபாளையம்.
15. தாளவாடி.
16. சந்திரபுரம்.
17. வெள்ளக்கோயில்.
18. உக்கரம்.
19. மொடக்குறிச்சி.
20. கவுந்தபாடி.

நீலகிரி மாவட்டம்

1. டி. ஓரநல்லி.
2. பண்டலூர்.
3. நெடுகுலா.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

1. டி. புத்தூர்.
2. திருவரங்குளம்.
3. உப்பிடமங்கலம்.
4. திருமானூர்.
5. தொட்டியம்.
6. வழிகண்டபுரம்.
7. புதூர் உத்தமனூர்.
8. சின்னதாராபுரம்.
9. இனுங்கூர்.

தஞ்சாவூர் மாவட்டம்

1. கபிஸ்தலம்.
2. கோனேரி ராயபுரம்.
3. கொனுலம்பள்ளம்.
4. முருக்கங்குடி.
5. ஆலங்குடி.
6. ஆக்கூர்.
7. திருவீழிமிழலை.
8. செங்கந்தி இடையூர்.
9. ஆலத்தம்பாடி.
10. நல்லூர்.
11. வேதாரணியம்.
12. திருவெங்காடு.
13. காளி.
14. தேவூர்.

மதுரை மாவட்டம்

1. கல்லேந்திரி.
2. வெள்ளலூர்.
3. சின்னாளப்பட்டி.
4. செக்கனூரணி.
5. தாடிக்கொம்பு.
6. வாடிப்பட்டி.
7. எழுமலை.
8. டொம்முச்சேரி.
9. நத்தம்.
10. திருப்பரங்குன்றம்.
11. அலங்காநல்லூர்.
12. ஆத்தூர்.
13. பாப்பான்பட்டி.

இராமநாதபுரம் மாவட்டம்

1. கீழராஜகுலராமன்.
2. பேரையூர்.
3. பிரான்மலை.
4. திருவேகம்பேட்டை.
5. காளையார்கோயில்.

6. பார்த்திபனூர்.
7. கள்ளமநாய்க்கன்பட்டி.
8. உப்பரத்தூர்.
9. பாண்டுகுடி.
10. குண்ணூர்.
11. செம்பானூர்.

திருநெல்வேலி மாவட்டம்

1. இளைரால்.
2. வடக்கன்குளம்.
3. குருவிக்குளம்.
4. பத்தமடை.
5. திவியன்வில்லை.
6. வாசுதேவநல்லூர்.
7. புதுக்கோட்டை.
8. செந்தாமரம்.

கன்னியாகுமரி மாவட்டம்

1. அருதேசம்.
2. அகஸ்தீஸ்வரம்.
3. ராஜக்கமங்கலம் துறை.
4. காரிங்கல்.
5. எடைக்கோடு.

(கல்வி-பொது சுகாதாரத் துறையின் 3—2—'62 தேதியிட்ட அரசாங்க ஆணை 316.)

குடும்பக் கட்டுப்பாடு: அறுவை சிகிச்சை முறையைப் பரப்பத் தீவிரத் திட்டம்—இத் திட்டத்தை முதல் நிலை சுகாதார நிலையங்களுக்கு விரிவு படுத்துதல்—ஆணை திருத்தம்.

[Family Planning—Intensive Scheme for the Popularisation of Surgical method—Extension of the scheme to the Primary Health Centres—Modification of orders]

(Memorandum No.20111, Health, E. & PH., dated 13-3-62.)

கல்வி-பொது சுகாதாரத்துறையின் 3–2–62 தேதியிட்ட அரசாங்க ஆணை 316 ன் 3வது பாராவில், அந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள முதல் நிலை சுகாதார நிலையங்களைக் கவனித்துக்கொள்ளும் மருத்துவ அதிகாரிகளுக்குக் கிடைக்கின்ற வகையில் நிரந்தர முன் பணமாக 500 ரூபாயை வைத்திருக்குமாறு தலைமை கணக்கு அதிகாரி (Accountant General, Madras) கேட்டுக், கொள்ளப் பட்டிருக்கிறார். தமிழ்நாடு கஜானச்சட்டம், பாகம் I,விதி 16-ல் எஸ். ஆர். 18-(எ)வின் கீழ் பட்டியலுடன் அனுப்பப்பட்டுள்ள முன் பண அனுமதி உத்தரவுகளை ஆதாரமாகக் கொண்டு தலைமைக் கணக்கு அதிகாரியின் சிறப்பு அதிகாரம் ஒன்றும் இல்லாமலேயே கஜானா, முன் பணத்தை வழங்கலாம். ஆகவே, மேற் குறித்த ஆணையின் 3-வது பாரா நீக்கப்பட அரசாங்கம் ஆணையிடுகிறது.

2. மேற்படி ஆணையின் 6-வதுபாராவில், முதல் நிலை சுகாதார நிலையங்களைக் கவனித்துக்கொள்ளும் மருத்துவ அதிகாரிகள், முன்பணம் பெற்ற தேதியில் இருந்து மூன்று மாதகாலத்துக்கு ஆன செலவுக்கு தேதிவாரி விவரம் அடங்கிய செலவு அறிக்கையைத் தயாரித்து மருத்துவப்பணி இயக்குநர் மூலமாக தலைமைக் கணக்கு அதிகாரிக்கு அனுப்பும்படிக் கேட்கப்படிருக்கிறார்கள். அந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள முதல்நிலை சுகாதார நிலையங்களைக் கவனித்துக்கொள்ளும் மருத்துவ அதிகாரிகள், செலவறிக்கை தயாரித்து, சம்பந்தப்பட்ட மாவட்ட மருத்துவ அதிகாரிகளுக்கும், மாவட்ட மருத்துவ அதிகாரிகள், சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் வாங்கப் பட்ட நிரந்தர முன்பணங்களின் செலவறிக்கைகளைத் தொகுத்து—ஒரு தொகுப்பறிக்கை தயாரித்து தலைமைக் கணக்கு அதிகாரிக்கு அனுப்ப வேண்டும் என்றும், மேற்படி முறையைத் திருத்தி அரசாங்கம் ஆணையிடுகிறது. மருத்துவப்பணி இயக்குநர், தலைமைக்கணக்கு அதிகாரிக்கு ஒரு தொகுப்பு ஒப்புதலை (Acknowledgement) அனுப்பி வைப்பார்.

3. முதல் நிலை சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவ அதிகாரிகளுக்கு உடனடி விளக்கங்களை அளிக்கும் படியும், அவர்கள் முன் பணத்தைக் காலதாமதமின்றிப் பெறவேண்டும் என்றும் அறிவிக்கும்படியும் மருத்துவப் பணி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கல்வி, பொது சுகாதாரத் துறையின் 13–3–62 தேதியிட்ட அறிக்கை எண். 20111)

ஆரம்பக் கல்வி: ஏழை மாணவர்க்கு பள்ளி உணவு வழங்கத் திட்டம்--பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்தும் பஞ்சாயத்துக்களிடமிருந்தும் நன்கொடை

[Elementary Education—Scheme for the Supply of school meals to poor pupils-Contribution from Panchayat Unions and Panchayats—Orders passed]

(Go. Ms. No. 905, Education, E. and PH., dated 24th April 1962.)

கல்வித்துறையின் 18-1-62 தேதியிட்ட அரசாங்க ஆணை 126-ல் மத்திய உணவுக் குழுக்களைத் திருத்தி அமைக்கவும் மத்திய உணவுத்திட்டத்தின் பிரதேச பங்குத் தொகையாக பஞ்சாயத்துக்கள் நன்கொடை அளிக்கவும்– ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

மத்திய உணவுத் திட்டத்துக்கு ஒரு மாணவனுக்கு 2 நயா பைசா வீதம் நன்கொடை அளித்த பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் மட்டுமே சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட எல்லா மத்திய உணவு நிலையங்களின் (Midday Meal Centres) பொதுக்குழுக்கள், நிர்வாகக் குழுக்களின் (Executive Commitees) தலைவர்களாக இருக்கவேண்டும் என்று கல்வித்துறை இயக்குநர் உய்த்துணர்ந்திருக்கிறார். ஆனால் அது அவ்வாறன்று. பஞ்சாயத்துக்களின் எல்லையில் உள்ள பள்ளிகளில் மத்திய உணவுத் திட்டத்தைப் பஞ்சாயத்துடன் கலந்து நிறைவேற்றுகின்ற விஷயத்திற்கு அரசாங்கம் ஓரளவு முக்கியத்துவத்தை அளிக்கிறது. இது விஷயத்தில் ஏற்பட்டுள்ள ஐயங்களைக் குறித்தும், கல்வித்துறையின் 18–1–62 தேதியிட்ட அரசாங்க ஆணை 126-ஐ விளக்குகின்ற முறையிலும், ஒவ்வொரு பஞ்சாயத்து தலைவரும், அந்தப் பஞ்சாயத்து எல்லையில் உள்ள எல்லா மத்திய உணவு நிலையங்களின் பொதுக்குழு, நிர்வாகக் குழுத் தலைவர்களாக இருக்கவேண்டும் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது. 18–1–62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 126-ல் ஆணையிட்டபடி, ஒரு குழந்தைக்கு, ஒரு உணவுக்கு 2 ந. பை. வீதம் தம் வருவாயிலிருந்து நன்கொடையாகக் கொடுக்க முடியாத பொருளாதார நிலையில் பஞ்சாயத்துக்கள் இல்லை என்ற போதிலும் மத்திய உணவு திட்டத்திற்கென்று ஓரளவுத் தொகையை பஞ்சாயத்துக்கள் நன் கொடையாக வழங்க வேண்டியது ஒவ்வொரு பஞ்சாயத்தின் கடமை என்று அரசாங்கம் கருதுகிறது.

2. மேலும், மத்திய உணவுத்திட்டங்கள் நடைபெற்று வரும் கிராமச் சமுதாயத்தின் முக்கிய பகுதியினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கின்ற நோக்கத்துடன், ஒரே ஒரு அரிஜன உறுப்பினர் உள்ள விஷயத்தில் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் அரிஜன உறுப்பினர் (ஒரு அரிஜன உறுப்பினருக்கு மேல் உள்ள பஞ்சாயத்தின் பஞ்சாயத்தினால் நியமிக்கப்படும் அரிஜன உறுப்பினர்) பஞ்சாயத்து எல்லைக்குள் அமைந்த எல்லா மத்திய உணவு நிலையங்களின் பொது குழுவிலும் உறுப்பினராக விளங்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிடுகிறது.

3. இந்த ஆணைகள் நிறை வேற்றப்படும் பொழுது பள்ளி உணவுத்திட்டத்தில் உள்ளூர் மக்களின் ஈடுபாடு முழு அளவுக்கு இருக்கும் என்று அரசாங்கம் நம்புகிறது. மேலும், குழுவில் இடம் பெற்றுள்ள பஞ்சாயத்து பிரதிநிதிகள் மதிய உணவுத் திட்ட நிர்வாகத்திலும், அதற்காக உள்ளூர் பொது மக்களிடமிருந்து நன்கொடை திரட்டுவதிலும் ஆர்வம் காட்டுவார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது.

4. மதிய உணவுக் குழுக்களில் வேலைகளுடன் பஞ்சாயத்துப் பிரதிநிதிகளின் தொடர்பு இருந்த போதிலும், இந்தக் குழு பஞ்சாயத்து மன்றங்கள் அல்லது அவற்றின் துணைக் குழுக்கள் ஆகியவற்றின் சார்பின்றித் தனித்து இயங்க வேண்டும் என்பதை, இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவு படுத்த அரசாங்கம் விரும்புகிறது. மதிய வுணவு நிலையங்களின் கணக்குகளும், பஞ்சாயத்துக் கணக்குகளில் சேர்க்காமல் தனியே வைத்திருக்கவேண்டும்.

5. இந்த ஆணைகளைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்படி கல்வித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கல்வி, பொது சுகாதாரத் துறையின் 24–4–62 தேதியிட்ட அரசாங்க ஆணை 905).

கிராம வேலைகள் மானியம்—பாதைகளுக்குத் தார் போடுதல்—அனுமதிக்கப்படமாட்டாது

(Village Works Grant—Black topping of roads—Not permitted)

(Memorandum No. 159793, R. D. & L. A., dated 31—10—1961).

திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் தம்முடைய 1961ம் வருடம் ஆகஸ்ட் 23-ம் தேதிய கடிதத்தில் (எண் டி. 5/26361) கிராமவேலைகள் மானியத்தின் கீழ் பாதைகளுக்குத் தார் போடலாமா (Black topping of roads) என்று விசாரித்திருக்கிறார். தலைமை எஞ்சினியர் (நெடுஞ்சாலைகள் & கிராம வேலைகள்) தம்முடைய 1961 அக்டோபர் 7-ம் தேதிய கடிதத்தில் (எண். 49873) பஞ்சாயத்துப் பாதைகளைத் தவிர, ஏனைய பாதைகள் தார் போட அனுமதிக்கப்படலாம் என்று சிபாரிசு செய்துள்ளார்.

2. இந்தப் பிரச்சினையை அரசாங்கம் ஆராய்ந்து பார்த்தது. இப்பொழுது இருக்கின்ற வசதிகள் குறைவாக இருப்பதாலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் இணைப்புப் பாதைகளைப் போடுவதும் பருகுநீர், வசதிகளைச் செய்வதும் உடனடியான தேவைகளாக இருப்பதாலும், தலைமை எஞ்சினியர் (நெடுஞ்சாலைகள் & கிராம வேலைகள்), சென்னை தவிர ஏனைய மாவட்டக் கலெக்டர்கள், கிராம வேலைகள் திட்டத்தை நிறைவேற்றுதல் சம்பந்தப்பட்ட ஏனைய எல்லா அதிகாரிகள் ஆகிய எல்லோருக்கும் அரசாங்கம், இப்பொழுது பாதைகளுக்குத் தார் போடுகின்ற வேலையை கிராம வேலைகள் மானியத்தில் செய்ய முடியாது என்று இதன் மூலம் தெரிவிக்கிறது.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 31—10—1961 தேதியிட்ட அறிக்கை எண் 159793).

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள்—கூட்ட அறிக்கை, நிகழ்ச்சி நிரல் பிரதிகளைப் பத்திரிகைகளுக்கு வழங்குதல்

[Panchayat Union Councils—Agenda—Copies of meeting Notice and Agenda—Furnishing to the Press—Instructions issued.]

[G. O. Ms. No. 587, R.D. & L.A., dated 14th March 1962.]

பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கூட்ட அறிக்கை, நிகழ்ச்சி நிரலின் பிரதிகள் அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள பத்திரிகைக்காரர்களுக்கு, பத்திரிகையில் வெளியிடுதவற்காக கொடுக்கப்பட வேண்டும் என்றும், அப்படிச் செய்தால், யூனியன் நடவடிக்கைகளை பொது மக்கள் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும் என்றும் அரசாங்கத்திற்கு யோசனை சொல்லப்பட்டுள்ளது.

2. நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு நகராட்சி மன்றக் கூட்டங்களின் நிகழ்ச்சிகளின் பிரதிகளைக் கொடுக்க வேண்டுமென்று முன்பே அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதே மாதிரியே, பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கூட்ட அறிக்கை, நிகழ்ச்சி நிரல் பிரதிகளை அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு வழங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கிறது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 14—3—62 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 587.)

மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களுக்கு விவசாய மானியம்—முன்பணம் அளிக்க அங்கீகாரம்

(Advance—Agricultural Grant—Third Batch of Panchayat Unions—Rs. 10,000—each—Payment—Sanctioned)

[G.O. Ms., No., 102., R. D. and L. A., dated 9th January, 1962.]

கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-யில், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்கு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும், 2 லட்சம் ரூபாய் விவசாய மானியமாக அளிக்கப்படும் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையின் 11-வது பாராவில், பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துகளும் விவசாயத் திட்டத்தை நிறைவேற்றும் செலவுகளுக்கென்று, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 10,000 ரூபாய் முன்பண மானியமாக அளிக்க இருக்கிறது என்று குறிக்கப்பட்டுள்ளது. கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2606, முதல் தொகுதி, இரண்டாவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஷை திட்டத்திற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் 10,000 ரூபாய் முன்பணம் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அத்தகைய முன்பணம் வழங்க இப்பொழுது அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அதன்படி, இந்த ஆணையின் இணைப்பு I, II-ல் கூறப்பட்டுள்ள மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றுக்கும் 10,000 ரூபாய் வழங்க அனுமதிக்கிறது. இந்த மானியத்தின் பாதித் தொகை (5,000 ரூபாய்) ஈட்டு மானியத்தின்கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும். (கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை 2460-ன் இணைப்பு I-ல் 1-வது பிரிவைக் காண்க). மற்றப் பாதித் தொகை ஈட்டு மானியமல்லாத மானியங்களின் கீழ் நடைபெறும் திட்டங்களுக்கு என்று இருப்பதாகும்.

2. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனரால் **பலவகைப் பட்டியலில்** (Miscellaneous Bill) இந்தத் தொகையைக் கேட்டு பஞ்சாயத்து யூனியன் கணக்கில் சரிக்கட்டப்பட்டு ரசீது எண், கஜானாவின் பெயர், சரிக்கட்டப்பட்ட தேதி முதலான விவரங்களுடன் இது விஷயம் அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும். இணைப்பு I-ல் (முதல் நிலை, இரண்டாவது நிலை வட்டாரங்கள்) குறிக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் விஷயத்தில் "47-A. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய வளர்ச்சிப் பணி, தல அபிவிருத்தி வேலைகள்—b. அபிவிருத்தித் திட்டங்கள்—மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வேலைகள்—சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்—II. விவசாயத் திட்டத்திற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு கால்நடைப் பாதுகாப்பு விவசாய வளர்ச்சி உதவி மானியங்கள்" என்ற கணக்குத் தலைப்பில் செலவுகளைப் பற்று வைக்க வேண்டும். இணைப்பு II-ல் (Pre-extension and Shadow Blocks) கூறப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் விஷயத்தில் இது சம்பந்தமான செலவு "40. விவசாயம்" என்ற தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும். தலைமைக் கணக்கு அதிகாரி (Accountant General, Madras) பஞ்சாயத்து யூனியன்களுக்கு இந்தத் தொகையை உடனே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. முன்பணம், மூன்று மாதத்திற்கொருமுறை மாவட்ட விவசாய அதிகாரியிடம் கமிஷனரால் கேட்கப்படும் உதவி மானியங்களின்கீழ் சரிக்கட்டப்படும். 10,000 ரூபாயும் பயன்படுத்தப்பட்டு, பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களால் கணக்கு வைக்கப்பட்டு, செலவு விவரங்கள் மாவட்ட விவசாய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படும். கமிஷனர்களால் அனுப்பி வைக்கப்பட்ட அந்த செலவு **விவரங்களின் அடிப்படையில் மாவட்ட விவசாய அதிகாரி இந்தத் தொகைகளைச் சரிக்கட்டுவார்.**

இணைப்பு I

மூன்றுவது தொகுதியைச் சேர்ந்த முதல் நிலை, இரண்டாவது நிலை வட்டாரங்கள் :

வடார்க்காடு மாவட்டம்—

1. கந்திலி.
2. பேர்ணும்பட்டு.
3. மாதனூர்.
4. அரக்கோணம்.
5. கீழ் பென்னுத்தூர்.
6. செங்கம்.

தென்னுர்க்காடு மாவட்டம்—

7. திருவெண்ணெய்நல்லூர்.
8. முகையூர்.
9. வானூர்.
10. ஒலக்கூர்.

செங்கற்பட்டு மாவட்டம்—

11. அச்சரப்பாக்கம்.
12. இராமகிருஷ்ணராஜுபேட்டை.
13. பள்ளிப்பட்டு.

கோயமுத்தூர் மாவட்டம்—

14. தாளவாடி.
15. அன்னூர்.
16. சிங்காநல்லூர்.
17. பொள்ளாச்சி.

மதுரை மாவட்டம்—

18. தென்கரை.
19. கம்பம்.
20. மேலூர்-II.
21. நத்தம்.

இராமநாதபுரம் மாவட்டம்—

22. அருப்புக்கோட்டை.
23. நரிக்குடி.
24. சாக்கோட்டை.

சேலம் மாவட்டம்—

25. சூளகிரி.
26. நல்லம்பள்ளி.
27. நங்கவள்ளி.
28. வீரபாண்டி.
29. மோகனூர்.
30. கபிலமலை.
31. பள்ளிப்பாளையம்.
32. சங்கரி.

தஞ்சாவூர் மாவட்டம்—

33. திருவையாறு.
34. கொரடாச்சேரி.
35. வலங்கைமான்.
36. தலைஞாயிறு.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

37. வையம்பட்டி.
38. கடவூர்.
39. அரிமளம்.
40. தா. பழூர்.

திருநெல்வேலி மாவட்டம்—

41. கடயம்.
42. கீழப்பாவூர்.

இணைப்பு II

மூன்றுவது தொகுதியைச் சேர்ந்த வளர்ச்சி முன்நிலை, வரப்போகும் வட்டாரங்கள் :
(Pre-extension and Shadow Blocks) :

வடார்க்காடு மாவட்டம்—

1. வாணியம்பாடி.
2. ஆலங்காயம்.
3. காட்பாடி.
4. குடியாத்தம்.
5. அணைக்கட்டு.
6. வேலூர்.
7. திமிரி.
8. புதுப்பாளையம்.
9. தண்டராம்பேட்டை.
10. திருவண்ணுமலை.
11. கஸ்தாம்பாடி.
12. வந்தவாசி.
13. தெள்ளார்.
14. அனக்காவூர்.

தென்னுர்க்காடு மாவட்டம்—

15. வல்லம்.
16. திருக்கோயிலூர்.
17. மயிலம்.
18. கண்டமங்கலம்.
19. விக்கிரவாண்டி.
20. கடலூர்.
21. நெல்லிக்குப்பம்.
22. கொமராட்சி.
23. காட்டுமன்னுர்கோயில்.
24. விருத்தாசலம்.
25. கம்மாபுரம்.
26. ரிஷிவந்தியம்.
27. சங்கரபுரம்.

செங்கற்பட்டு மாவட்டம்—

28. திருவொற்றியூர்.
29. வாலாஜாபாத்.
30. திருபோரூர்.
31. சித்தாமூர்.
32. லத்தூர்.
33. சோழவரம்.
34. திருத்தணிகை.
35. திருவாலங்காடு.

கோயமுத்தூர் மாவட்டம்—

36. பெருந்துறை-II.
37. ஊத்துக்குளி.
38. நம்பியூர்.
39. அந்தியூர்.
40 காரமடை.
41. பேரூர்.
42. சர்க்கார் சாமக்குளம்.
43. மதுக்கரை.
44. குடிமங்கலம்.
45. மாடத்துக்குளம்.
46. ஆனைமலை.

மதுரை மாவட்டம்—

47. தேனி.
48. சின்னமனூர்.
49. உத்தமபாளையம்.
50. சாணார்ப்பட்டி.
51. வடமதுரை.
52. பாளையம.
53. தொப்பம்பட்டி.
54. ஒட்டன்சத்திரம்.

இராமநாதபுரம் மாவட்டம்—

55. திருச்சுழி.
56. இளையான்குடி.
57. திருபபுவனம்.
58. சிவகெங்கை.
59. திருப்பத்தூர்.
60. திருப்புல்லணி.

சேலம் மாவட்ட ம்—

61. கெலமங்கலம்.
62. தளி.
63. பாலக்கோடு.
64. அரூர்.
65. ஓமலூர்.
66. தாபமங்கலம்.
67. கடயம்பட்டி.
68. காரிப்பட்டி.
69. சேலம்.
70. ஏர்க்காடு.
71. பனைமரத்துப்பட்டி.
72. இராசிபுரம.
73. வெண்ணந்தூர்.
74. புதுச்சத்திரம்.
75. எருமைப்பட்டி.
76. நாமக்கல்.
77. கொல்லிமலை.
78. மல்லசமுத்திரம்.
79. எலச்சிபாளையம்.
80. மதடஞ்சாவடி.
81. கொங்கணபுரம்.

தஞ்சாவூர் மாவட்டம்—

82. தஞ்சாவூர்.
83. திருவோணம்.
84. மதுக்கூர்.
85. பேராவூரணி.
86. அறந்தாங்கி.
87. திருமருகல்.
88. நன்னிலம்.
89. திருவாரூர்.
90. மன்னார்குடி.
91. நீடாமங்கலம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—

92. கரூர்.
93. கிருஷ்ணராயபுரம்.
94. மணப்பாறை.
95. மருங்காபுரி.
96. திருமயம்.
97. பொன்னமராவதி.
98. அன்னவாசல்.
99. விராலிமலை.
100. புல்லம்பாடி.
101. மணச்சநல்லூர்.
102. ஆலத்தூர்.
103. வரகூர்.
104. ஜெயங்கொண்டம்.
105. செந்துறை.
106. திருவரம்பூர்.
107. ஸ்ரீரங்கம்.

திருநெல்வேலி மாவட்டம்—

108. திருச்செந்தூர்.
109. ஆழ்வார்திருநகரி.
110. ஸ்ரீவைகுண்டம்.
111. கயத்தாறு.
112. விளாத்திகுளம்.
113. நாங்குனேரி.
114. களக்காடு.
115. அமபாசமுத்திரம்.
116. பாளையங்கோட்டை.
117. கடயநல்லூர்.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 102)

1961-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் (மாற்றப்பட்ட பிரதேசங்களுக்கு விரிவுபடுத்தல்) பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (முதல் அமைப்பு முறைக்கு விசேஷ வகை செய்தல்) திருத்தச் சட்டம்—குறிப்பிட்ட பஞ்சாயத்துக்கள் அறிவிக்கப்படுகின்றன.

[Act—Madras Act 17 of 1960 as amended by Madras Panchayats (Extension to transferred Territory) and Panchayat Union Councils (Special provisions for first Constitution) Amendment Act, 1961—Specified Panchayats—Notified.]

(Appendix to the G.O. Ms. No. 685, R.D. and L.A., dated 21-3-62)

இணைப்பு

விளம்பரம்

1960 ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் (முதல் அமைப்பு முறைக்கு விசேஷ வகைசெய்தல்) சட்டம் (1960ம் வருட சென்னைச் சட்டம் 17) 3 வது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாடு கவர்னர் அவர்கள், அடியிற்கண்ட அட்டவணையின் (2)வது பத்தியில் குறித்த பஞ்சாயத்து யூனியனில் உள்ள,(3)வது பத்தியில் குறித்த பஞ்சாயத்துக்களின் எல்லா உறுபினர்களும் (தலைவர்கள், துணைத்தலைவர்கள் உள்பட) அவற்றுக்கு எதிரில் (4)வது பத்தியில் குறிக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில் 1963 ம் ஆண்டு அக்டோபர் 2 ம் தேதி வரையில் உறுப்பினர்களாய் இருப்பார்கள் என்று ஆணைகளை இதனால் பிறப்பிக்கிறார்கள்.

அட்டவணை

வரிசை எண். (1)	பஞ்சாயத்து யூனியனின் பெயர். (2)	பஞ்சாயத்துக்களின் பெயர். (3)	பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பெயர். (4)
		I கன்னியாகுமரி மாவட்டம்	
1	அகஸ்தீஸ்வரம்	1. கன்னியாகுமரி	அகஸ்தீஸ்வரம்.
		2. அகஸ்தீஸ்வரம்	
		3. அழகப்பா புரம்	
		4. மருங்கூர்	
		5. தாமரைக்குளம்	
		6. சுசீந்திரம்	
2	ராஜாக்கமங்கலம்	1. புத்தளம்.	ராஜாக்கமங்கலம்.
		2. ராஜாக்கமங்கலம்	
		3. நீண்டகரை--வடசேரி	
		4. தெங்கம்புதூர்	
		5. தர்மபுரம்	
3	மஞ்சிரா	1. கொல்லங்கோடு	மஞ்சிரா.
		2. எழுதேசம்	
		3. ஆறுதேசம்	
		4. மெதுக்கும்மல்	
		5. பைங்குளம்	
		6. குன்னத்தூர்.	
4	கிள்ளியூர்	1. கீழக்குளம்	கிள்ளியூர்.
		2. கிள்ளியூர்	
		3. மிடாலம்	
		4. கீழ்மிடாலம்	
		5. நட்டாலம்.	
5	மேல்புரம்	1. விலவங்கோடு	மேல்புரம்.
		2. பாகோடு	
		3. அருமனை	
		4. பளுகல்	
		5. இடைக்கோடு.	

வரிசை எண்.	பஞ்சாயத்து யூனியனின் பெயர்.	பஞ்சாயத்துக்களின் பெயர்.	பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் பெயர்.
(1)	(2)	(3)	(4)
		கன்னியாகுமரி மாவட்டம்—தொடர்ச்சி.	
6	தல்லாகுளம்	1. குளச்சல்	தல்லாகுளம்.
		2. மணவாளக்குறிச்சி	
		3. கடியப்பட்டணம்	
		4. தல்லாகுளம்	
		5. வில்லுக்குறி.	
7	தோவாளை	1. அழகிய பாண்டியபுரம்	தோவாளை.
		2. பூதப் பாண்டி	
		3. தாழக்குடி	
		4. தோவளை	
		5. ஆரல்வாய்மொழி.	
8	தக்காலி	1. இரணியல்	தக்காலி
		2. திருவிதாங்கோடு	
		3. வாளவச்சகோஷ்டம்	
		4. கோதநல்லூர்.	
9	திருவத்தாறு	1. ஆத்தூர்	திருவத்தாறு.
		2. திருவத்தாறு	
		3. மேக்கோடு	
		4. பொன்மான்-அருவிக்கரை	
		5. திருப்பரப்பு.	
		II திருநெல்வேலி மாவட்டம்	
10	செங்கோட்டை	1. அச்சன்புதூர்	செங்கோட்டை.
		2. சாம்பவர் வடகரை	
		3. கற்குறி	
		4. ஆயக்குடி	
		5. இலத்தூர்	
		6. புலிடறை.	
		III சேலம் மாவட்டம்	
11	ஏர்க்காடு	சேர்வராயன்	ஏர்க்காடு.

(கிராம நல—தல நிர்வாகத் துறையின் 21—3—1962 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 685.)

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டை வட்டாரம் ஆகியவற்றிடம் 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 66-வது பிரிவின்கீழ் சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப்பணித் திட்டத்தை ஒப்படைத்தல்—பொருளாதார, கணக்கு வைப்பு முறைகள் பற்றிய விளக்கம்.

[Panchayat Unions—Panchayat Unions in Kanyakumari District and Shencottah Block in Tirunelveli District—Entrustment of N.E.S. Scheme of C.D. under Section 66 of the Madras Panchayats Act, 1958—Instructions regarding financial and accounting Procedure—Issued.]

(G.O. Ms. No. 975, R.D. and L.A., dated 18-4-62.)

கிராம நல தல நிர்வாகத் துறையின் 21—3—1961 சளுக்கும், உடன்பாடுகளுக்கும் உட்பட்டு, மேற்குறித்தபடி தேதியிட்ட அரசாங்க ஆணை 838ல், சில கட்டுப்பாடு மூன்று தொகுதி பஞ்சாயத்து யூனியன்களிடமும் சமூ

தாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்ட நிறைவேற்றம் ஒப்படைக்கப்பட அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

I–தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்–1961-ம் வருஷம் எப்ரல் மாதம் 1-ம் தேதி.

II–தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்–1961-ம் வருஷம் ஜூலை மாதம் 1-ம் தேதி.

III–தொகுதி பஞ்சாயத்து யூனியன்கள்–1962-ம்ம் வருஷ ஜனவரி மாதம் 1-ம் தேதி.

2. கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மார்ச்சு 21ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 841ல் மேலே குறிப்பிட்ட தேதிகளில் ஒப்படைக்கப்பட்ட சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், ஒப்படைக்கப்படாத அபிவிருத்தித் திட்டங்கள்சம்பந்தமாகக் கைக்கொள்ள வேண்டிய பொருளாதார, கணக்கு வைப்பு நடைமுறைகள், விளக்கமாக கூறப்பட்டுள்ளன. மேலும், கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1961ம் ஆண்டு டிசம்பர் 30ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 3434ல் சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித்திட்டத்தை 1962ம் ஆண்டு ஜனவரி 1-ந்தேதியிலிருந்து ஒப்படைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுஉள்ளது. ஆனால், மூன்றுவது தொகுதி பஞ்சாயத்து யூனியன்களில், கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு மார்ச்சு 21ந் தேதியிட்ட அரசாங்க ஆணை 841-ல் முதன் முதலில் எதிர்ப்பார்க்கப்பட்டது போல 169 பஞ்சாயத்து யூனியன்களும் அடங்காது. ஏனெனில், கேரள மாநிலத்திலிருந்து மாற்றப்பட்ட பிரதேசங்களில், மாற்றங்களின் காரணமாகப் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்படவில்லை. இப்பொழுது கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962ம் ஆண்டு மார்ச்சு 21ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 685ல், மாற்றப்பட்ட பிரதேசங்களுக்கு சட்டத்தை விரிவுபடுத்தியும். 1961ம் வருஷத்திய, தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் திருத்தச் சட்டத்தின் முதல் அமைப்பு முறைக்கு விசேஷ வகை செய்தும் விளம்பரப் படுத்தப்பட்டது. மேலும் சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித்திட்டத்தை ஒப்படைத்து கிராம நல தல நிர்வாகத் துறையின் 1962ம் வருடம் எப்ரல் மாதம் 18ந்தேதிட்ட அரசாங்க ஆணை 973ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கிராம நல தல நிர்வாகத் துறையின் 1961ம் ஆண்டு மார்ச்சு 21ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 841, 2 முதல் 5 வரையுள்ள பாராக்களில் வெளியிடப்பட்டுள்ள விளக்கங்கள்—1962ம் ஆண்டு எப்ரல் 1ந்தேதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள, இவ்வாணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பொருந்தும் என்று மறுமுறையும் அரசாங்கம் எடுத்துக் கூறுகிறது. இந்த விளக்கங்கள், கிராம நல தல நிர்வாகத்துறையின் 1962ம் ஆண்டு மார்ச்சு 27ந்தேதியிட்ட அரசாங்க ஆணை 740ல் ஆணையிட்டுள்ளபடி பணியாளர் எண்ணிக்கையைப் பொறுத்த மாற்றத்துக்கு உட்பட்டு 1962ம் ஆண்டு எப்ரல் 1ந்தேதியிலிருந்து அமுலில் இருக்கும்.

இணைப்பு

கன்யாகுமரி மாவட்டம்

1. அகஸ்தீஸ்வரம்
2. ராஜாக்கமங்கலம்.
3. கிள்ளியூர்.
4. மஞ்சிரா.
5. மேல்புரம்.
6. தோவாளே.
7. தல்லாகுளம்.
8. தக்காலி.
9. திருவத்தாறு.

திருநெல்வேலி மாவட்டம்

1. செங்கோட்டை

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 1962-ம் வருடம், எப்ரல் மாதம் 18 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 975).

பஞ்சாயத்து அரசினர் இதழ்

(Panchayat Gazette)

ஜூன், 1962.

பொருளடக்கம்

ஆணை (அல்லது) அறிக்கை..வெளியிட்ட அரசாங்கத் துறை.	ஆணை (அல்லது) அறிக்கை எண்.	ஆணை (அல்லது அறிக்கை தேதி.	பக்கம்
கிராமநல–தல நிர்வாகத் துறை	ஆணை : 5	1—1—1912	i
,,	ஆணை : 455	26—2—1962	iii
,,	அறிக்கை : 12598	9—3—1962	vi
,,	ஆணை : 593	26—3—1962	vi
கல்வி–பொது சுகாதாரத் துறை	ஆணை : 316	3—2—1962	vii
,,	அறிக்கை : 20111	13—3—1962	ix
,,	ஆணை : 905	24—4—1962	x
கிராமநல–தல நிர்வாகத் துறை	அறிக்கை : 159793	31-10—1961	x
,,	ஆணை : 587	14—3—1962	xi
,,	ஆணை : 102	9—1—1962	xi
,,	ஆணை : 685	21—3—1962	xiv
,,	ஆணை : 975	18—4 1962	xv

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.



பன்னிரெண்டு வருடங்களுக்குமுன் அரசியல் சட்டம் உருவான சரித்திரப் பிரசித்திபெற்ற பார்லிமென்ட் மத்திய மண்டபத்தில் 13-5-62-ல், ஓய்வு பெறும் ஜனதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்கள் முன்னிலையில், டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், இந்தியாவின் புதிய ஜனதிபதியாக பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டார். பிரதம நீதிபதி ஸ்ரீ பி. பி. சின்ஹா பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

உதவி ஜனதிபதி

பாரதத்தின் புதிய உதவி ஜனதிபதி **டாக்டர் ஜாகிர் ஹுசென்,** மகாத்மா காந்தியின் வர்தா கல்வித் திட்டத்தின் மூலகர்த்தா; முன்னுள் பீகார் கவர்னர்; கல்வித்துறையில் ஆழ்ந்த அனுபவமும், பரந்த அறிவாற்றலும் உடையவர்.

Regd. No. M 7277

©
தமிழ்நாடு
அரசாங்கம்
1962

தாய் – சேய் நலம் – பஞ்சாயத்துக்களின் புதிய பொறுப்பு

பெண்கள் சமுதாயத்திற்கும், குழந்தைகளுக்கும் அநேக வசதிகள் ஏற்படுத்தவும், ஊட்ட சக்தி நிறைந்த உணவு கிடைக்கவும், புதிய பஞ்சாயத்து ஆட்சி திட்டமிட்டுச் செயல்படவேண்டும்.

Department, Government of Madras.